பக்கங்கள் 20

20/=

06

Registered as a Newspaper in Srilanka

எதிரொலி

Ethiroli

25-31 ஜூலை 2018

வாரஇதழ்

Raja Bojun

Sri Lankan Buffet

Liberty Arcade,
No 282, R.A.De Mel Mawatha Colombo 03.
Tel. 4 71 61 71 / 2577097-8 web : rajabojun.lk

> “புலிகள் என்ற சொல்லே சுமந்திரனுக்குப் பிடிக்காது. இதைப் பட்டியலிடப் போனால் தனியாகப் புத்தகமே போடலாம், இன்று வடக்கு மாகாண அமைச்சரவையில் புலி கள் சார்பாக இருக்கும் ஒரேயொருவர் அனந்தி மட்டுமே. அனந்தி அதிக வாக் குகள் பெற்று விடக் கூடாது என்பதற்காக தகிடுதத்தங்கள் செய்தோம் என்ற கருத் துப்பட ஏற்கனவே தமிழரசுக் கட்சிச் செய லர்,முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு ஒப்புதல் வாக்கு மூலம் வழங்கியுள்ளார்.”



■ அவதானி

தமிழரசுக்குள் பனிப்போர்

பிரதிச்சபாநாயகர் தெரிவின் போது சுதர்சனிக்கு வாக்களிக்குமாறு கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் கூட்டமைப்பு எம்.பிக்களுக்கு உத் தரவிட்டிருந்தார். ஆயினும் ரணிலையும், சுமந்தி ரனையும் பகைக்க விருப்பமில்லாத எம்.பிக்கள் வாக் களிப்பில் கலந்துகொள்ளாமல் வெளியேறினர். கொஞ்சக் காலமேனும் தீவிரவாத இளைஞராகத் தோற்றமளித்த மாவை மட்டுமே சம்பந்தனுடன் இருந்தார். நாய் வாலை ஆட்டலாம், ஆனால் இங்கே வாலே நாயை ஆட்டுகிறது என்பதை சம்பந்தனும் மாவையும் உணர்ந்து கொண்டனர். இறுதியில் இவர்கள் இருவரும் சபையில் இருந்து வெளி யேறவேண்டியேற்பட்டது. இல்லாவிட்டால் கூட்ட மைப்புக்குள் இருக்கும் பிளவு வெளியே வந்து சந்தி சிரித்திருக்கும். தமிழரின் தலைமை பிரபாகரன் கையில் இருந்திருந்தால் இப்படியெல்லாம் நடக்கத் துணிவு வந்திருக்குமா கூட்டமைப்பின் எம். பிக்க ளுக்கு? அனந்தி, சிவகரன் ஆகியோருக்கு மட்டுமல்ல அரை நூற்றாண்டுக்கு மேலாக தமிழரசுக் கட்சிக் காரராக விளங்கும் பேராசிரியர் சி.க.சிற்றம் பலத்துக்கே கடிதம் எழுதி எச்சரிக்கும் கட்சிச் செயலர் துரைராஜசிங்கத்துக்கு, எம்.பிக்களுக்கு ஒழுங்கு நடவடிக்கை எடுக்க கடிதம் எழுதப் பேனா கிடைக்க வில்லைப் போலும் . தவராசாவுக்குக் கொடுக்க ஒரு ரூபா வழங்கியது போல எம்.பிக்களுக்கு கடிதம் எழுத தமிழரசுக் கட்சிச் செயலருக்கு யாராவது பேனா வழங்கினால் நல்லது.

கூட்டமைப்புக்குச் சுமந்திரன் தலைவரல்ல, தானே தலைவர் என்பதை உணர்த்தத்தான், வடக்கு முதலமைச்சரின் புத்தக வெளியீட்டில் சம்பந்தன் கலந்துகொண்டார்.

“நீங்கள் உணர்த்துவது எங்களுக்கு விளங்க வில்லை. நாங்கள் ஏன்றுமே சுமந்திரனின் பக்த ‘கோடி’களே “என்று அவருக்கே பதில் சொல் வதுபோல சயந்தன், பரஞ்சோதி, அஸ்மின் போன் றோர் நடந்துகொள்கின்றனர். எப்படியோ ‘கோடி’ என்ற சொல் சமீபகாலமாக தமிழர் அரசியலில் அடிபட்டுக்கொண்டே இருக்கிறது. “எப்படி இருந்த கட்சி இப்படியாகிற்றே!” என்று விவேக் பாணியில் தான் புலம்ப வேண்டியுள்ளது.

வடக்கு முதலமைச்சரின் புத்தக வெளியீட்டில் சம்பந்தன் கலந்து கொண்டதைக்கூட மறைமுகமாகக் கிண்டலடிக்கிறார் வடக்கின் சபை முதல்வர் சி.வி. கே. “நீங்களும் புத்தகம் வெளியிடப் போகிறீர்களா’ என தவராசாவைக் கேட்கிறார் அவர்.

நன்றாக வெளியிடட்டும், அந்தப் புத்தகத்துக்கு தலைப்பு, “என்ரை காசைத் தாங்கோ”என்று போட் டால் பொருத்தமாக இருக்கும். இவர்கள் இப்படிக் கூத்தடிக்க இரண்டு இலட்சம் ரூபா செலவு. தவ ராசாவை நீக்கி விட்டு ஜெயதிலகவை நியமியுங்கள் என எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஆறு பேர் கையெழுத்திட்டு தன்னிடம் வழங்கிய கடிதத்துக்கு என்ன மாதிரி நடந்து கொண்டாரோ அவ்வாறே டெனீஸ்வரனின் விடயத்திலும் அவைத்தலைவர் சீ. வி.கே சிவஞானம் நடந்து கொண்டிருந்தால் 19 உறுப் பினர்கள் கலந்து கொண்டிராத இந்தச் சிறப்பு அமர் வுக்கு செலவான இரண்டு இலட்சம் ரூபாவை மிச்சம் பிடித்திருக்கலாம்.

காசைக் கரியாக்குவதில் அவருக்கு நிகர் அவரே தான். கூட்டுறவின் தலைவராக இருக்கையில் கோடிக் கணக்காகக் கொண்டு போய் ‘பிரமுக’ வங்கியில் கொட்டினார். தங்க முலாம் பூசப்பட்ட சான்றிதழ் ஒன்று மட்டுமே இப்போது மிச்சமிருப்பதாகக் கேள்வி. இந்த வில்லங்கத்தை யாரும் கிண்டி விடக்கூடாது என்பதற்காகத் தான் கூட்டுறவு அமைச்சை தமிழரசுக்கட்சி வசமே ஒப்படைக்கப்பட வேண்டும் என்று முதலமைச்சரை வேண்டினார். அதனை செவிமடுக்காமல் ஐங்கரநேசன் வசம் ஒப் படைத்ததால் தான் வந்தது வினை. மாகாணசபையின் குழப்பங்களுக்கு விதைபோடப்பட்டதே இதனால் தான். தொடர்ந்து சங்கிலிக்கோர்வையாகக் குழப் பங்கள் தொடர்கின்றன. எப்படியோ இந்தக் குழப் பங்களுக்குத் தலைமை தாங்கிய ஆர்னோல்ட்டுக்கு மாகாணசபை முதல்வர் பதவி பரிசாகக் கிடைத்தது. சுமந்திரனை அனுசரித்ததால் தான் கட்சியில் நிலைக்கலாம் என்ற எழுதப்படாத விதி நடை முறையில் உள்ளதால் தான் சயந்தன், பரஞ்சோதி, பசுபதிப்பிள்ளை, சிறிதரன் போன்றோர் முதல மைச்சருக்கு எதிரான நிலைப்பாட்டில் தீவிரமாக உள்ளனர்.

புலிகள் என்ற சொல்லே சுமந்திரனுக்குப் பிடிக் காது. இதைப் பட்டியலிடப் போனால் தனியாகப் புத்தகமே போடலாம், இன்று வடக்கு மாகாண அமைச்சரவையில் புலிகள் சார்பாக இருக்கும் ஒரேயொருவர் அனந்தி மட்டுமே. அனந்தி அதிக வாக்குகள் பெற்று விடக் கூடாது என்பதற்காக தகிடுதத்தங்கள் செய்தோம் என்ற கருத்துப்பட ஏற் கனவே தமிழரசுக் கட்சிச் செயலர் ,முதலமைச்சர் விக் னேஸ்வரனுக்கு ஒப்புதல் வாக்கு மூலம் வழங் கியுள்ளார். வாக்குப் பொறுக்குவதற்கு மட்டும் தான் புலிகள் தேவை. அவர்களை போற்றும் பாட்டுக்களும் தேவை. பிரபாகரனைப் போல விக்னேஸ்வரனும் தேவை. தேவை முடிந்ததும் மீண்டும் சுமந்திரனின் காலடியே தஞ்சம்.

அனந்திக்கு எதிராகக் கட்சி மட்டத்தில் இவ்வளவு திருகுதாளம் செய்தபோதும் அவர் 87,870வாக்குகள் பெற்றார். அஸ்மின் வெறும் 1,009 வாக்குகள் மட்டுமே பெற்றார். இன்று அனந்தி கைத்துப்பாக்கி வைத்திருக்கிறார் என்று புரளியைக் கிளப்பியதன் மூலம் சுமந்திரனின் மனதைக் குளிரவைத்து அடுத்த முறையும் தனது இடத்தைத் தக்கவைக்க முயற் சிக்கிறார் அஸ்மின். என்னதான் அரசியலமைப்பு பணி, அப்படி, இப்படி என்று சொல்லிக் கொண் டாலும் சம்பந்தன் - சுமந்திரன் பனிப்போர் தொடர் வதையே முதலமைச்சரின் நூல் வெளியீடு வெளிப் படுத்தியது.

தன்னை ஒரு பி.எம்.டபிள்யூ கார் என்று சுமந்திரன் குறிப்பிட்ட வழக்கில் ஒரு எம்.பிக்கு இரண்டு மில் லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது. சும்மா இருந்த படியே காசு சம்பாதிக்கும் ராசி டக்ளசுக்கு மட்டுமே உண்டு.

நீதிமன்றத்திலும் நாடாளுமன்றத்திலும் தமிழ ருக்கு எதிரான விடயங்களில் சுமந்திரன் வெற்றி பெற் றுள்ளார் என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

இதற்குள் மாவையின் கொழும்பு அரசியலுக்கு “தடா” போட நினைக்கின்றார் சிறிதரன் .சிங்களவ ரோடு அரசியல் செய்ய தானும் சுமந்திரனுமே போதும் என்பது அவரது நிலைப்பாடு. அதற்காக தான் அடுத்த முதலமைச்சர் மாவையே என்று கொம்பு சீவிவிட்டார். “மாகாணசபைச் சகதிக்குள் கால் வைத் தால் மீள முடியாது. கொழும்பு அரசியலை மாவை மறந்து விடுவார்” என்பது சிறீதரனின் கணிப்பு. அரசியலில் அப்பாவியான மாவையும்,அந்தப் பப் பாசி மரத்தில் ஏறி விட்டார். விழுவது ஒன்றுதான் பாக்கி. மாகாணசபைத் தேர்தலில் தான் தவிர்க்க முடியாத சக்தி என டக்ளஸ் நிரூபிக்க முயல்வார். வெட்கம் கெட்டதனமாக, உள்ளூராட்சித் தேர்த லின்போது நடந்துகொண்டதுபோல டக்ளஸின் காலில் மாவையை விழ வைப்பதும் சுமந்திரன் சிறிதரனின் நோக்கம் போல உள்ளது.

புலிகளை ஒரேயடியாக ஒதுக்க முனைந்தன் விளைவை இன்று சம்பந்தன் உணர்ந்து விட்டார். அரசியல் கைதிகளின் விடுதலை பற்றிக் கதைத்த போது “திறப்பு என்னிடமில்லை” என்று சொன்ன திமிர் இப்போது அவரிடமில்லை, ஜனநாயகப் போராளிகள் கட்சியைக் கூட்டமைப்புக்குள் உள்வாங்கியுள்ளார். மேலும் சில நடவடிக்கைகளை அவர் மேற்கொள்வதாக அரசல் புரசலாகத் தகவல்கள் வெளிவருகின்றன. இது தெரிந்ததால் சுமந்திரன் விசுவாசிகளின் வயிற்றில் புளியைக் கரைத்து விட்டது போல உள்ளது.

அதனால்தான் இறுதிப்போர் வரை படை யினருடன் இணைந்து செயற்பட்ட புளொட் உட்பட மாற்றுக் குழுக்களை புலிகளுக்கு நிகராகக் கருதும் வகையில் பொது நினைவுச் சின்னம் அமைக்க பிரே ரணை கொண்டு வந்துள்ளார்கள். அதுவும் பிர பாகரன் பிறந்த வல்வெட்டித்துறை மண்ணில். சுமந் திரனின் மனதை குளிரப்பண்ணி கட்சியில் தமது இடத்தை எதிர்காலத்தில் உறுதிப்படுவதே இவர்க ளின் நோக்கம் போல் உள்ளது.

எப்போதுமே கிழக்கு மாகாணத்திலிருந்து ஒரு தலைமை உருவாக வேண்டுமென்பது பிரபாகரனின் நிலைப்பாடு. இடைக்கால நிர்வாக சபைக்கு கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பத்மநாதன் தான் தலைவராக வேண்டும் என்று உறுதியாக நின்றார் அவர். அதனால் இந்தியாவைப் பகைக்க வேண்டிய சூழல் வந்த போதும் அவர் அஞ்சவில்லை. ‘கடற்கரைத் தாளங் காயாக’ விளங்கிய ஆனந்த சங்கரியைப் புறமொதுக்கி சம்பந்தனைத் தலைவராக்கியமை கிழக்கிலிருந்து தலைமை உருவாக வேண்டும் என்பதற்காகவே. கிழக்குத் தொடர்பான அளவுக்கு மீறிய தலைவர் பிர பாகரனின் நெகிழ்ச்சி கருணா விடயத்தில் வெளிப் படையாகத் தெரிந்தது. இன்று சம்பந்தன் யதார்த் தத்தை உணர்ந்து விட்டார் போலத் தெரிகிறது. எனி னும் துணிச்சலாக சில முடிவுகளை எடுக்காவிட்டால் கட்சியைக் காப்பாற்ற முடியாது. ■

எதிரொலி
Ethiroli

அம்பலம் பதிப்பகம்,
இல. 241, கைதடி – மானிப்பாய் வீதி,
உடுவில், யாழ்ப்பாணம்.
ethirolimedia@gmail.com, 0212243818

ஆடி வலி அடங்காது!

35 வருடங்களுக்கு முன்னர் இந்தப் பொழுதுகளில் இலங்கை எரியூட்டப்பட்டுக் கொண்டிருந்தது. அதிலும் சிங்களவர்களின் வீடுகளும், உடமைகளும் பத்திரமாக இருக்கத் தமிழர்களின் வீடுகளும், உடல்களும் கொத்திக் குதறப்பட்டு, அவை நட்டநடு வீதியில் ரயர் போட்டும், தார் ஊற்றியும் எரிக்கப்பட்டன. தமிழர்களின் உடலங்கள் வீதிகளில் எரியுண்ட கணத்தில், சிங்கள எக்காளங்கள் விண்ணை முட்டியிருந்தன.

இந்தக் கலவரங்களுக்கு உடனடிக் காரணியாகச் சொல்லப்படுவது, 1983 ஆம் ஆண்டு 23 ஆம் திகதி யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் தமிழீழ விடுதலைப் புலிகளால் நடத்தப்பட்ட கண்ணிவெடித் தாக்குதல். இதில் 13 சிங்களப் படையினர் பலியாக, தென்னிலங்கை பயத்தில் நிலைகுலைந்தது. இனியும் விட்டு வைத்தால் தமிழர்கள் தனிநாடாகப் பிரிந்து சென்று விடுவார்கள், எனவே இன்னும் அடக்கி வைப்போம் என்று, கண்களில் இனவாதக் கனலோடு வீதிகளில் இறங்கினார்கள். 'தமிழர்களாக 'இருந்த சகலரையும், கேட்டுக் கேள்வியின்றித் தாக்கினார்கள். வீடுகளுக்குத் தீ மூட்டினார்கள். "யாழ்ப்பாணத்துக்கு ஓடுங்கள்" என்று எஞ்சியவர்களைக் கப்பலில் ஏற்றிக் காங்கேசன் துறைமுகத்துக்கு அனுப்பி வைத்தார்கள். கிட்டத்தட்ட முள்ளிவாய்க்காலுக்கான சிறு ஒத்திகை கொழும்பில் நடந்து முடிந்தது.

அதிலும் உச்சமாக வெலிக்கடைப் படுகொலைகள் தமிழர்களை இன்னும் வலியால் துடிக்க வைத்தன. கொழும்பு, வெலிக்கடைச் சிறைச்சாலையில் ஜூலை 25 மற்றும் 28 ஆம் திகதிகளில் , இரு தடவைகள் வெறிநாய்கள் பாய்ந்தன. கூண்டுக்குள் அடைபட்டுக் கிடந்த தமிழ் இளைஞர்கள் மீது, தங்கள் 'வீரத்தைக்' காட்டி மகிழ்ந்தன. குட்டிமணி, தங்கத்துரை, ஜெகன் போன்ற தமிழ் மக்களுக்காகப் போராடப் புறப்பட்ட இளைஞர்கள், சிறைக்குள் வைத்து கொடூரமாகக் கொல்லப்பட்டார்கள். அதிலும் குட்டிமணியின் கண்களைத் தோண்டி எடுத்து அதனைக் காட்சிப் படுத்தி , தங்கள் வஞ்சத்தின் கோரத்தை அந்த வேட்டை நாய்கள் பகிரங்கப்படுத்தின. குட்டிமணியின் கண்கள் மீது சிங்கள வெறியர்களுக்கு அப்படி என்ன அதீத கோபம்?

"தமிழீழம் பிறப்பதை என் கண்களால் காண வேண்டும்" என்ற தன் வேட்கையை குட்டிமணி நீதிமன்றில் சொல்லியிருந்தான். அந்தச் சொற்களை மனதில் போட்டு, உள்ளுக்குள் மறுகிக் கொண்டிருந்த பேரினப் பேய் புறப்படுவதற்கு திருநெல்வேலித் தாக்குதல் சம்பவம் நல்லதொரு சாட்டாக அமைந்தது. அதை அப்படியே 'சிக்கெனப்' பிடித்து , தமிழர்கள் மீது இனவாதப் பாய்ச்சல் நிகழ்த்தப்பட்டது.

அதன் பின்னர் எல்லா ஆடிகளும் கறுப்புடை பூண்டே தமிழர்களுக்கு முன்னால் வந்தன. ஒப் பிரேசன் லிபரேசன், நவாலிப் படுகொலை என அந்தக் கறுப்புப் பட்டியல் நீளும். ஆயினும் அதே கறுப்பில் தான் பின்னொரு நாளில் ஆடிக்கறுப்பின் வலிகளை எதிரிக்கு கொடுத்து, தானும் வெடித்து' கரும்புலிகள்' என்னும் புதிய சரித்திரத்தை மில்லர் படைத்தான். சிங்களம் வெலவெலத்தது. கிட்டத்தட்ட 30 வருடங்களாகச் சிங்களத்துக்கும் குலைப்பன் காய்ச்சல் தரும் மாதமாக ஆடி மாறிப்போனது. அத்தனை நாளும் அடக்கி வைத்த வலிகளை ஜூலைத் தாக்குதல்களில் தமிழினம் திருப்பிக் கொடுத்தது.

எல்லாமே 2009 மே மாதத்தோடு மீண்டும் தலை கீழானது. இப்போது அடக்கி வைத்திருக்கும் ஆடியின் வலிகளைத் திருப்பிக் கொடுக்க வழியின்றி, தலை குனிந்தபடியே இருக்கிறது தமிழினம்.ஆனால் ஆடி வலி ஒருபோதும் அடங்காது.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"



காலம் எம்மையும் விடுதலை செய்யும்

● செந்தூரி

"சிறுபான்மையினரின் உதவியோடு தெரிவு செய்யப்பட்ட எந்தவொரு ஜனாதிபதியும்– சிறுபான்மையினரின் தேசிய ஒடுக்கத்துக்கான திட்டங்களைக் கொண்டிராத வரை, பெரும்பான்மைச் சிங்களவரின் மனதையும் – வாக்குகளையும் வெல்வது சாத்தியமேயில்லை – என்பது 'சிங்ஹல 'விஜய நீதிகளில் அடிப்படையானது.

'லெப்ரினன்ட் கேணல் நந்த சேன கோத்தபாய ராஜபக்ச' - இலங்கையின் அடுத்த ஜனாதிபதி தேர்தலுக்கான நாடித் துடிப்பாக சுமார் 20 மாதங்களுக்கு முன்னரே சிங்கள தேசம் உணர்ச்சிப் பெருக்குடன் உச்சரிக்கத் தொடங்கி விட்ட பெயர். இலங்கையின் நிறை வேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதித் தேர்தல்களில் - தெரிவுரிமை பெரும்பான்மை சிங்கள மக்களுடைய விருப்பமாக இருந்தாலும் - தீர்மானிக்கும் உரிமையைக் கொண்டிருப்பவர்கள், வடக்கு - கிழக்கின் சிறுபான்மையினரே! ஆயுதம் கொடுத்துதவிய ரணசிங்க பிரேமதாச திபதியால் மாத்திரமே, பௌத்த சிங்கள ஐக்கிய சோசலிச ஜன நாயக இலங்கை குடியரசின் அரசியல் அமைப்புக்கு உட்பட்டு - 'ஒரே தேசம் ஒரே மக்கள்" கொள்கையமுலாக்கத்தினை நடைமுறைப் படுத்த முனையுமான ஏகோபித்த முடிவுக்கு சிங்கள வாக்காளன் வருவதற்குப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பெரும்வகிபாகம் உடைய முன்னோடியாக இருந்திருக்கின்றார். தவிர்த்து, மீண்டும் ஒரு முறை ஜனாதிபதி தெரிவினைத் தீர்மானிக்கும் சக்தியாக சிறுபான்மையினர் இருந்திடக் கூடாது என்ற தெளிவான வரையறையும் - நந்தசேன கோத்தபாய ராஜபக்சவின் 10 வருட பேயரசின் வடுக்களை சிங்கள மக்களின் முதுகுத் தோலில் இருந்து வெகுவாகட்டும், 'அன்புள்ள பிரபாகரனுக்கு' கடிதப் புகழ் சந்திரிகா குமாரனதுங்கவாகட்டும், 'நரி வேண்டாம் பரி போதும்' புறக்கணிப்பினால் 2005 இல் மகிந்த ராஜபக்சவாகட்டும், வெற்றிபெறும் நிலையிலிருந்த பொன்சேகாவை 'அன்னமிட்டு' ஆதரித்து 2010இல் மீளவந்த மகிந்தவாட்டும் நல்லாட்சிக்கான மாற்றப்பருப்பு மைத்திரிபால சிறிசேனா ஈறாக - சிறுபான்மையினரின் மோதிரக் கையால் குட்டுப்படாத, நிறை வேற்றதிகாரிகள் என்றும் யாருமே இல்லை. அப்ப ஜே.ஆர்.? (பிரதமர் ரணிலும் - நாங்களும் சம்பந்த பகுதி. ஜே.ஆர்-ரணில் ஐயா வோட மாமா! எங்களுக்கு பெரியப்பா முறை வருகுது) ஓ...கே...!!

சிறுபான்மையினரின் உதவியோடு தெரிவுசெய்யப்பட்ட எந்தவொரு ஜனாதிபதியும்- சிறுபான்மையினரின் தேசிய ஒடுக்கத்துக்கான திட்டங்களைக் கொண்டிராத வரை, பெரும்பான்மைச் சிங்களவரின் மனதையும் - வாக்குகளையும் வெல்வது சாத்தியமேயில்லை - என்பது 'சிங்ஹல 'விஜய நீதிகளில் அடிப்படையானது. மைத்திரியை மாயத் தமிழ் ஆதர வாளனாக, தற்சமயம் பெரும்பான்மை சிங்கள மக்கள் நம்பத் தொடங்கியிருப்பதும் - சிறுபான்மையினருக்கான சம உரிமை வலுவின் ஏதோவொரு பங்கையேனும் கொடுத்து விடக்கூடிய மந்த புத்திக் காரனாக எண்ணத் தொடங்கியிருப்பதும் ஏறத்தாழ ஒரே காலப் பகுதியில் நிகழ்ந்து - நாளொருமேனியும்பொழுது வண்ணமுமாக வளர்ந்தவை.

மைத்திரியின் எழுச்சியும் - மகிந்தாவின் வீழ்ச்சியும், அப்பக் கோப்பையிலிருந்து வட்ஸ் அப் செயலி மூலமாக நிகழ்ந்ததாக வாக்காளனின் எண்ணவேற்பிருந்தாலும் அமெரிக்காவும் - சீனாவும் பிராந்திய நலனுக்காக மோதிக் கொண்டபோது - கொண்டையிலிருந்து விழுந்த பூ எனப்படும் புஷ்பத்தை அள்ளி எடுத்து நாங்கள் காதில் சூடிக்கொள்ள முன்னர், கண்ணில் ஒற்றித் தொழுததே, உண்மை! பெரும்பான்மைச் சிங்களவர்களின் ஏகோபித்த தெரிவினால் மட்டுமே சாத்தியமாகும் - நிறைவேற்ற அதிகாரமுள்ள ஜனாதிபதியால் மாத்திரமே, பௌத்த சிங்கள ஐக்கிய சோசலிச ஜன நாயக இலங்கை குடியரசின் அரசியல் அமைப்புக்கு உட்பட்டு - 'ஒரே தேசம் ஒரே மக்கள்" கொள்கையமுலாக்கத்தினை நடைமுறைப் படுத்த முனையுமான ஏகோபித்த முடிவுக்கு சிங்கள வாக்காளன் வருவதற்குப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பெரும்வகிபாகம் உடைய முன்னோடியாக இருந்திருக்கின்றார். தவிர்த்து, மீண்டும் ஒரு முறை ஜனாதிபதி தெரிவினைத் தீர்மானிக்கும் சக்தியாக சிறுபான்மையினர் இருந்திடக் கூடாது என்ற தெளிவான வரையறையும் - நந்தசேன கோத்தபாய ராஜபக்சவின் 10 வருட பேயரசின் வடுக்களை சிங்கள மக்களின் முதுகுத் தோலில் இருந்து வெகுசீக்கிரம் குணமடைந்து மறைய வைத்திருக்கிறது.

உலகக் கிண்ண உதைபந்து தொடரின் இறுதியாட்டத்தில் தோற்றுப்போன குரோஷியா, பிரான்ஸின் வெற்றிக் களிப்பை அத்துணையளவு ஆர்ப்பரித்துக் கொண்டாட அனுமதித்திருக்கவில்லை. ''தோற்றுப் போனவரின் புன்னகை - வெற்றியின் சுவையை பறித்து ருசிக்குமாமே!" இறுதிப் போட்டி நிகழ்ந்து நான்காவது நாள் பிரான்ஸின் புகழ்பூத்த ஈபிள் கோபுரத்தின் வர்ண விளக்குகள், குரோஷிய அரச சின்னமான சிவப்பு - வெள்ளை சதுரங்கப் பலகை அலங்காரத்தில் முழு இரவும் ஒளிர்ந்து பெருமை பேசின. வெறும் 44 இலட்சம் மக்கள் தொகையுடைய - 56 சதுரக்கிலோ மீற்றர் பரப்பளவுடைய தேசத்தில் சுதந்திரப்போரட்டத் தொடர்ச்சிக்கும் சர்வதேச எழுச்சிக்கும், மாவீரன் நெப்போலியனின் தலை வணக்கத்தின், குறியீடு அது!!

வாழும் ஹிட்லர் கோத்தபாய ராஜபக்சவின் நிறைவேற்று அதிகாரத்தை இலங்கைச் சிங்களவர்கள் உள்ளூர விரும்புவதற்கும், எட்டு ஆபிரிக்க பூர்வீக வீரர்களோடு விளையாடி, குரோஷிய அணியை வென்ற பிரான்ஸ், குரோஷியாவை மனதார வாழ்த்துவதற்கும் என்ன தொடர்பு இருக்கக்கூடும்? அது 'அடிமைகொள் மனநிலை' யின் இருவேறு முரண்வெளிப்பாடுகள். உலகின் இரண்டாவது சனத் தொகைப் பரம்பலுடைய ஜப்பான், உலகின் ஆகக்குறைந்த குற்றச்செயல்களும், அகால மரணங்களும் கொலைகளும் குறைந் தளவில் கொண்ட நாடு. நாங்கள் தொடர்ந்து 7 ஆண்டுகளாக சித்திரவதைக் கொடுமை மரணங்களால் முதல் இடத்தைப் பிடித்த ஒரே இலங்கையர்கள். அடிமை கொள் மனநிலையின் இருவேறு அந்தங்களில், சிறுமைபான்மைச் சமூகம் அல்லது சமூகங்கள் மீதான இன/மத / பிராந்திய /மொழி /பிரதேச ரீதியிலான ஒடுக்குதலையும் - சீரழிப்பையும் நனிவிரும்பும் மக்கள் கூட்டமாக இலங்கையின் பெரும்பான்மையினம், வேகமாக மறு கூர்ப்படையும் வெளிப்பாடே - 'நந்தசேன, கோத்தபாய"வின் பெயர் உச்சாடனத்துக்கும்துணை!

இரண்டாம் உலகப்போருக்கு முன்னைய நாசிச ஜேர்மனியின் அழுத்தத்தோடு 1939 ஆம் ஆண்டில் 'குரோஷியா பெனோ ஜியனை' எனும் சுயாட்சி அரசாங்கம் குரோஷிய தனியரசுக்கான முதற்படியாக இடப்பட்டது. இதன் பிறகும் கூட, முழுமையான அங்கீகாரமற்றதாக, யூகோஸ்லாவியாவின் பேரரசுக் கூட்டமைப்பின் ஒரு பகுதியாகவே இருந்த குரோஷியா - 1942, 1945, 1961, 1974 போன்ற வெவ்வேறு கால கட்ட புரட்சிகளின் பின்னணியோடு, அதி முக்கியமான குரோஷிய வசந்தம் (1970 - 1971); குரோஷிய சுயாட்சியினை பெரிதும் வலியுறுத்தியது. போர்க்குற்றங்களுக்கான ஆதாரங்களையுடைய இரத்தப் புரட்சிகளோடு தனது அரை நூற்றாண்டுக்கு மேலான தனித் தேசக் கனவினை - நனவாக்கி 1991 ஜூனில்

(09ஆம் பக்கம் பார்க்க)



முழுகும் இலங்கைத் தீவு

● ஜெரா

இலங்கை ஒரு குட்டித்தீவு. நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்டது. எனவே இந்தத் தீவை சதாகாலமும் பேரலைகள் தாக்கிக்கொண்டிருப்பது சதாரணமானதொன்று. இங்கு குறிப்பிடப்படும் பேரலைகள் என்பதை, பேரரசியல் என்பதாகவும் மாற்றிப் பயன்படுத்தலாம். அதாவது சதாகாலமும் சர்வதேச அழுத்தங்களுடன் கூடிய பேரரசியலில் சிக்குண்டவண்ணமே இந்தத் தீவு கரைந்திருக்கிறது. ஆனால் முற்றுமுழுதாக அழிந்துவிடவில்லை. சுனாமியின்போதும், பெரும் அரசியல் சுனாமிகளின்போதும் முற்றுமுழுதாக அழிந்துவிடவில்லை.

அதற்குப் பிரதான காரணமே, "இஞ்சி கொடுத்து மிளகாய் வாங்கவும்" வாங்கிய மிளகாயை விற்றவன் தலையிலேயே வைத்து அரைக்கவும் கூடியளவுக்கு இந்தத் தீவை ஆட்சி செய்தவர்கள் பெற்றிருந்த இராஜதந்திர வலிமைதான். இதனையே மூத்த அரசியல் ஆய்வாளர் மு.திருநாவுக்கரசு, "கடிக்க வரும் நாயையே தன் காவலாளியாக மாற்றும் இராஜதந்திர வலிமை பொருந்திய சிங்கள ஆட்சியாளர்கள்" எனக் குறிப்பிடுவார்.

வரலாற்று நோக்கில் பார்த்தால் இந்தியாதான் இந்தத் தீவை விழுங்கி விடுமளவுக்கு மிக அண்மையில் இருங்கும் பெருந்தேசம். அதற்கு அடுத்த நிலையில் சீனா. அதற்கும் சற்றுத் தூரமாக மேற்கு நாடுகள். இந்தியாவையும், சீனாவையும், திருமணம், பௌத்தம், வணிகம் போன்ற ஆயுதங்களைக் கொண்டே இலங்கை சமாளித்து வந்திருக்கிறது. மேற்கின் நேரடி ஆதிக்கத்தைத் தவிர்க்கவே முடியாமல் சில நூற்றாண்டுகள் ஏற்கவேண்டியாயிற்று. ஆயினும் காலனியாதிக்க முடிவோடு இலங்கை பெற்ற சுதந்திரமானது, இந்தத்தீவின் அரசியலை, அது பராம்பரியமாக முன்னெடுத்து வந்த இராஜதந்திர ஆயுதத்தை அடுத்த கட்டத்துக்கு இழுத்துப்போனது.

அந்த இராஜதந்திர ஆயுதம் தான் தமிழர்களும், அவர்கள் நடத்திய விடுதலைப் போராட்டமும்.

பிரித்தானியர்கள் இலங்கையை சிங்களவர்களுக்கு மட்டும் உரித்தான ஒற்றைத்தேசமாகப் பிரகடனப்படுத்தி விட்டுப்போயினர். இங்கு மரபு வழியாக, வரலாற்று வழியாக தமிழர்கள் வாழ்ந்து வந்த வடக்கு, கிழக்குப் பகுதிகளும் இலங்கையின் இறையாண்மைக்குள் உள்ளடக்கம் பெற்றன. இது ஒருவித இன ஒடுக்கு முறையாகவும் மாறியது. இதற்கெதிராகத் தமிழர்கள் போராடத் தொடங்கினர்.

அந்தப் போராட்டம், பேரரசியலுக்கு எதிரான ஆயுதமாக இலங்கையினாலும், இலங்கையை தம் கட்டுக்குள் கொண்டுவர நினைக்கும் நாடுகளுக்குத் துரும்பாகவும் பயன்படுத்தப்பட்டது. ஒரு புறத்தில் தமிழர்கள் சுதந்திர தேசத்துக்காக உயிர்கொடுத்துப் போராடிக்கொண்டிருக்க, மறுபுறத்தில் சிங்கள தேசம் தன்னைப் பாதுகாத்துக்கொள்ள அந்தப்போராட்டத்தைப் பயன்படுத்திக்கொண்டது.

30 வருடங்கள் இலங்கையில் காலூன்ற முயற்சித்த அனைத்து நாடுகளையும் தமிழர் நடத்திய ஆயுதப்போராட்டத்தைக் கொண்டே வெற்றிகரமாகக் கையாண்டது. தன்னைப் பேரலைகளிலிருந்து காப்பாற்றிக்கொண்டது.

3 தசாப்தங்களுக்கு மேலும் இந்தக் குட்டித் தீவிடம் ஏமாற உலகம் (அமெரிக்கா, இந்தியா, சீனா உள்ளிட்ட 12 நாடுகள்) விரும்பவில்லை. தமக்குப் பொருத்தமானதொரு பொம்மையை இலங்கையின் மன்னராக்கின. அவர்தம் குடும்பப் பரிவாரங்களை அரசவைப் பரிவாரங்களாக்கி அழகு பார்த்தன. தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை எவ்வளவு விரைவாக அழிக்க முடியுமோ அவ்வளவு விரைவாக துடைத்தழிக்கும்படி உற்சாகப்படுத்திக்கொண்டிருந்தன. யார் அதிகம் உற்சாகப்படுத்துவது என்பதிலும், அவர்களுக்குள் போட்டியிருந்தது. அதில் சீனாவும், இந்தியாவும் முதலிரண்டு இடங்களையும் நிலை தளம்பாது தக்கவைத்துக்கொண்டன. அதிகாரத்தின் நிறைபோதையில் நின்ற மன்னரும் பரிவாரங்களும் மகிழ்ச்சியில் திளைத்தனர்.

"தமிழர்களைக் கொல்லும் படைகளுக்கு ஆள் போதவில்லையெனில், புத்தர் கையிலும் ஆயுதத்தைக் கொடுத்து கொலைக் களத்துக்கு அனுப்புங்கள்" என உத்தரவிடவும் தயங்காத மனநிலையில் கொலுவீற்றிருந்தனர். இப்படியொரு வேளையில்தான் மே 2009 ஆம் ஆண்டு வந்தது. தமிழர்களின் ஆயுதப்போராட்டம் மௌனித்தது.

அந்த மௌனிப்பு இலங்கையின் நூற்றாண்டு கால இராஜதந்திரப் பயணத்தை அஸ்தமிக்கச் செய்தது.

வடக்கு, கிழக்கு இலங்கையின் கடல் எல்லைக் கோட்டை இதுவரையில் தாண்டியிராத இந்தியா, யாழ்ப்பாணத்தில் முதற் தடவையாக துணைத்தூதரகத்தைத் திறந்தது. கலாசார விழாவில் தொடங்கி, காது குத்து வரைக்கும் தன் செல்வாக்குக்குட்பட்டதாக அமைய வேண்டும் என்பதில் மிகக் கவனமாக செயற்பட்டது இந்தத் துணைத்தூதரகம். கல்வி, புலமை, இந்து சமயம், கலாசாரம், வணிகம், வணிக சந்தைகள், விவசாயம், மருத்துவம், போக்குவரத்து என அனைத்து வாழ்வியல் துறைகளிலும் தன் தலையீட்டைக் கொண்டுவந்தது.

தன் நாட்டில் இன்னமும் கோடிக்கணக்கான மக்கள் தெருவில் மலங்கழிக்க, மட்டக்களப்புக்கு 3400 மலக்குழிகளை அமைத்துக்கொடுக்க முன்வந்தது. தன் நாட்டில் பல கோடி கிராமங்கள் வீதிகளே அற்றிருக்க, வடக்குக்கான புகையிரதப்பாதையை மின்னல் வேகத்தில் புனரமைத்து முடித்தது. மும்பை, சென்னை, புதுடில்லி என இந்தியாவின் பெருநகரங்களையெல்லாம் வீடற்ற குடும்பங்கள் அசிங்கப்படுத்திக்கொண்டிருக்க, இலங்கையின் வடக்கு - கிழக்கில் 50 ஆயிரம், ஒரு லட்சமென வீட்டுத்திட்டங்களை வாரி வழங்கியது. மிகப் பிந்தியதாக, அம்புலன்ஸ் வசதியின்மையால் இறந்த தன் மனைவியின் சடலத்தை மருத்துமனையிலிருந்து தோளில் சுமந்து சென்று அடக்கம் செய்த கணவர் பற்றிய செய்திகள் சமூக வலைத்தளங்களில் வைரலாகி, சர்வதேச அளவில் அவமானப்பட்ட ஒரு பெருந்தேசம், யாழ்ப்பாணத்துக்கு 50 அம்புலன்ஸ்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

இவ்வளவு ஆழமாக வடக்கு, கிழக்குப் பகுதிகளின் ஆணிவேர் வரை இறங்கி வேலை செய்யுமளவுக்கு இந்தியாவின் செழிப்பான மாநிலமாக இந்தப் பகுதிகள் மாற்றப்பட்டிருக்கின்றன. இந்தியாவுக்கும், தமிழர் பகுதிகளுக்கும் இடையிலான பண்பாட்டுத் தொடர்புகளில் இருக்கும் ஒற்றுமை காரணமாக இந்த மாற்றங்கள் மிகச் சுகமாக இருக்கின்றன. இதன் விளைவுகள் மிக மோசமானவை. சொந்தத் தேசத்தையே இலவசமாகக் கொடுக்கும் நிலைக்கு ஒப்பானவை.

தெற்கின் நிலமையோ இன்னும் பரிதாபம். இலங்கையின் தெற்கு எனப்படுவது இந்தத்தீவின் ஆட்சியதிகாரத்தைப் பெற்ற இறைமையுடன் கூடிய தேசத்தைக் குறிப்பதுதான். தமிழரின் ஆயுத மௌனிப்போடு நூற்றாண்டு காலமாகக் காப்பாற்றப்பட்டு வந்த அந்த பௌத்த மேலாண்மைவாத சிங்கள பெருந்தேசிய இறைமை சுக்கு நூறாகியிருக்கிறது.

(17ஆம் பக்கம் பார்க்க)

மரபின் வேர்களைத் தேடி...

சுவடிகளைப் பேணும் நூலக நிறுவனம்

● நிரோஷா ரமேஷ்

தமிழ் என்று ஒரு மொழி இருந்தது. தமிழரென்று ஓர் இனம் வாழ்ந்தது என்பதற்கான அடையாளங்களையும் எச்சங்களையும் தமிழர்கள் யாரும் தேடுவதும் இல்லை பேணுவதும் இல்லை. எம் மரபுகளையும் தொன்மைகளையும் பேணாமல், தவறிழைத்து விட்டு, இன்றும் அவற்றைப் பாதுகாக்கும் கடைசிச் சந்தர்ப்பத்தையும் தவறவிட்டுக்கொண்டே இருக்கின்றோம். இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு எல்லாம் தமிழர்கள் அனைவருமே பொறுப்பாளிகள்தான். மேடைகளில் கூச்சல் போடும் தமிழ்க் காவலர்கள், வருடத்தில் குறைந்தது 10 புத்தகம் வெளியிடும் படைப்பாளப் பிரமாக்கள், புலம்பெயர் நாடுகளில் சங்கம் வைத்துத் தமிழ் வளர்க்கின்றோம் என பெருமை

பேசிக்கொள்ளும் நவீன மூவேந்தப் பரம்பரையினர் என யாரும் இதற்கு விதிவிலக்கல்ல. ஏனெனில் நம் இனம் வாழ்ந்ததற்கான அடையாளம் மெல்ல அல்லாமல் மிக வேகமாகவே அழிந்து கொண்டிருக்கின்றது. அழிக்கப்பட்டுக் கொண்டுமிருக்கிறது.

பெரும்பான்மையினர் தொல்பொருட்களைப் பாதுகாக்கும்போர்வையில், சந்திக்குச்சந்தி அரசமரங்களையும், புத்தர் சிலைகளையும் உயிர்ப்பித்துக் கொண்டிருக்கின்றார்கள். அதைவிடவும் "தமிழர் பாரம்பரியங்களைக் கொண்ட பிரதேசம்" என வெறுமனே நாம் பீற்றிக் கொண்டிருக்கும் இடங்களில் எல்லாம் "இது அரசாங்கத்துக்குச் சொந்தமான பகுதி, அரச உடமை. எவரும் உட் பிரவேசிக்க இயலாது" என்ற பெயர்ப்பலகைகள் எம்மை பார்த்து ஏளனமாகச் சிரிக்கின்றன.

தென்கிழக்காசியாவில் மிகப்பெரிய நூலகமாகத் திகழ்ந்த யாழ்ப்பாண நூலகம், 1981 ஆம் ஆண்டு யூன் மாதம் முதலாம் திகதி 97,000 அரிய நூல்களுடன் எரியூட்டப்பட்டது. இது திட்டமிட்ட ஓர் அழிப்பு, மொழியை அழித்தால் இனமே அழிந்துவிடும் என்பதற்காக நடத்தப்பட்ட சூழ்ச்சி என்று இன்றுவரை குற்றம் சுமத்துகின்றோம். இவ்வாறு அடுத்தவர் மீது பழிசுமத்துவதிலும், அறிக்கை விடுவதிலும் கங்கணம் கட்டிக்கொண்டு வரிசையில் நிற்கும் நாம், இதுவரை தமிழ் இனத்தின் தொன்மையைப் பாதுகாத்தோமா? அல்லது பாதுகாப்பதில் குறைந்தது ஒரு வீதமாவது பங்களிப்புச் செய்தோமா? அல்லது ஒரு துரும்பைக் கூட அசைத்தோமா எனக் கேள்வி எழுப்பினால் விடையாக மௌனமே எஞ்சும். ஆனாலும், இந்தக் கேள்விகளுக்கு எல்லாம் பதிலாக இருக்கின்றனர் நூலக நிறுவனக் குழுமத்தினர்.

"ஆம்! நாங்கள் இருக்கின்றோம். எம் தொன்மங்களையும் மரபுகளையும் இப்போது மட்டுமல்ல, எந்தக் காலத்திலும் பாதுகாக்கும் பணியை ஆரம்பித்துவிட்டோம்" என கர்வம் ஏதுமின்றி மிகச் சாதாரணமாகச் சொல்கின்றார்கள் நூலக நிறுவனத்தினர்.

நூலக நிறுவனத்தினர் ஓலைச்சுவடிகளை தேடிச் சென்று டிஜிட்டல் முறையில் அதாவது எண்ணிமப்படுத்தி ஆவணப்படுத்தும் செயற்பாடுகளை மேற்கொண்டுவருகின்றார்கள்என்றவாய்வழித்தகவல்களுடன் மிகச் சாதாரணமாகத் தான் அவர்களைச் சந்திக்கச் சென்றோம். அங்கு சென்ற பின்னர்தான் எம் தொன்மங்கள் பற்றி எந்த அக்கறையும் இல்லாமல், அலட்சியமாகப் பணத்தைத் தேடி எல்லோரும் ஓடிக்கொண்டிருக்க, எமது மரபுகளைப் பாதுகாப்பதற்காக, எமக்கு அடுத்தடுத்து வரும் தலைமுறையிடம் கையளிப்பதற்காக தினம் மரபுகளைத் தேடியும், அவற்றை ஆவணப்படுத்தி வைக்கும் மிகப்பெரிய பணியை விளம்பரம் ஏதுமின்றி செய்து கொண்டிருக்கும் தன்னார்வலர் குழுமத்தைக் கண்டோம். இந்த நூலக நிறுவனம் முழுக்க முழுக்க தன்னார்வலர்களால்வழிநடத்தப்படுகிறது. களப்பணிகளுக்கும் எண்ணிமப்படுத்தும் பணிகளுக்கும் 15 பணியாளர்களும் உள்ளனர்.

இந்த மரபைத்தேடும் பயணத்துக்கு 2005 ஆண்டு பொங்கல் தினத்தில் பிள்ளையார் சுழி போட்டவர்கள் தி. கோபிநாத், மு. மயூரன் எனும் இருவர். ஆயினும் மேலும் பலரும் இணைந்து ஒரு சமூகக் கூட்டு முயற்சியாக முன்னெடுக்கப்பட்டதால் இந்த நிறுவனம் இன்றுவரை சிறப்பாகச் செயற்பட்டு வருகிறது. இந்த நூலக நிறுவனம் எண்ணிமப்படுத்தி ஆவணப்படுத்தும் பணிகளை கடந்த 14 ஆண்டுகளாக மேற்கொண்டு வருகின்றது. இதுவரை நூல்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள், சிறுநூல்கள் என 56,000 ஆவணங்களை www.noolaham.org என்ற எண்ணிம நூலகத்திலும் (digital library) ஒலி, ஒளிக்கோப்புகள், புகைப்படங்கள், வரைபடங்கள் என 5,000 பல்லூடக ஆவணங்களை www.aavanaham.org எனும் பல்லூடக ஆவணக் காப்பகத்திலும் (multimedia archives) சேகரித்துள்ளனர். அவ்வகையில் மொத்தம் 61,000 ஆவணங்களுடன் தென்னாசியாவிலேயே மிகப்பெரிய எண்ணிம (டிஜிட்டல்) நூலகமாக இது உள்ளது. இது தவிர புத்தகங்கள், சஞ்சிகைகள் என 30 ஆயிரம் ஆவணங்கள் அலுவலக நூலகத்தில் உள்ளன. இவற்றில் 15,000

மேற்குறிப்பிட்ட எண்ணிம நூலகத்திலும் உள்ளன. ஏனையவற்றை எண்ணிம நூலகத்தில் சேர்க்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. அவ்வகையில் இது எல்லாமாக 75,000 க்கும் அதிகமான ஆவணங்கள் நூலக நிறுவனத்தால் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. இவை அனைத்துமே முழுக்க ஈழத்து தமிழ் பேசும் மக்களின் ஆவணங்கள் மட்டுமே ஆகும்.

நூலக நிறுவனத்தின் தற்போதைய முக்கிய செயற்திட்டங்களாக எழுத்தாவணங்கள், ஓலைச்சுவடி, தொழிற் கலைகள், வாய்மொழி வரலாறுகள் என்பனவற்றை எண்ணிமப்படுத்தி ஆவணப்படுத்தும் செயற்திட்டங்கள் உள்ளன வாய்மொழி வரலாறுகளை (Oral History) ஆவணப்படுத்தல் இன்னொரு முன்னோடிச் செயற்திட்டமாக உள்ளது. இதற்காக தி. கோபிநாத் முயற்சியில் வாய்மொழி வரலாற்று ஆய்வு நிலையம் எனும் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது. இதுவரை 150 வாய்மொழி வரலாறுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இது தென்னாசியாவின் மூன்றாவது முயற்சி. இதற்கு முதல் பாகிஸ்தானிலும் இந்தியாவிலும் வாய்மொழி வரலாற்று ஆவணப்படுத்தல் தொடங்கப்பட்டுள்ளது.

இவ்வகையில் கடந்த ஆண்டில் ஓலைச் சுவடிகளை எண்ணிமப்படுத்தும் "ஓலைச் சுவடிகள் ஆவணகத் திட்டம்" ஆரம்பிக்கப்பட்டது. பிரிட்டிஷ் நூலகத்தின் (British library) நிதியுதவியுடன் "அழிவு ஆபத்தில்" உள்ள ஆவணங்களைப் பாதுகாக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் EAP -1056 (Endangered Archives





programme) என்ற இந்தச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. இந்தச் செயற்றிட்டத்தினை தி. கோபிநாத், இ. நற்கீரன் ஆகியோர் தலைமையேற்றுள்ளனர். களப் பணிகளில் பட்டதாரிகளான ஆர்த்தியா, திலக்சன், டெல்சான், விதுசன், ஐதீபன் ஆகியோரும் ஈடுபட்டுள்ளனர்.

EAP -1056 என்ற இந்தச் செயற்றிட்டம் முதலில் வடமாகாணத்திலே ஆரம்பிக்கப்பட்டது. அதற்கு பட்டதாரிகளான இந்த ஐவரும் தெரிவு செய்யப்பட்டுகள ஆய்வுக்காக அனுப்பப்பட்டனர். இந்த ஆய்வில் பல ஆயிரம் ஓலைச் சுவடிகள் இருப்பது தெரியவந்தது. அதன் பின்னர் அவற்றை எண்ணிம முறையில் ஆவணப்படுத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. இதுவரை அடையாளங் காணப்பட்ட 25,000 க்கும் அதிகமான ஓலைச் சுவடிகள் படிப்படியாக எண்ணிமப்படுத்தப்படுகின்றன. இது புகைப்படம் எடுத்து முகநூலில் பதிவிட்டு, விருப்பங்களையும், இதயங்களையும் அள்ளும் சாதாரண வேலையல்ல. ஸ்மார்ட் போனை வைத்துக் கொண்டு ஹீரோவாக முயற்சிக்கும் இளைஞர்கள் மத்தியில், பல நூற்றாண்டுகள் தொன்மையான ஓலைச்சுவடிகளைத் தேடிச் செல்லும் களப்பணியைச் செய்யும் இந்த இளைஞர் குழுவை என்னவென்று பாராட்டுவது.

200 வருடங்கள் பழமை வாய்ந்த இந்த ஓலைச்சுவடிகளை எண்ணிமப்படுத்த நீண்ட காலம் எடுக்கும். ஏனெனில் நூற்றாண்டுகளைக் கடந்து வாழும் இந்த ஓலைச் சுவடிகளில் அழுக்குப் படிந்திருக்கும். இவற்றை மிகவும் கவனமாகக் கையாண்டே தூய்மைப்படுத்த வேண்டும். சில நேரங்களில் ஓலைச்சுவடிகள் சிதைவடைந்த நிலையில் கிடைக்கும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் அவற்றை மிகவும் நுணுக்கமாகக் கையாள வேண்டிய தேவை உள்ளது. இந்த ஓலைச் சுவடிகளைத் துப்புரவாக்கும் பணியின்போது இவர்கள் புல் எண்ணெயைப் பயன்படுத்துவார்கள். அத்தோடு எழுத்துக்கள் இனங்காண முடியாத தெளிவற்ற நிலையில் இருந்தால், முருக்கம் இலை, விபூதி ஆகியவற்றைப் பயன்படுத்துவர்.

ஓலைச்சுவடிகளை ஏன் எண்ணிமப்படுத்தி ஆவணப்படுத்துகின்றனர் என்ற தெளிவு பலருக்கு இல்லை. ஓலைச்சுவடிகள் காலத்துக்குக் காலம் ஒரு சுவடியைப் பார்த்து இன்னொரு சுவடி எழுதியே பாவிக்கப்படுகின்றன. இப்போது எழுதும் முறை இல்லை. எனவே சுவடியில் உள்ளவற்றை அச்சுக்கு மாற்ற வேண்டிய தேவை அப்போது இருந்தது. ஒரு குறிப்பிட்ட காலத்தில் பழந்தமிழ் நூல்கள், சோதிட நூல்கள் என்பன அச்சாகி உள்ளன. பெருமளவில் அச்சாவதற்கு ஆயிரம் பிரதியாவது அடிக்கப்பட வேண்டும். அவ்வாறு விற்பனை செய்ய முடியாதவை அச்சேற்றப்படவில்லை. அதனால் பெருமளவான ஓலைச்சுவடிகள் அழிந்துவிட்டன. இது இறுதிக் கட்டம். அச்சேற்றாவிட்டாலும் டிஜிட்டல் முறையில் ஒரு பிரதியை எடுத்து ஆவணப்படுத்த முடியும்.

மிகப் பெறுமதியான பல ஏட்டுசுவடிகள் போர்க் காலத்திலும், இடம்பெயர்வின்போதும் கறையான் அரித்தும் இல்லாமல் போய்விட்டன. எஞ்சியிருப்பது சொற்பமான சுவடிகளே. இது எண்ணிம முறையில் ஆவணப்படுத்தப்படாவிட்டால் முற்றிலும் அழிந்துவிடும். இதுவே எமக்கான இறுதிச்சந்தர்ப்பம்.

யாழ். நூலகம் எரிந்தது. அரிய பல நூல்கள் அழிந்துவிட்டன. அவ்வளவு தான். அவற்றில் பல நூல்கள் எங்கும் எப்போதும் தேடிப் பெற முடியாதவை. இனி அவை கிடைக்கப்போவதில்லை. மீண்டும் பல நூலகங்களை உருவாக்கலாம். பெரும் தொகையான நூல்களைச் சேமிக்கலாம். ஏட்டுச் சுவடிகளைத் தேடி எடுத்துக் காட்சிப்படுத்தி வைக்கலாம். இவை மீண்டும் திட்டமிட்டு எரியூட்டப்படலாம் அல்லது இயற்கை அனர்த்தங்களால் காவு கொள்ளப்படலாம். இதனை எவ்வாறு காப்பது? இதற்கு மாற்று என்ன?

(13ஆம் பக்கம் பார்க்க)

அமெரிக்கப் பூனையும் சோமாலியப் பூனையும்

உலக அளவில் பூனைகளுக்கான குத்துச்சண்டை போட்டி நடைபெற்றது. அனைத்து நாட்டுப்பூனைகளையும் வீழ்த்தி அமெரிக்கப் பூனை முன்னிலையில் இருந்தது. இந்தியப் பூனை, பாகிஸ்தான் பூனை, ஜேர்மன் பூனை, அவுஸ்ரேலியப் பூனை இப்படி அத்தனை நாட்டுப் பூனைகளும் அமெரிக்கப் பூனையிடம் அடிவாங்கிச் சுருண்டு கிடந்தன.

அமெரிக்கப் பூனையல்லவா? பாலும், இறைச்சியும் அளவுக்கு அதிகமாக உண்டு வாட்டசாட்டமாக இருந்தது.

கடைசிச் சுற்றில் அமெரிக்கப் பூனையிடம் சோமாலிய நாட்டுப் பூனை மோதப்போவதாக அறிவித்தார்கள்.

பார்வையாளர்களுக்கு வியப்பு. சோமாலியா நாட்டுப் பூனை நோஞ்சானாக மெலிந்து, நடக்கவே தெம்பற்று, மேடையேறியது. பார்வையாளர்கள் கேலியும் கிண்டலுமாகச் சிரித்தார்கள். போட்டி தொடங்கியது.

அமெரிக்கப் பூனை அலட்சியமாக சோமாலியப் பூனையின் அருகில் நெருங்கியது. சோமாலியப் பூனை முன்னங் காலைச் சிரமப்பட்டுத் தூக்கி ஒரே அடி. அமெரிக்கப்பூனை கண்கள் இருண்டு மயங்கிச் சரிந்தது. பார்வையாளர்கள் அதிர்ச்சியில் வாயடைத்து நின்றார்கள்.



சற்று நேரம் சென்றபின், மெதுவாகக் கண்விழித்துப் பார்த்த அமெரிக்கப் பூனைக்கு ஒன்றுமே புரியவில்லை. சோமாலியப் பூனையின் கழுத்தில் தங்கப்பதக்கம் தொங்கியது. மெதுவாக எழுந்து சோமாலியப் பூனையின் அருகில் சென்று இவ்வளவு பலசாலியான என்னை நோஞ்சான் பூனையான நீ வீழ்த்தியது எப்படி? என்று கேட்டது அமெரிக்கப் பூனை.

அமெரிக்கப் பூனையின் காதில் மெதுவாக "நான் பூனையே இல்லை, புலி.

பஞ்சத்தில் இப்படியாகி விட்டேன்". என்றது சோமாலியப் பூனை .

பாலும், கறியும் உண்டாலும் பூனை பூனைதான்!

பட்டினி கிடந்தாலும் புலி புலி தான்! எல்லோருக்கும் நேரம் எப்போதும் கைகொடுப்பதில்லை ...

நம்பிக்கையோடு செயற்படுங்கள் வெற்றி உங்களுக்கே.

சவாலே சமாளி

கீழே உள்ள 10 குறிப்புகள் குறிப்பிட்ட ஒரு நாட்டைக் குறிக்கின்றன. அந்த நாடு எது என்பதைக் கண்டுபிடியுங்கள்.

1. தென் பசிபிக் கடலில் உள்ள தீவு நாடு.
2. இங்கு வசிப்பவர்களில் சுமார் 40 சதவீதம் மக்கள் இந்தியாவைப் பூர்வீகமாகக் கொண்டவர்கள்.
3. இந்த நாட்டின் தலைநகரம் சுவா.
4. வெள்ளை மணல் கடற்கரைகள், அழகிய தீவுகள், பவளத்திட்டுகள் என்று சுற்றுலா பயணிகளை வசீகரிக்கக் கூடிய நாடு.
5. இந்த நாட்டில் ரக்பி மிகப் பிரபலமான விளையாட்டு.
6. இந்த நாட்டில் உள்ள 323 தீவுகளில் 100 தீவுகளில் மட்டுமே மனிதர்கள் வசிக்கிறார்கள்
7. அபேல் டாஸ்மான் என்பவர்தான் இந்த நாட்டைக் கண்டுபிடித்த முதல் ஐரோப்பியர்.
8. இந்த நாட்டின் பிரதமராக இந்திய வம்சாவளியைச் சேர்ந்த மகேந்திர பால் சௌத்ரி இருந்திருக்கிறார்.
9. உலகப் புகழ்பெற்ற கோல்ஃப் வீரர் விஜய்சிங் இந்த நாட்டைச் சேர்ந்தவர்.
10. இந்த நாடு 1970 ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்றது.

கதை சொல்வோம்...

சிறுவர்களே! உங்கள் கற்பனை உலகத்தில் உருவாகும் கதைகளை எங்களுக்கு அனுப்பி வையுங்கள். தரமான கதைகள் எதிரொலி வாரமலரில் பிரசுரமாகும் .

அனுப்ப வேண்டிய முகவரி....

'கதை சொல்வோம்'
அம்பலம் பதிப்பகம்,
இல. 241,
கைதடி – மானிப்பாய் வீதி,
உடுவில், யாழ்ப்பாணம்.
அல்லது
ethirolimedia@gmail.com

முன்னோடிகள்
நெல்சன் மண்டேலா

❐அடிமைத்தனத்தை விரட்ட வந்த நெல்சன் மண்டேலா, 1918 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 18 ஆம் திகதி தென்னாபிரிக்காவில் உள்ள சின்னஞ்சிறிய கிராமத்தில் பிறந்தார்.

❐மண்டேலா தனது சட்டக்கல்வியை 1941 ஆம் ஆண்டு முடித்தார்.

❐இவர் தன்னுடைய 21 ஆவது வயதில் கறுப்பின இளைஞர்களை ஒன்றிணைத்து, ஆங்கில ஆட்சியின் கொடுமைகள் குறித்த விழிப்புணர்வை மக்களிடம் கொண்டு சேர்த்தார்.

❐தென்னாபிரிக்காவின் கனிம வளங்களைக் கொள்ளையிட வந்த கூட்டம், அந்த மண்ணின் மக்களையே அடிமைப்படுத்தி விலைக்கு விற்பதைத் தடுக்கப் போராடினார். அதற்காக 1943 ஆம் ஆண்டு ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ் எனும் இயக்கத்தில் சேர்ந்தார்.

❐1994 ஆம் ஆண்டு நடந்த முதல் ஜனநாயகத் தேர்தலில் அமோக வெற்றி பெற்று தென்னாபிரிக்காவின் ஜனாதிபதி ஆனார் நெல்சன் மண்டேலா.

❐உலக சமாதானத்தையும் விடுதலை கொண்ட மக்கள் கூட்டத்தையும் விரும்பிய மக்கள் தலைவர் மண்டேலா 2013 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 5 ஆம் திகதி தனது 95 ஆவது வயதில் காலமானார்.

வாழ்த்தலாம் வாங்கோ

ஹாய் குட்டீஸ்!

ஓகஸ்ட் மாதத்தில் பிறந்தநாள் கொண்டாடும் சிறார்களின் விவரங்களை, இப்படிவத்தில் பூர்த்தி செய்து, வெட்டி, தெளிவான புகைப்படத்துடன் அனுப்புங்கள். உங்களை வாழ்த்துவதற்கு எதிரொலி தயாராக உள்ளது.

பெயர் :_____

பிறந்த திகதி :_____

வயது :_____

முகவரி :_____

_____

தொலைபேசி இலக்கம் :_____

வாழ்த்தலாம் வாங்க
அம்பலம் பதிப்பகம்,
இல. 241,
கைதடி – மானிப்பாய் வீதி,
உடுவில், யாழ்ப்பாணம்.
அல்லது
ethirolimedia@gmail.com

வானத்தையே வசமாக்க துடிக்கும் இரட்டையர்கள்

எந்தவொரு வயதும் மிகவும் குறைந்தது இல்லை. எந்தவொரு கனவும் மிகவும் பெரியது இல்லை என்பதற்கு மிகச் சிறந்த உதாரணம் ஆனந்த் மற்றும் மொஹாக்.

டெல்லியைச் சேர்ந்த ஆனந்த் மற்றும் மொஹக் என்ற இந்த இரண்டு மாணவர்களும் மொபைல் சாதனங்களுக்கான சிறிய சார்ஜராகச் செயற்படும் ஒரு சப் பாத்தைக் கண்டுபிடித்துள்ளனர். அதை அவர்கள் "வாக்கி மொபி சார்ஜர்" என்று அழைக்கின்றனர். இது பொதுவாக சார்ஜர்கள் உருவாக்கும் 5 வோல்ட்களைக் காட்டிலும் 6 வோல்ட் மின்சாரத்தை உருவாக்குகிறது.

இந்த இளம் சாதனையாளர்கள் புதுமையாகச் சிந்தித்து தொழில்நுட்பத்தைச் சரியான முறையில் பயன்படுத்தி உள்ளனர். உங்கள் வயது எதுவாக இருந்தாலும், தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி எதையுமே சாதிக்க முடியும் என்பதை இவர்கள் நிரூபித்துள்ளனர். சிறார்களே! இவர்களின் செயல்களில் ஈர்க்கப்பட்டு, உங்களின் சாகசத்தை நீங்களும் தொடங்குங்கள்.

'வீரத்தில் குஞ்சென்றும் மூப்பென்று உண்டோ' என்ற வரிகளை மெய்ப்பிக்கும் வகையில் நம்மிடையே பல இளம் சாதனையாளர்கள் உள்ளனர். உங்களுக்குத் தெரிந்த இளம் சாதனையாளர்கள் பற்றி நீங்களும் எழுதலாம்.

ஒக்கீனிக் குஞ்சு
அம்பலம் பதிப்பகம்,
இல. 241,
கைதடி – மானிப்பாய் வீதி,
உடுவில், யாழ்ப்பாணம்.
அல்லது
ethirolimedia@gmail.com

கோயிலுக்கு போகும் கோத்தா

2020இல் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற விருந்தாலும் இம்முறை முன்கூட்டியே அரசியல் களம் சூடுபிடிக்கஆரம்பித்துள்ளது. இரண்டு பிரதான கட்சிகளும் தமது வேட்பாளர் விவரத்தை அறிவித்துள்ளபோதிலும் இறுதிநேரத்தில் அதிரடிமாற்றங்கள் நிகழக்கூடுமென்பதேஅரசியல் ஆய்வாளர்களின் கணிப்பாக உள்ளது.

இலங்கையில் தற்போது எங்கு சென்றாலும் எட்டுத்திக்கிலும் கோத்தபாயவின் பெயர்தான் அடிபடுகின்றது. ஒருபுறத்தில் அவரின் அருமை,பெருமைகள் பற்றிப்பேசப்பட்டாலும் மறுபுறத் தில் அவரின் முன்னைய கால அடாவடி,கட்டபஞ்சாயத்துக் குறித் தும் பேசப்படுகின்றன.

மஹிந்த ராஜபக்ச கைகாட்டினால் கல்லைக் கூட கடவுளாக ஏற்பதற்குத் தயாராகவிருக்கும் கூட்டு எதிரணி உறுப்பினர் கள்,கோத்தபாயவின் பெயர் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்ப டாத போதிலும் அவருக்காக இப்போதே களத்தில் இறங்கி சேவை செய்ய ஆரம்பித்துள்ளனர்.

ஆரம்பத்தில் 'விகாரைஅரசியலை'தேர்ந்தெடுத்த கோத்தா, பன்சலைகளை மையப்படுத்தியே பரப்புரைகளில்ஈடுபட்டுவந்தார். சிங்கள, பௌத்த வாக்கு வங்கியையே குறிவைத்தார். எனினும், சிறுபான்மையின மக்களையும் அரவணைத்தே பயணிக்க வேண்டு மென்றும், இனவாதத்தை மட்டும் முழுமையாக நம்பக் கூடாதென்றும் கோத்தாவின் முக்கிய சகாக்களால் அவருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

"விகாரைகளுக்கு மட்டும் சென்றால் அது உங்களை வேறு விதமாக அடையாளப்படுத்திவிடும். ஆகவே,அனைத்து மத ஸ்தலங்களுக்கும் செல்லுங்கள்" என அவருக்கு அறிவுறுத் தப்பட்டுள்ளது. அதிலும் குறிப்பாக கோத்தாவின் பக்கமுள்ள குருக்கள் ஒருவர்,பஞ்சஈஸ்வரங்களுக்குத் திருயாத்திரை மேற் கொள்ளுமாறு மதியுரை வழங்கியுள்ளாராம். இதன்படி கோத் தாவின் ஆன்மீக அரசியல் விரைவில் தொடங்குமென்பதே லேட் டஸ்ட் தகவல். ■

பேர் சொல்ல ஒரு கட்சி

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஸ்தாபகத் தலைவரான பண்டாரநாயக்கவே, அந்தக் கட்சியின் வளர்ச்சிக்கு வழியமைத்துக் கொடுத்தவர். குறுகிய காலத்துக்குள்ளேயே ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியவர்.

அதுமட்டுமல்ல, மக்கள் நலன்சார் அரசியலை முன்னெ டுத்தவர். இதனால்தான் இன்றள விலும் சு.க. ஆதரவாளர்கள் பண்டாரநாயக்க கொள்கையெனப் பெருமையாகபேசுவர்.

2005 ஆம் ஆண்டு மஹிந்தராஜபக்ச, சு.கவின்தலைவராகத்தெரிவானபின்னர் சு.கவை பல வழிகளிலும் பலமடையச் செய்தார். நாடாளுமன்றத்தில் விசேடபெரும் பான்மையையும் அந்தக் கட்சிகொண்டிருந்தது. பலதேர்தல்களில் வெற்றிவாகையும் சூடியது.

இருந்தும் பண்டாரநாயக்கவின் கொள்கைகள் பற்றியும்,அவரது குடும்பம் குறித்துமே பெரிதாக பேசப்பட்டது. எனவே,பண்டாரநாயக்கவின் நாமத்தை ஒழித்து, ராஜபக்ச குடும்பத் தின் நாமத்தை மேலோங்கச் செய்வதற்கு மறைமுகமாக மஹிந்த பல நடவடிக்கைகளை முன் னெடுத்தாலும் அது கைகூடவில்லை.

எனினும், பஸில்ராஜபக்சவின் ஒருங்கமைப்பின்கீழ் உள்ளூராட்சிசபைத் தேர்தலை எதிர் கொண்ட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு மஹிந்த தலைமை வழங்கினார். அத் தேர்தலில் தாமரை மொட்டு அணி வரலாற்று வெற்றியைப் பதிவுசெய்தது. சு.கவின் பண் டாரநாயக்க கொள்கையைப் போல், தாமரைமொட்டு மஹிந்தசிந்தனையைப் பின்பற்றியது.

ஆகவே, ராஜபக்சக்களின் பெயர் சொல்வதற்கு துறைமுகம்,விமானநிலையம் எனப் பல இருந் தாலும்,பிரதானதொரு அரசியல் கட்சி இல்லை. எனவே, இனிவரும் காலத்தில் ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் கீழேயே கூட்டணி அமைக்கப்படவேண்டும் என்பதில் ராஜபக்ச குடும்பம் உறுதியாக இருப்பதாகத் தகவல். ■

கூ தோடு திறாக நிமல் போடும் கணக்கு

கூட்டு எதிரணியின் பலில் ஆதரவு அணி எம்.பியான நிமல் லான்ஸா தற்போது கடும் அதிருப்தியில் இருக்கிறாராம்.

கூட்டரசிலிருந்து வெளியேறிய சுதந்திரக் கட்சியின்16 பேர்கொண்ட அணியினருக்கு, கூட்டுஎதிரணிக்குள் இடமளிக்கப்படக் கூடாதென பலிலின் தீவிர விசுவாசிகளான பிரசன்னரணதுங்க,நிமல் லான்ஸா ஆகிய எம்.பிக்கள் வலியுறுத்தினர். எனினும், இவர் களின்கோரிக்கைகண்டுகொள்ளப்படவில்லை.

இதையடுத்து 16 பேர் கொண்ட அணி யினரைப் பொதுவெளியில் இவ்விருவரும் கடுமையாக விமர்சிக்கத் தொடங்கினர். அர சியல் கொள்கையற்ற பச்சோந்திகள் என்று கூட சொற்கணை தொடுக்கப்பட்டது. இதன் காரணமாகவே,மீண்டும் சுதந்திரக்கட்சிக்கே செல்வதற்கு தயாசிறி ஜயசேகர தயாராகி வருகிறார்.

ஏனையவர்கள் தாமரை மொட்டுடன்சங்கமித்தே தேர்தலை எதிர்கொள்ள வுள்ளனர். எனவே, அதி ருப்தியில் இருக்கும் நிமல் லான்ஸா விரை வில் ஜாதிக ஹெல உறுமயவில் இணைய வுள்ளார் என்றும் அதற்கான பேச்சுகள் ஆரம்பமாகியுள்ளன என்றும் நம்பகரமான வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.

ஜாதிக ஹெல உறுமயவில் இணைந் தால், அடுத்த தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் பட்டியலில் போட்டியிடலாம் என்பதே அவரின் மனக்கணக்காக இருக் கின்றதாம். ■

தேர்தலில் ஒத்திகை

மலையகத்தில் முக்கிய அரசியல் - தொழிற் சங்கங்களுள் ஒன்றான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸில் விரைவில் அதிரடிமாற்றங்கள் நிகழவுள்ளதாக அரசல், புரச லாகக் கதை அடிபடுகின்றது.

முற்போக்கு கூட்டணியின் செயற்பாடுகள் மீது அதிருப்தி நிலையிலுள்ள சில முக்கிய அரசியல் புள்ளிகள்,சேவல் மீது சவாரி செய்வதற்காகக் குத் துக்கரணம் அடிக்கவுள்ளனராம். அதற்கான ஏற்பாடுகள் யாவும் இரகசியமாக இடம்பெற்று வருகின்றது.

மாகாணசபைத் தேர்தலைக் குறிவைத்தே இந் தத் தாவல்கள் அரங்கேறவுள்ளன என்றும், அவற்றைத் தடுத்து நிறுத்துவதற்காகப் பேரம் பேசும் படலம் ஆரம்பமாகியுள்ளதாகவும் மலை யக அரசியல் களத்தில் பெரும் பரபரப்பாகப் பேசப்படுகின்றது.

இது ஒருபுறமிருக்க, இ.தொ.கா.வின் தலைவர் மற்றும் பொதுச்செயலாளரான ஆறுமுகன் தொண் டமானின் மகனான ஜீவன் தொண்டமானை மாகாணசபைத் தேர்தலில் களமிறக்குவதற்குரிய ஏற்பாடுகளும் தடல் புடலாக இடம்பெற்று வரு கிறதாம்.

நாடாளுமன்றத் தேர்தலுக்கான ஒத்திகையாகவே மாகாணசபைத்தேர்தலை இ. தொ.க அணுகவுள்ள தாகவும் ஒரு கதை உலாவுகின்றது. ■

மறக்க முடியுமா மரபை?

மனித குல நாகரீக வளர்ச்சியில் கிராமங்களது பங்கு அளப்பரியது. கிராமிய வாழ்வின் இனிமைகள் உன்னதமானவை. வசதிகள், வாய்ப்புகள் வந்து வாழ்க்கைத்தரம் உயர்ந்தாலும் கிராமிய வாழ்வின் இனிமைகளை இரை மீட்டாத மனிதர்களே இல்லை எனலாம். கிராமங்களது வாழ்க்கை முறை நல்ல பண்புகளை மனிதர்களுக்குக் கற்றுத் தரும். கூட்டுக் குடும்ப வாழ்க்கையும் கிராமிய வாழ்க்கையின் உன்னதங்களில் ஒன்று.

தனித்துவமான உபகரணங்கள், பழக்க வழக்கங்கள் கிராமங்களில் இருந்தன. மனித குலத்தின் வசதிகள் பெருகிய போது வேகமான வாழ்க்கை முறை அவற்றை அற்றுப்போகச் செய்துவிட்டது. அவற்றில் சிலவற்றைப் பார்ப்போம்.

பொட்டும் கடப்பும்

- கிராமியப் பண்பாட்டின் இழந்து போன இழந்து வரும் அடையாளங்களில் பொட்டு ஒன்றாக உள்ளது. வேலி ஒன்றின் கீழ் அரைவாசிப் பகுதியை வெட்டி விட்டுப் பாதை வைத்தால் அது பொட்டு. அதாவது புகுந்து போக வழி விட்டால் அது பொட்டு.

அது போல வேலி ஒன்றின் அரைவாசி பகுதியின் மேலே கடந்து போக வழி விட்டு வெட்டினால் அது கடப்பு.

பொட்டு என்பதற்கும் கண்டாயம் என்பதற்கும் வேறுபாடுகள் உள்ளன. கண்டாயம் என்றால் வேலியின் ஒரு பகுதி மேலிருந்து கீழாக முழுமையாக முழுவதுமே திறந்திருக்கும். ஆனால் பொட்டு என்பது இடுப்பளவு உயரத்தில் வேலி திறந்திருக்கும். ஆனால் மேற்பகுதி அடைப்பாகவுமிருக்கும்.

பொட்டு என்பது அடைத்த வேலியின் அடிப் பக்கத்தில் வட்டமாகவோ அல்லது சதுரமாகவோ பிரித்த துவாரவழி வழியாக இருக்கும். கண்டாயம் என்பது வேலியின் ஒருபகுதியைப் பிரித்து விடல். சில இடங்களில் கடப்பு என்பது அடைத்த வேலியிருக்க இருபுறமும் இரண்டு, இரண்டு சிறிய கப்புகள் நாட்டி வளைதடி வைத்துக் குறுக்குத்தடி பரவி மட்டை நாரால் வரிந்து கடந்து போகும் வழியாகும் .

யாழ்ப்பாணத்தின் தீவகத்தின் சில பகுதிகளில் வேலியில் போகும் வழியை கடப்பு என்றும் கூறுகிறார்கள். அது புகுந்து போவது போல இல்லாமல் கடந்து போவதற்குரியது. காரணப்பெயராக இருக்கக் கூடும். சில கிராமங்களில் கிராமத்தில் பொட்டு என்றால் வேலியில் ஒரு துவாரம் இருக்கும். அந்தத் துவாரத் தினூடாக பெண்கள் பக்கத்து வீடுகளுக்கு சென்று வருவர்.

வட பிரதேச கிராமங்களில் இந்த அமைப்பு சாதாரண விடயமாக முன்னர் இருந்தது.பொட்டு ,கடப்பு என்பவை கிராமத்திற்கு கிராமம், மாவட்டத்திற்கு மாவட்டம் வேறுபட்ட வகையில் இருந்தது. மக்கள் தமது வசதிகளுக்கு ஏற்ப இந்த வடிவத்தை மாற்றினார்கள். கால கதியில் மதில்கள் வளவை பிரிக்க பொட்டு கடப்பு என்பவை வழக்கொழிந்து வருகின்றது.

போர்க் காலத்தில் ஊரடங்கு நேரத்தில் பிரதான பாதைக்குப் போகாமல் பயணிக்க பொட்டு,கடப்பு என் பவை உதவியது. இத்தகைய வழிகள் இல்லாவிட்டால் இன்னும் ஏராளமான உயிரிழப்புகள் ஏற்பட்டிருக்கும். அதே வேளை உறவை,காதலை வளர்க்கவும் இவை உதவின. கடப்பு அடைபட்டது. பொட்டுக்களால் எட்டி எட்டிக் கண்ணடித்து காதல் மொழிகள் பேசிய மாந்தர்களது காதலில் உள்ள இனிப்பு அனுபவித்துப் பார்த்தவர்களுக்கு தான் தெரியும். உறவு இனிக்கும் போது பொட்டு,கடப்பு தொடர்ந்தது. உறவு கசந்தால் பொட்டு,கடப்பு அடைபட்டது.

இவற்றுக்கெனப் பெரும் சுவையான வரலாறுகள் உள்ளது. இந்த பொட்டு, கடப்பு காலவரோதய (ஆட்சியுரிமை) சட்டத்தோடு தொடர்புடையது. 3 அடி அகலத்துக்கு மேல் முழுமையாகத் திறந்து விட்டால் படலை போட்டால் பின்பாதைப் பாவிப்புரித்து உரிமை கோர வழிவகுக்கும். காணிகளின் உறுதி எழுதும் போது வழி வாய்க்கால் பாவிப்பு உரித்து என எழுதி பொட்டு, கடப்பு சட்ட பூர்வமான பாதையாக மாறியதும் நிகழ்ந்து உள்ளது.

சிறாம்பி

சிறாம்பி என்பது கப்புகள் வரிச்சுத்தடிகள் நார்கள் அல்லது மான்கொடிகளால் வரிந்து கட்டில் போல் செய்து வயலிற் படுக்கப் பாவிக்கும் சாதனம் ஆகும். முல்லைத்தீவு மாவட்டத்தில் இது பெருமளவு வழக்கில் உள்ளது. ஏத்துக்கொட்டில் கமக்காரன் வயலிற்குள் பாதுகாப்பாக அமைக்கும் குடிசையாகும்..ஏத்தில் ஏறிப்படுத்திருந்து கமக்காரன் வயலை மிருகங்களிட மிருந்து பாதுகாக்க காவல் காப்பான்.

சிறகு கொட்டில் என்பது உள்ளே உயரமான மேடைசெய்து மண்போட்டடித்து மெழுகப்பட்டு கூரைவட்டவடிவில் பனையோலையாற் சிறகடித்து வேயப்பட்டிருக்கும் ஓர் அமைப்பு ஆகும்.

குச்சு என்ற கிராமியப்பாசை மிகச்சிறிய தடியைக் குறிக்கும்.

இவை போல எங்கள் மரபார்ந்த வாழ்வியலோடு இணைந்து இன்று மெல்ல மெல்ல வழக்கொழிந்து வரும் பல பொருட்கள் இருக்கவே செய்கின்றன. அவற்றையெல்லாம் விலாவாரியாகப் பார்த்தால் பக்கம் பக்கமாக மூதிக் கொண்டே போகலாம். எனவே வாசகர்களுக்காக அவை பற்றி சின்னதான சில குறிப்புகள் இங்கு தரப்படுகின்றன.

- அடைவியன் என்பது பனையோலையின் கழிவில் (ஈர்க்குப்பக்கமல்ல. அதன் எதிர்ப்பக்கத்தைப் பயன் படுத்தி) செய்யப்படும் சிறு கைவிளக்குமாறு ஆகும். மெழுகிய வீட்டைக் கூட்டுவதற்கு இது உப யோகப்பட்டது.

- ஒத்தாப்பு என்பது வீட்டின் பக்கவாட்டில்ஃ பின்புறம் வீட்டோடு சேர்த்து சாய்வாகக் கட்டப்படும் பத்தி ஆகும்.

- மால் என்பது வீட்டின் உள்முன்புறம்.இதை ஆங்கிலத்திலும் Mall என்றுதான் சொல்வார்கள்.

- திருகணை என்பது மண்சட்டியில் வைத்த குழம்பு,சொதி போன்றவை சிந்தி விடாமல் சட்டி சரிந்து விழாமல் இருக்க சட்டியின் கீழ்வைக்கப்படும் வளையம்.(இதுவும் முன்பு குறிப்பிட்ட பனையோ லைக்கழிவில் செய்வதே)

- ஆடுகால் என்பது தோட்டக்கிணற்றில் நீரிறைக்க உதவும் துலாவைத் தாங்கி நிற்கும் மரம் அல்லது மரங்கள் .

துலா மிதிக்க ஒருவர் தேவை. சிலவேளை மிகவும் ஆழக்கிணறு ஆயின் துலா மிதிக்க இருவர் தேவை.

- துலாவோடி- மேலே சொன்னதே!பட்டையில் தோட்டத்தில் நீரிறைக்க ஒருவர் கயிறுபிடிக்க மற்றும் ஒருவர்/இருவர் துலாவில் முன்பின்னாய் நடந்து துலாவைகுனிந்து நிமிரச்செய்வர்.இவர்களே துலா வோடிகள்.

- கட்டிதழ்:-பனையோலைப்பெட்டி அறிவீர்கள். அதை இழைப்பதற்கு ஓலையை ஒரேயளவில் வாரு வதற்கு ஓலையின் அடிப்பக்கத்தை வெட்டி மடித்து அதனுள் ஓலையை ஒரேயளவில் வார உதவும் பகுதி.

- கொக்கத்தடி:-ஆடுமாடு வளர்ப்பவர்கள் உயர மரங்களில் இலைகுழை வெட்ட/தென்னையில் தேங்காய்பறிக்க நீண்ட தடி/மூங்கிலில் சத்தகம் எனும் கத்தியைக் கட்டி பறிப்பார்கள்.



- தளநார்:-பனை தென்னையில் கள் எடுக்க ஏறும்போதே கால்களில்பனம்நாரால் செய்த வளையம் அணிவார்கள். அதுவே தளநார் எனப்படுகிறது.

-இயணைப்பெட்டி:-மேற்படி இவர்களே இடுப் பில் கட்டும் உறை(இதனுள் பாளை சீவும் கத்தி,கள்ளில் கலக்கும் சுண்ணாம்பு என்பவற்றை கொண்டு செல்வர்).

-பட்டை:-பனையோலையால் செய்த ஐந்து மூலைகள் கொண்ட பெட்டி..தோட்டக்கிணற்றில் துலாமூலம் வடம் கட்டி நீர் அள்ளும் பனை யோலைப்பட்டை.

இந்தச் சொற்களும், அவை சுட்டி நின்ற பொருட் களையும் நாங்கள் நாகரீகம், தொழிநுட்ப வளர்ச்சி யால் ஒதுக்கி விட்டாலும், அவை எங்களின் வாழ்வின் ஒருபகுதியாக ஒரு காலத்தில் இருந்ததை மறக்க முடியுமா?

● வேதநாயகம் தபேந்திரன்

இரவின் மடியில்

நிலாவொளியின் அணைப்பில்
நிசப்தமாய் என்னருகே வந்து
இரவு என்னும் போர்வைக்குள்
இதமாய் கதைகள் பல பேசி
நினைவுகளும் கனவுகளும்
நிலையில்லாது நீளும் இரவுதனில்
மல்லியும், கள்ளியும் மணம் வீச
மணம் கொண்ட மனமோ அலைமோதும்

நீங்காத கற்பனைகளை விழி மூடிக்காண
நீள் வானில் தாரகைகள் பல சூழ
வான்முகில்கள் ஆடையாய் மாறி
வான் வீசும் தென் காற்றில் உள்ளம் பூரிக்க
நடப்பவையும் நடந்தவையும் சொர்க்கத்தை ஆள
நங்கையர் வாழ் தேவலோகமே புடைசூழ
நீ அருகில் இல்லாத சுமை கூட காற்றில் பறந்து
நீண்டதோ என் இரவுறக்கம்...

-சுஜா-



பத்துக்குப் பொருத்தம்

ரஷ்யாவில் மையங்கொண்டு உலகம் முழுவதும் சுழன்று கொண்டிருந்த உதைபந்தாட்ட சூறாவளி, சற்று ஓய்ந்து தற்போது பிரான்ஸில் மையங்கொண்டு, கொண்டாட்டங்களுடன் பலியெடுப்புகளையும் நிகழ்த்தி விட்டு இன்னும் ஓய்ந்தபாடில்லாமல் சுழன்றுகொண்டிருக்கிறது.

பிரான்ஸில் மையக்கொள்ளக் காரணமானவர்களுள் முக்கியமான ஒருவர், இளம் நாயகனான எம்பாப்பே. இவர்தான் இந்த உலகக் கிண்ணத்தின் சூப்பர் ஸ்டார். இளம் வீரரான இவரின் வயது 19 மாத்திரமே.

1998 ஆம்ஆண்டு டிசெம்பர் 20ஆம் திகதி பிரான்ஸின் பரிஸ் நகரில் பிறந்த இவர், கழக அணிகளில் இடம்பிடித்து தனது திறமைகளைக் காட்டினார். 2004-2013 காலப் பகுதியில் சிறுவர்களுக்கான ஏ.எஸ். பொன்டி அணிக்காகவும், பின்னர் 2015 வரை மொனாகோ அணியிலும் இடம்பிடித்தார்.

பின்னர் இளம் வீரர்களைக் கொண்ட மொனாகோ அணியில் இடம்பிடித்த இவர், நடப்பு ஆண்டில் பரிஸ் செய்ன்ட் ஜேர்மைன் அணிக்குக் கடனடிப்படையில் மாற்றம்பெற்றார்.

இவரின் கழக நிலவரம் இவ்வாறிருக்க, தேசிய அணியான பிரான்ஸ் அணியில், 17 வயதுக்குட்பட்ட பிரிவில் 2014ஆம் ஆண்டும், 19 வயதுக்குட்பட்ட அணியில் 2016ஆம் ஆண்டும் இடம்பிடித்தார்.

இதன் தொடர்ச்சியாக தேசிய அணியில் மூத்த வீரர்களுடன் விளையாடும் வாய்ப்பை 2017ஆம் ஆண்டு பெற்றார்.

முன்கள வீரராகக் களமிறங்கும் இவர், தனது தடத்தை மிக அழுத்தமாகப் பதிவு செய்தத் தவறவில்லை. இதன் பயனாக நடந்து முடிந்த உலகக் கிண்ணத் தொடரிலும் களமிறங்கும் வாய்ப்பைப் பெற்றார்.

உதைபந்தின் கடவுள் என வர்ணிக்கப்படும் பீலே செய்த சாதனைகளை தன் முதல் உலகக் கிண்ணத்திலேயே இவரும் நிகழ்த்தியுள்ளார். 16 அணிகள் சுற்றில் ஆர்ஜென்ரீனாவுக்கு எதிராக இவர் அடித்த இரு கோல்கள்தான், பிரான்ஸ் அணியை புதிய பாதைக்குத் திருப்பியது.

அந்தப் போட்டியில் 4:3 என்ற கோல் கணக்கில் பிரான்ஸ் வென்றதும், இவர் ஆட்ட நாயகனானதும் அந்த அணியின் திருப்பு முனை.

இறுதியாட்டத்தில் குரோஷியாவை வீழ்த்தி பிரான்ஸ் அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற, அந்த அணியின் நான்கு வீரர்கள் போட்ட கோல்கள் காரணமாக அமைந்தன. இந்தக் கோல்களில் எம்பாப்பேயின் கோலும் அடக்கம்.

இந்தத் தொடரில் மொத்தம் நான்கு கோல்களைப் போட்ட எம்பாப்வே, அதிக கோல்களைப் போட்ட வீரர்கள் வரிசையில் இரண்டாவது இடத்தைச் சில வீரர்களுடன் பகிர்ந்துகொண்டார். இங்கிலாந்து அணித்தலைவர் ஹரி றானே 6 கோல்களைப் போட்டு, தங்கக்காலணியை வென்றார்.

இந்தத் தொடரில் பல்வேறு பிரிவுகளில் வெவ்வேறு பிரிவுகளில் விருதுகள் பலருக்கும் கிடைத்திருந்தாலும், எம்பாப்வேக்குக் கிடைத்த இளம் வீரருக்கான விருது பெரியளவிலான அங்கீகாரமாகக் கருதப்படுகிறது. ஏனைய வீரர்களின் விளையாடும் காலம் குறுகிவிட்டதும், இவரின் காலம் இப்போதுதான் ஆரம்பித்திருப்பதுமே அதற்கான காரணமாக அமைகின்றது.

அடுத்து வரும் உலகக் கிண்ணத் தொடருக்கிடையில் இவர், உதைபந்தாட்டஜாம்பவானாகஉருவெடுத்தாலும் ஆச்சரியம் இல்லை.

தற்காலத்தில் ஆர்ஜென்ரீனாவின் மெஸி, போர்த்துக்கல்லின் ரொனால்டோ மற்றும் பிரேஸிலின் நெய்மர் ஆகியோரின் வரிசையில், இவருக்கான இடம் காத்திருப்பதாகவே பார்க்கப்படுகிறது.

அதிலும், இவர் பீலே, மரடோனா, மெஸி, நெய்மர் போன்ற நட்சத்திர வீரர்கள் அணியும் 10ஆம் இலக்கம் பொறிக்கப்பட்ட ஜேர்சியை அணிந்து விளையாடுபவர் என்பது இவரது திறனுக்குக் கிடைத்த பரிசாகவே பார்க்கலாம். ■

காலம் எம்மையும் ....

(03 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குரோஷியா, யூகோஸ்லாவியா விடமிருந்து சுதந்திரம் பெற்றுத் தனித்தேசமாகியது.

2013ஆம் ஆண்டில் ஐரோப்பிய யூனியனில் உறுப்புரிமை அந்தஸ்து வழங்கப்பட்ட 'குரோஷியா'வின் மீதான உலகப் பார்வை சுதந்திர மடைந்து, 17 வருடங்களுக்குப் பிறகு குவியப்படுத்தப்பட்டமைக் கான காரணம் - 'ஒரு தோல்வி'!

10 வருட பிணந்தின்னி ஆட்சிக்குப் பிறகும், அதே சர்வாதிகார இனவழிப்பு போர்க்குற்றவாளிகளின் தலைமையை மீளுருவாக்கம் செய்யும் சிங்கள மனோநிலையின் முதல்காரணம் - 'தொடர் தமிழினத் தோல்வி'!! இலகுவாகப் புரிந்து கொள்ளப்படக்கூடிய "அடிமை கொள் மனோநிலை" வெளிப்பாட்டினை - ஆட்சியதிகாரத்துக்கான வலுவான பின்புலமாக வரிந்து கொண்டுள்ள தேசமொன்றுடன் இணங்கி - இறங்கிப் பேசித் தான் தீர்வைப் பெற்றுக்கொள்ளவேண்டிய நம்பிக்கை சுத்த 'இலவு' இல்லையா? கோத்தபாய மீளுருவாக்கத்தின் சாத்தியம் தொடர்பான - பிராந்திய வல்லாதிக்கத்தினதும் - உலகின் நிலைமாறு காலநீதி தொடர்பானதுமான நிகழ்தகவுகள் விவாதிக்கப்படக் கூடியளவு தர்க்கப்பொருண்மையை கொண்டிருந்தாலும் கூட, அயலால் அல்லது சகதேசத்தவன் என்ற அன்பின் சொல்லால் அறிமுகப்படுத்தப்படுகின்ற சிங்கள சகோதரனின் ஆழ்மன விரோதத்தினை தெள்ளியதாகத் தெரிந்துகொண்ட பிறகும், நீட்டுகிற நல்லிணக்கத்துக்கு - "முட்டாளிஸம்" ஒத்த சொல்லில்லையா?

முடிவுறுத்தப்படாத முள்ளிவாய்க்காலின் அவலங்களை, காணாமல் ஆக்கப்பட்டோருக்கான தேடலாக - நில மீட்புக்கான நீதிக் குரலாக, ஈடுசெய்யப்பட முடியாத உயிரிழப்புகளாக, மீளக் கட்டியெழுப்பப்படாத பொருண்மிய வலுவாக, திட்டமிட்டு கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்ற இராணுவ அடக்கு முறைகளாக, உடன் படிக்கை குற்றச்செயல்களாகவும் கலாசார பிறழ்வுத் தாக்குதல்களாக ஏதோவொரு வழியில் இன்றளவும் எதிர்கொண்டுள்ள தமிழ் இனத்தின் மீது, சமவேளையிலும் வீரியத்துடன் பிரயோகிக்கின்ற பேரினத்தின் 'அடிமை கொள் மனநிலை' - மாற்றுத் தேவையாக குரோஷியா மாதிரியான விடுதலைப் புரட்சியையும், சிறு தேசமொன்றின் சர்வதேச எழுச்சியையும் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளையும் - குறித்த மாதிரிக்குரிய சுதந்திர வேட்கையும் விதைத்துச் செல்வதில் எள்ளவும் தவறில்லை!. தனித்தேசக் கோரிக்கையை, உயிரிழப்புகளின் தியாகத்தாலும் - இழக்காத மனஉறுதியாலும் சாத்தியப்படுத்தி, தனக்கான தனிக்கொடியின் வானப்பறப்பை உறுதிசெய்து எழுந்து மிளிர்ந்த குரோஷிய தேசத்தின், குடிகளின் பெரும் குரலோடும் தமிழினத் தாகமும் சேர்ந்து இசைக்கின்றது - "ஆம்! காலம் எம்மையும் விடுதலை செய்யும்" ■

சிங்கள அரைகுறைச் 'சேகுவேரா'வுக்கு...!

வீராதி வீர விமல் வீரவன்ஸ ஐயா,
வணக்கம், பணிகிறேன்

கூட்டாட்சிக்கு சமாதி கட்டுவதற்காக கூட்டணி அமைத்து, இரவு, பகல் பராது தீயாக அரசியல் செய்யும் நீங்கள் மேலும் பல ஆண்டுகள் இப்படியே நலமாக வாழ கறுப்புசாமி காத்தருள வேண்டும் ஐயா.

செங்கோலைத் தூக்கிய செம்மலே, 21 ஆம் நூற்றாண்டின் இனவாத தந்தையே, தேசப்பற்றை அடகுவைத்து தேகம் வளர்க்கும் மாமேதையே என்றெல்லாம் போற்றிபுகழ்ந்து, உங்களை நேரில் சந்தித்து பாமாலை சூட்டுவதற்கு என்னுள் ஆயிரம் ஆசைகள். ஆனால், அந்தப் பாக்கியம் அடியேனுக்கு என்று கிட்டும் ஐயா?

ஜே.வி.பியிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட பின்னர், விலைபோகாத வெத்து பீஸ்களையெல்லாம் அணிதிரட்டி 'புதிய கட்சியை ஆரம்பித்து – இனவாதத்தை காட்டுத்தீபோல் பரப்பி – இன்று சிங்கள மக்கள் மத்தியில் நம்பிக்கை நட்சத்திரமாக வலம்வரும் உங்களை வாழ்த்துவதற்கு தமிழ் அகராதியில் வார்த்தைகளே இல்லை'! (கடலிலேயே இல்லையாம்)

குறுக்குவழி அரசியலில் உச்சம்தொட்ட உங்களுக்கு, நாட்டு நடப்பெல்லாம் அத்துப்படி. ஆனால், வீட்டு நடப்பு தெரியாமல் இருப்பதுதான் பெரும் வேதனையளிக்கின்றது. விழிப்பாக இருந்திருந்தால் வீட்டுக்குள் 'வயக்கரா' வில்லை வந்திருக்குமா என்ன?சிங்களச் சேகுவேரா ஆகும் உங்கள் கனவு பாதியிலே கலைந்து போன கவலை எனக்குமுண்டு.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பீக்கள் தும்மினால் அதன் பின்னணியில் மேற்குலகம் இருப்பதாகவும், கொட்டாவி விட்டால்கூட அது தனி ஈழத்தைப் பெறுவதற்கான நகர்வு என்றெல்லாம் பல கண்டுபிடிப்புகளை செய்யும் உங்களுக்கு இன்னும் நோபல் பரிசு கிடைக்காமை தீவிர ஆதரவாளனான எனக்கு கடும் கவலையை ஏற்படுத்தியுள்ளது ஐயா.

வயிறுமுட்டச் சாப்பிட்டுக் கொண்டே புதுவிதமான உண்ணாவிரதப் போராட்டத்தை உலகுக்கு அறிமுகப்படுத்திய அரசியல் திலகமே, தனக்கு இரண்டு கண்களும் குருடானாலும் பரவாயில்லை, தமிழனுக்குப் பார்வையே வரக்கூடாதென்பதில் குறியாக இருக்கும் நீங்கள் அடுத்த ஜனாதிபதியானால் இந்த நாட்டில் தேனும், பாலும் ஓடுமென என் அறுபத்தாறாம் அறிவு சொல்கின்றது.

எனவே, கோத்தா புகழைப் பாடுவதைவிடுத்து, தாங்கள் முன்னேறும் வழியைப் பாருங்கள் சேர். சொல்வதற்கு – எழுதுவதற்கு ஆயிரம் விடயங்கள் இருக்கின்றன. ஆனால், பொறுமையாக இருந்து வாசிக்குமளவுக்கு தங்களுக்கு நேரமில்லை. இப்போது கூட விலையுயர்ந்த தங்கள் செல்போனைக் கிண்டிக்கொண்டே தான் இந்தக் கடிதத்தை மேலோட்டமாக மேய்ந்து கொண்டிருப்பீர்கள். விரைவில் நேரில் சந்திக்கும் வரம் கிடைக்கும் என்ற அவாவுடன் மடலை நிறைவுசெய்கிறேன்.

உங்கள் விசுவாசி உத்தம புத்திரன்

“மாகாணசபைக்
முதலமைச்சரே
குற்றச்சாட்டுகளை அ

வடக்கு மாகாண சபையில் முஸ்லிம் மக்கள் சார்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நியமனப் பட்டியலூடாக நியமிக்கப்பட்டவர் அய்யூப் அஸ்மின். வடக்கு மாகாண சபையில் முதலமைச்சருக்கு எதிராக உருவான அணியின் முதன்மைச் செயற்பாட்டாளர்களில் ஒருவர். அதேநேரம் தமிழ்-முஸ்லிம் உறவினைப் பலப்படுத்த முயல்வதிலும் அஸ்மினின் பங்கு முக்கியமானதாக இருக்கிறது. அண்மையில் வடக்கு மாகாண அமைச்சர் அனந்தி சசிதரன், பாதுகாப்பு அமைச்சிடம் கைத்துப்பாக்கி வாங்கி வைத்துள்ளார் என்று பரபரப்புக் குற்றச்சாட்டை முன்வைத்து, சர்ச்சைக்குள் சிக்கியுள்ளார். இந்த நிலையில் எதிரொலிக்கு அவர் வழங்கிய நேர்காணல் இது.

● நேர்காணல்: ஒளண்யன்

கேள்வி: நல்லாட்சிக்கான மக்கள் இயக்கத்தின் மூலம் வாக்கரசியலில் நுழைந்த நீங்கள், பின்னர் அந்தக் கட்சிக்கும் உங்களுக்கும் இடையில் செய்யப்பட்ட ‘எழுதப்படாத ஒப்பந்தத்தை’ மீறியே- இன்னொருவருக்குச் சந்தர்ப்பத்தை வழங்காமலே உங்களுடைய பதவியில் தொடர்கிறீர்கள் என்று குற்றம் சாட்டப் படுகிறதே. இது எந்தளவு தூரம் உண்மை?

பதில்: முற்றிலும் பொய்யான தகவல் அல்லது பிழையான புரிதல். என்னுடைய அரசியல் பிரவேசத்துக்கு நல்லாட்சிக்கான மக்கள் இயக்கம் ஒருபோதும் கருவியாக இருந்ததில்லை. நான் நல்லாட்சிக்கான மக்கள் இயக்கத்தின் அங்கத்தவன் அல்ல. முஸ்லிம் சமூகத்தில் விழுமிய அரசியல் குறித்த செயற்பாட்டாளர்களாக நான் 2000 ஆம் ஆண்டு முதல் இருந்து வருகின்றேன். என்னோடு இன்னும் பலர் இதே நோக்கத்துக்காக செயற்பட்டு வருகின்றார்கள், அதில் ஓர் அணியினராகவே நல்லாட்சிக்கான மக்கள் இயக்கமும் அமைந்திருந்தது.

2013 ஆம் ஆண்டு வடக்கு மாகாணசபைத் தேர்தல் சமயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சந்திப்பதற்காக நாங்கள் ஒரு புத்திஜீவிகள் குழுவாக எம்மை ஒழுங்கமைத்திருந்தோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்போடு இணைந்து செயலாற்றுவதற்கு எமக்கு ஓர் அடையாளம் தேவைப்பட்டது. அப்போது ஏற்கனவே கிழக்கு மாகாண அரசியலில் செயற்பட்டுக்கொண்டிருக்கும் நல்லாட்சிக்கான மக்கள் இயக்கத்தின் தலைமையிலான அரசியல் கூட்டமைப்பு என்ற அடையாளத்தை நாம் முன்னிறுத்தினோம். எனவே முதலில் எனக்கும் நல்லாட்சிக்கான மக்கள் இயக்கத்துக்குமான தொடர்பின் அளவைச் சரிவரப் புரிந்துகொள்ளுதல் அவசியமானதாகும்.

வடக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் களமிறக்கப்பட்ட ஒரேயொரு முஸ்லிம்நான்மாத்திரமே. எனது பதவிக்காலத்தை இன்னுமொரு முஸ்லிம் உறுப்பினரோடு பகிர்தல் தொடர்பில் எமக்கிடையில் எவ்விதமான பேச்சுக்களும் இடம் பெற்றிருக்கவில்லை. அதுமாத்திரமன்றி மாகாணசபைத் தேர்தல் முறையில் வேட்பாளர் பட்டியலில் இல்லாத ஒருவரை எவ்வகையிலும் உறுப்பினராக நிலை நிறுத்த முடியாது. அப்படியாயின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் பட்டியலில் இன்னுமொரு முஸ்லிம் உறுப்பினரின் பெயரும் உள்ளடக்கப்பட்டிருத்தல் அவசியமாகும். அவ்வாறு எவரது பெயரும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறாயின் அடுத்த முஸ்லிம் உறுப்பினர் யார்? எவருக்கு நான் எனது பதவியின் ஒரு பகுதியை விட்டுக்கொடுப்பதற்கு உடன்பட்டேன் என்ற கேள்விகள் எழுமல்லவா?

எனவே மேற்படி விடயம் முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது. நான் எனது பதவிக்காலத்தை இன்னுமொருவரோடு பங்குபோடுவதாக, அல்லது இன்னுமொருவருக்கு விட்டுக்கொடுப்பதாக எங்கும், எப்போதும் உடன்படவோ, கைச்சாத்திடவோ இல்லை.

கேள்வி: நல்லாட்சிக்கான மக்கள் இயக்கத்தில் இப்போதும் இருக்கிறீர்களா , அல்லது வெளியேறிவிட்டீர்களா?

பதில்: நல்லாட்சிக்கான மக்கள் இயக்கத்திலே நான் இப்போதும் அங்கத்தவன் இல்லை. முன்னெப்போதும் அங்கத்தவனாக இருந்ததுமில்லை.

கேள்வி: வடக்கு மாகாண சபைத் தேர்தலில் நேரடித் தேர்தலில் தோற்றபோதும், நியமனப்பட்டியல் ஊடாக வடக்கு மாகாண சபை உறுப்பினர் பதவியைப் பெற்ற நீங்கள் இதுவரை மக்களுக்காக ஆற்றிய பணிகளாக எவற்றைப் பட்டியலிடுவீர்கள்?

பதில்: என்னுடைய பிரதான பணி, தமிழ் முஸ்லிம் உறவை மேம்படுத்துதல் என்றே ஆரம்பத்தில் அமைந்திருந்தது. அதேபோன்று வடக்கு முஸ்லிம் மக்களின் விவகாரங்களுக்குப்பொறுப்பான அறிக்கையிடும்உறுப்பினர் என்னும் பொறுப்பும் எனக்கு வழங்கப்பட்டது. அந்தவகையில் தமிழ் முஸ்லிம் உறவை மேம்படுத்துவதற்கான பல்வேறு முயற்சிகளிலே நான் ஈடுபட்டிருக்கின்றேன். அது தவிர்ந்து வடக்கு முஸ்லிம் மக்களின் மீள்குடியேற்றம், அவர்கள் எதிர்நோக்கும் காணி வீடமைப்பு, வாழ்வாதாரம் சார்ந்த விடயங்கள் குறித்தும் என்னுடைய கவனத்தைச் செலுத்தி வந்திருக்கின்றேன். அவ்வாறு நான் முன்னெடுத்த திட்டங்களின் பட்டியல் மிகவும் நீளமானது, அதனை இங்கு முன்வைப்பது பொருத்தமாக இருக்காது.

தமிழ்த்தேசியப்போராட்டத்தை, அல்லதுதமிழ்மக்களின் உரிமைப் போராட்டத்தை தமிழ் பேசும் மக்களின் போராட்டமாக மாற்றியமைக்க வேண்டும் என்பது எனது அடிப்படையான எண்ணப்பாடு. அதன் மூலமே இலங்கை போன்ற பல்லின சமூகங்கள் வாழும் தேசமொன்றில் எம்மால் ஐக்கியமாகவும், சமத்துவத்தோடு வாழ முடியும். எனவே தமிழ்ப்பேசும் மக்களின் போராட்டம் என்ற எண்ணக்கருவை நோக்கி நான் அதிகம் எனது நிலைப்பாடுகளை முன்வைத்திருக்கின்றேன். அதன் காரணத்தினால் இரு சமூகங்களிலுருந்தும் விமர்சனங்களை நான் எதிர்நோக்கி இருக்கின்றேன்.

வடக்கு மாகாணசபை, மக்கள் திருப்திப்படும் விதமாகச் செயற்படவில்லை என்ற விமர்சனத்தை அடிக்கடி முன்வைப்பவர்களுள் நானும் ஒருவன். அந்த வகையில் நானும் வடக்கு மாகாணசபை உறுப்பினராக இருக்கின்ற நிலையில் எங்களால் மக்களின் எதிர்பார்ப்புக்களின் பெரும்பாலானவற்றை நிறைவேற்ற முடியவில்லை என்ற கருத்தையே கொண்டிருக்கின்றேன். அதற்கான காரணங்கள் நீண்ட -நெடிய -கலந்துரையாடல்களை வேண்டிநிற்கும். எனவே நானும் நான் ஆற்றியிருக்கவேண்டிய பல்வேறு பணிகளுள் சொற்பமானவற்றையே நிறைவேற்றி உள்ளதாகவே கருதுகின்றேன்.

கேள்வி: மக்களுக்கான சேவைகளைச் செய்வதை விடவும், வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு குடைச்சல் கொடுப்பதும், மாகாண சபையை எப்போதும் ஒருவிதக் குழப்பத்துக்குள் வைத்திருப்பதுவுமே உங்களுடைய முக்கிய பணியாக இருப்பதாகப் பலரும் குற்றம் சாட்டுகிறார்களே? இது பற்றி..?

பதில்: வடக்கு மாகாணசபையை உயிரோட்டமாக வைத்திருக்கின்றவர்களுள் ஒருவனாகவே நான் என்னைக் கருதுகின்றேன். சரியாக நோக்கினால் இதன் உண்மை அர்த்தம் புரியும். முதலமைச்சர் அவர்கள் எதற்காக எமக்குத் தலைமை தாங்க வேண்டும் என்று நாம் எதிர்பார்த்தோமோ அவர் அதற்கான தலைமைத்துவத்தைத் தருவதற்குப் பதிலாக மிகவும் இலகுவான, சிங்கள இனவாதிகளுக்குத் தீனி போடுகின்ற, தமிழ் மக்களின் ஒற்றுமையைக் குலைக்கின்ற விடயங்களுக்குத் தலைமைத்துவம் கொடுக்க முனைகின்றார். எனவே அவரை மக்கள் நலன்சார்ந்த வழிமுறையை நோக்கி அழைக்கவேண்டிய, கொண்டுவரவேண்டிய பொறுப்பு அவரை முதலமைச்சராக்கிய 30 உறுப்பினர்களுக்கும் இருக்கின்றது. அந்தவகையில் அவரை சீரான பாதையில் பயணிக்க செய்யவே நான் முயன்றிருக்கின்றேன். அதனை எவராவது குடைச்சல் கொடுப்பதாக சித்தரித்தால் அதனை நான் அறியாமை என்றே அடையாளம் செய்வேன்.

கேள்வி: முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்ட போதும், கடந்த 16 ஆம் திகதி மாகாண சபையில் முதலமைச்சருக்கு எதிரான சிறப்பு அமர்வின் போதும் அதனை முன்னின்று நடத்த முனைந்தவர்களில் நீங்கள் முக்கியமானவர். முதலமைச்சர் விக்னேஸ்வரன் மீது உங்களுக்கு அப்படி என்னதான் காழ்ப்புணர்ச்சி?

பதில்: தமிழ் மக்களின் அரசியல் முதிர்ச்சியை எண்ணி வியந்தவர்களுள் நானும் ஒருவன், ஆனால் இப்போது அந்த முதிர்ச்சியின் வெளிப்பாடு குறைவடைந்து வருகின்றது. அதற்கு சமூக ஊடகங்களும், சமகால ஊடகங்களும் ஒரு முக்கிய காரணம் என்பேன். அரசியல் செயற்பாட்டாளனாக ஒரு கொள்கைசார் அரசியலை முன்னெடுக்கும்போது எதைச் செய்யவேண்டுமோ அதனையே நான் முன்னெடுக்கின்றேன்.

உயர்நீதிமன்ற நீதியரசர் முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்களிடத்தில் எனக்கு தனிப்பட்ட ரீதியில் மிகுந்த அன்பும் மரியாதையும் இருக்கின்றது. அதனை நான் எப்போதும் ஆரோக்கியமானதாகவே வைத்திருப்பேன். ஆனால் ஒரு முதலமைச்சராக ஆளும் அணியின் குழுத்தலைவராக அவர் ஒரு சில பொறுப்புக்களில் இருந்து விலகியிருக்கும்போது அதனைச் சுட்டிக்காட்டவேண்டிய, விளக்கமாகச் சொல்லவேண்டிய, சிலபோது இடித்துரைக்கவேண்டிய சந்தர்ப்பங்கள் வந்திருக்கின்றன. அதனை நான் எவ்வித தயக்கமும் இன்றி முன்னெடுகின்றேன். இங்கு காழ்ப்புணர்ச்சிகள், கோபங்கள், வெறுப்புக்கள் என எதுவும் கிடையாது. நாம் மக்களுக்கான, மக்கள் நலன்சார்ந்த எமது பணிகளைச் செய்கின்றோம். மக்கள் சார்பாகவே எமது பணிகள் அமைந்திருக்கின்றன அவ்வளவுதான்.

கேள்வி : தமிழரசுக் கட்சியின் அங்கத்தவராக இணைய நீங்கள் ஆர்வம் காட்டி வருவதாகவும், ஆனால் சிலர் அதனைத் தடுப்பதாகவும் கூறப்படுகின்றதே?

பதில்: தமிழ் மக்களின் அரசியலில் ஆர்வக்கோளாறுகளினாலும், ஆழமாக விடயங்களை உற்று நோக்காத வர்களாலும் முன்வைக்கப்படுகின்ற கருத்துக்கள் சிறுபிள்ளைத் தனமானவை. அவ்வாறே நீங்கள் மேலே கூறிய கேள்வியையும் நான் நோக்குகின்றேன்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியில் அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கத்தவராக இணையும் ஆர்வம் இருக்கின்றது. ஆனால், அது சாதாரண ஒரு தனிமனித அங்கத்துவமாக இருக்கக்கூடாது. மாற்றமாக அது ஒரு சமூக ரீதியான அங்கத்துவமாக இருத்தல் அவசியம் என்பது எனது நிலைப்பாடு.

கேள்வி: கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரனின் தீவிர விசுவாசிகளில் நீங்களும் ஒருவர். அப்படியானால் உங்களைப் பின்னால் இருந்து இயக்குவது அவரா? அல்லது சுயாதீனமாகத்தான் இன்னும் இயங்குகிறீர்களா?

பதில்: முன்னர் குறிப்பிட்டதுபோன்று ஆர்வக்கோளாறுகளுக்கு நான் பதில் சொல்லவிரும்புவதில்லை. இப்போதிருக்கின்ற தமிழ் மக்களின் அரசியலை ஒரு எக்ஸ்-ரே படம் எடுத்து நோக்கினால் “கோளாறு வெளியே இல்லை. உள்ளேதான் இருக்கின்றது” என்பதை இலகுவாகப் புரிந்துகொள்ள முடியும். இந்தக் கேள்விக்குப் பதில் தருவதனூடாக அதனை சற்று விரிவாக விளக்கலாம் என்று நினைக்கின்றேன்.

க் குழப்பத்துக்கு முழுக்காரணி!”

அடுக்குகிறார் அஸ்மின்

தமிழ்த் தேசியப் போராட்டம் ஏன்? எதற்கு? எப்படி? யாரால்? என்ற கேள்விகளை முன்வைத்து தமிழ்த் தேசியப் போராட்டத்திலே ஆர்வம் காட்டுகின்றவர்களை பதிலளிக்குமாறு கேட்டுக்கொண்டால் அவர்களது பதில்கள் பெரும்பாலும் ஒரே தன்மையை உடையதாக இருக்கும்.

அவர்களுள் பெரும்பாலானவர்கள் “இணைந்த வட, கிழக்குத் தாயகத்தில், எமது மக்களின் இறைமையின் அடிப்படையிலான சுயர்நிர்ணய உரித்தோடு கூடுதல் சுயாட்சி அதிகாரத்தைப் பெற்றுக்கொள்வதே தமிழ்த் தேசியப் போராட்டம்” என்று குறிப்பிடுவார்கள். இதன் மூலமே “தமிழ் மக்களுக்கு சுதந்திரமும் விடிவும்” கிடைக்கும் என்பார்கள். இதனை “சர்வதேசம் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஜனநாயக வழிமுறைகளினூடாக” அடைந்து கொள்வதே சிறப்பானது என்றும் குறிப்பிடுவார்கள். ஆனால், யாரால் என்ற கேள்விக்கு மட்டும் அது தன்னரல் அல்லது தான் சார்ந்திருக்கின்ற இயக்கத்தினால், அரசியல் கட்சியினால் நிகழவேண்டும் என்று குறிப்பிடுவார்கள்.

ஆனால், மாண்புமிகு சம்பந்தன் அல்லது அவர் வழிவந்த கௌரவ சுமந்திரன் அவர்கள் தமிழ்பேசும் மக்கள் எல்லோரும் ஒன்றிணைந்து, ஒற்றுமையாக இதனைப் பெற்றுக்கொள்தல் வேண்டும் என்று குறிப்பிடுகின்றார்கள். நானும் இதே கருத்தோடு இருக்கின்ற -செயற்படுகின்ற -ஒருவன், எனவேதான் நான் அவர்களோடு நெருக்கமாகச் செயற்படுகின்றேன் என்ற தோற்றப்பாடு முன்வைக்கப்படுகின்றது.நான் எப்போதும் எனது சுயாதீனத்தை இழப்பதில்லை.

> கேள்வி: அமைச்சர் அனந்தி சசிதரன் பாதுகாப்பு அமைச்சிடம் கைத்துப்பாக்கி பெற்றுள்ளதாக மாகாண சபையின் சிறப்பு அமர்வில் குற்றம் சாட்டியிருந்தீர்கள். அதனை அமைச்சர் அனந்தி மறுத்திருந்தார். இருவரில் யார் சொல்வது உண்மை. நீங்கள் சொன்னது உண்மையெனில் அதற்கு ஆதாரம் என்ன? குறைந்த பட்சம் பாதுகாப்பு அமைச்சிடம் அனந்தி துப்பாக்கி பெற விண்ணப்பித்த படிவத்தின் பிரதி அல்லது துப்பாக்கி வழங்கியமைக்கான பாதுகாப்பு அமைச்சின் கடிதம் ஏதுமுண்டா?

பதில்: இதுவிடயம் குறித்து எதிர்வருகின்ற வடக்கு மாகாணசபை அமர்விலேஎனது விளக்கத்தை வழங்கலாமென இருக்கின்றேன்.

> கேள்வி: தற்போது உங்களுக்கு எதிராக பொலிஸில் முறைப்பாடும் செய்யப்பட்டுள்ளதாகச் செய்திகள் வருகின்றன. அவதூறுக் குற்றச்சாட்டுக்கு பொலிஸில் முறையிட சட்டத்தில் இடமுண்டா?

பதில்: கௌரவ அனந்தி சசிதரன் அவர்கள் என்மீது சாவகச்சேரி பொலிஸில் முறைப்பாடொன்றைப் பதிவு செய்துள்ளதாக ஊடகங்கள் வாயிலாக அறிந்தேன். ஆனால் எந்த அடிப்படைகளில் பொலிஸில் என்மீது முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதையும் நான் அறியவில்லை நான் அவர்மீது அவதூறொன்றினை முன்வைக்கவில்லை. நான் முன்வைத்த கருத்துக்களை மாகாணசபையின் அதிகாரபூர்வமான ஹான்சாட்டிலே பதிவிடப்பட்டிருக்கும். அதனை அவர் பரிசீலிப்பது சிறப்பானது. சபையிலே முன்வைக்கப்பட்ட கருத்துக்களை நீதிமன்ற நடவடிக்கு உட்படுத்த முடியாது என்பதையே நான் அறிந்து வைத்திருக்கின்றேன். அதையும் தாண்டி அவர் எவ்வாறு பொலிஸில் முறைப்பாடொன்றினைப் பதிவு செய்தார் என்பதைப் பற்றியும் நான் அறியவில்லை.

> கேள்வி: அடுத்த மாகாணசபைத் தேர்தலில் தமிழரசுக் கட்சி சார்பாக நீங்கள் களமிறங்குவதற்கான வாய்ப்புகள் அதிகமாக உள்ளதா?அல்லது வேறு ஏதும் கட்சி அல்லது சுயேச்சையாகப் போட்டியிடும் எண்ணமா?

பதில்: அடுத்த மாகாணசபைத் தேர்தல் குறித்து இப்போதே தீர்மானிக்கும் எண்ணம் எனக்கில்லை. அதற்கு முன்னர் பல்வேறு கருமங்கள் இடம்பெற வேண்டியிருக்கின்றன. புதிய அரசியலமைப்பு வரைபு நாடாளுமன்றிலே முன்வைக்கப்பட்டு, அதற்கான சர்வஜன வாக்கெடுப்பு குறித்து நாம் அழுத்தம் கொடுக்க வேண்டிய நிலையிலிருக்கின்றோம். இவ்வாறான நிலையில் மாகாணசபைத் தேர்தல், மீண்டும் பதவிகள் என்று எண்ணுவது ஆரோக்கியமான அரசியல் செயற்பாடாக இருக்காது.

> கேள்வி: அடுத்த மாகாண சபைத் தேர்தலில்இப்போதையமுதலமைச்சர்விக்னேஸ்வரனையே மீண்டும் முதலமைச்சர் வேட்பாளராகக் கூட்டமைப்பு அறிவித்தால், உங்கள் நிலைப்பாடு என்னவாக இருக்கும்?

பதில்: தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அப்படியான ஒரு முடிவை மேற்கொண்டால் நாம் அதற்கு இணங்குவோம்.

> கேள்வி: அடுத்த முதலமைச்சர் வேட்பாளரைத் தேர்வு செய்யும் பொறுப்பு உங்களிடம் தரப்படுவதாக ஒரு கற்பனைக்கு வைத்துக் கொண்டால், யாரைத் தெரிவு செய்வீர்கள், ஏன்?

பதில்: மக்களுக்காகச் செயற்படக்கூடிய ஒருவரைத் தெரிவு செய்வேன்.

> கேள்வி: அப்படி மக்களுக்காகச் செயற்படக்கூடிய அரசியல்வாதி யாரென நினைக்கிறீர்கள்?

பதில்: இதுவரையில் அப்படியான ஒருவரை நான் அறியவில்லை. ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்பொதுச்செயலாளரும், இலங்கைத்தமிழரசுக் கட்சியின் தலைவருமாகிய கௌரவ மாவை சேனாதிராஜா யாழ். மாவட்டப் நாடாளுமன்ற உறுப்பினர் அவர்கள் முதலமைச்சராக நிறுத்தப்பட்டால் அதனை நான் வரவேற்பேன்.

> கேள்வி: வடக்கு மாகாணசபையின் ஆயுட்காலம் இன்னும் ஒன்றரை மாதமே இருக்கும் நிலையில், உங்கள் கட்சியால் அரசியல் அரங்குக்கு கொண்டு வரப்பட்ட டெனீஸ்வரன், மீண்டும் அமைச்சுப் பதவியை அடைவதில் சட்டரீதியாக வெற்றி பெற்றிருக்கிறார். ஆனால் அதை நடைமுறைப்படுத்தி எஞ்சிய ஒன்றரை மாத அமைச்சராக இருக்க அவர் காட்டும் முனைப்புகள் ஏற்கனவே சிக்கலாக உள்ள மாகாண சபையின் செயற்பாடுகளை இன்னும் குழப்புவதாக இருக்காதா?

பதில்: மாகாணசபை ஒரு சட்டவாக்க சபை, அந்தச் சட்டவாக்கச் சபையிலேயே சட்டத்துக்கும் நீதிமன்றத்துக்கும் மதிப்பளிக்கப்படாவிட்டால் வேறு எங்கு நீதிக்கான மதிப்பை நாம் தேடப்போகின்றோம். அதேபோன்று ஒரு உச்ச நீதிமன்ற நீதியரசர் நீதிமன்றத் தீர்ப்புக்கு மதிப்பளிக்காவிட்டால் வேறு யார்தான் நீதிமன்றத் தீர்ப்புக்கு மதிப்பளிக்கப்போகின்றார்கள் என்று மக்கள் அங்கலாய்ப்பதை அவதானிக்க முடிகின்றது. இந்நிலையில்நீதிமன்றத்தீர்ப்பைஅமுல்படுத்தினால் என்ன குழப்பம் ஏற்பட்டுவிடப்போகின்றது என்பதுதான் எனக்கும் புரியாத புதிராக இருக்கின்றது.

> கேள்வி: சட்டரீதியாக வென்றவுடனேயே , டெனீஸ்வரனும்மீண்டும்அமைச்சராகாமல் ஒதுங்கியிருந்தால் அவருக்கான மக்கள் மதிப்பு கூடியிருக்குமே. மாகாண சபையிலும் தேவையற்ற குழப்பங்கள் நீடிக்காதே?

பதில்: அமைச்சர் டெனீஸ்வரன் விடயத்தில் நீதிமன்றத்தின் இறுதித் தீர்ப்பு இன்னும் வெளியிடப்படவில்லை. தற்போது முன்னைய நடவடிக்கைகளின் மீது இடைக்காலத் தடையுத்தரவு மாத்திரமே பிறப்பிக்கப்பட்டுள்ளது. மக்கள், அமைச்சர் டெனீஸ்வரனுக்கு நீதி கிடைக்கவேண்டும் என்றும் அவர் தனது பதவியை மீளவும் பெற்றுக்கொள்தல் வேண்டும் என்றே விரும்புகின்றனர். இதிலே முதலமைச்சரைக் கண்மூடித்தனமாக ஆதரிக்கும் ஒருசிலர் தேவையற்ற குழப்பங்கள் இருப்பதாகத் தெரிவிக்கின்றனர். அப்படி என்ன தேவையற்ற குழப்பங்கள் நிகழப்போகின்றன என்று அவர்கள் மக்களுக்குத் தெளிவுபடுத்தவேண்டும். வடக்கு மாகாண சபையின்ஒட்டுமொத்தக்குழப்பங்களுக்கும்முதலமைச்சரே அடிப்படையான காரணி. எனவே முதலில் முதலமைச்சருக்கு அறிவுரைகூற வேண்டிய தேவை எமக்கு அதிகமாக இருக்கின்றது.

> கேள்வி: டெனீஸ்வரன் வழக்குத் தொடர்ந்த தன் மூலம் மாகாணசபைகளுக்கான அதிகாரத்தை இன்னும் இழந்துவிட்டதாக குற்றம் சாட்டப்படுகிறதே?

பதில்: அதிகாரப் பரவலாக்கம் தொடர்பில் அறியாமையினாலே அவர்கள் அப்படியான கருத்துக்களை முன்வைக்கின்றார்கள். இதில்மத்தியஅரசாங்கத்துக்கோ அல்லது அதிகாரப் பரவலாக்கத்துக்கோ எவ்விதமான கெடுதல்களும் ஏற்பட்டுவிடவில்லை. நீதிமன்றம் முதலமைச்சர் அவர்களிடமே அமைச்சர்களை நியமிக்கும் அதிகாரம் இருக்கின்றது என்று மிகவும் தெளிவாக்வும் உறுதியாகவும் தெரிவித்திருக்கின்றது. இப்படியான குழப்பமான சூழ்நிலை இருக்கின்றபோதும் ஆளுநர் அவர்கள் தனது தற்துணிவு அதிகாரத்தைப் பயன்படுத்தாமல் முதலமைச்சர் அவர்களின் ஆலோசனைக்காகக் காத்துக்கொண்டிருக்கின்றார். கடிதம் கிடைக்கவில்லை என முதலமைச்சர் பலமுறை பொது வெளிகளில் பொய் சொன்னபோதும், மீண்டும் மீண்டும் முதலமைச்சருக்கு ஆளுநர் ஒரே கடிதத்தை அனுப்பிக் கொண்டேயிருக்கின்றார். இவையெல்லாம் மாகாணசபைக்கு இருக்கின்ற அதிகாரத்தை மேலும் உறுதி செய்வதாகவே அமைந்திருக்கின்றன. இங்கு மக்களை ஏமாற்றும் முதலமைச்சரின் உண்மை முகம் நாளுக்கு நாள் வெளிப்பட்டுக் கொண்டேயிருக்கின்றது.

இத்தகைய சூழ்நிலைகளின் மூலம் ஒரு நெருக்கடி நிலைமையை முதலமைச்சரே ஏற்படுத்துகின்றார். இது மாகாண சபையின் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்யும் செயலாகும். முதலமைச்சரே மாகாணசபையின் அதிகாரங்களைக் கொச்சைப்படுத்துகின்றார். ■

டாவின் சொன்னது யாதெனில்

■ ரக்ஷானா ஷரிபுத்தீன்

ஏழு மணியாகியும் இன்னும் அந்த மீட்டிங் முடியவில்லை. தீர்மானங்கள் எடுக்கப்படாமலே மணிக்கணக்காய் விவாதத்திலேயே நீண்டு கொண்டிருந்தது என்றும் சொல்லலாம். பொதுவாக மேனேஜ்மன்ட் மீட்டிங்குகள் இப்படித்தான். எங்கோ தொடங்கி எங்கெங்கெல்லாமோ சஞ்சாரித்து அந்தாதியாக நீண்டு செல்லும். பைனான்ஸ் ஆட்களுக்கு பிகர்கள் புரிவதுபோல் வாக்கியங்கள் புரிவதில்லை. பாவம் அந்த மனிசன் சி.ஈ.ஓ என்ன வெல்லாமோ பிரயத்தனப்பட்டு ஒரு சின்ன விஷயத்தை புரியவைக்க அரும்பாடு பட்டுக்கொண்டிருந்தார்.

மீட்டிங் ஹோலில் இருந்த அனைவரும் அவரது எண்ணம் பலிக்குமா இல்லையா என்ற சஸ்பென்சில் ஆவலோடு காத்திருந்தோம். ஒரு கணநேரம் அதிர்ந்து ஓய்ந்த எனது கைபேசி எனது கவனத்தைக் கலைக்க.. "நாளைக்கு எனக்கு நைட் டியூட்டி இண்டக்கி விட்டா இனி இரண்டு நாளைக்குப் பிறகுதான் அங்க போகலாம். ஒபீஸ் முடிஞ்ச கையோட அப்பிடியே போய் பாத்துட்டு வருவம் என்ன?" என்று காலையில் எனது கணவர் சொன்ன வார்த்தைகள் அத்தனை நேரம் வரை அலுவலக உலகில் அமிழ்ந்துவிட்ட என்னைக் கரைசேர்த்தது.

அவர் இந்நேரம் வெளிக்கிட்டிருப்பார். என்னைத் தயாராக இருக்கும்படி சொல்லத்தான் அழைத்திருப் பார். இன்னும் மீட்டிங் முடிந்தபாடில்லை. இது இந்த நாளில் முடிகிறதாகத் தெரியவில்லை. எப்படியும் ஒன்பது மணியாகும் என்பதில் சந்தேகமில்லை.

வாணி அம்மா எங்களுக்கு இரத்த சொந்தமில்லை. அவருக்கும் எங்களுக்கும் இடையிலான உறவு எப்படி எங்கு ஆரம்பித்தது என்பதும் எனக்கு நினைவில்லை. எங்கள் வீட்டில் நடக்கும் அனைத்து நலவு நட்டங்களிலும் முதல் ஆளாய் அவர்தான் இருப்பார். எனது தாயார் ஆசிரியர் என்பதனால், வீடு பாடசாலை, பிள்ளைகள், பொறுப்பு என அவர் திண்டாடும் பொழுதுகளில் எல்லாம் எங்களுக்கு எப்போதும் துணையாக இருந்தவர் அவர். பெரிதாகப் படிக்காதவர். இளம் வயதிலேயே கணவரை இழந்து தனது இரு பெண் பிள்ளைகளையும் தனியாக நின்று வளர்த்தவர். மிகுந்த பொறுமைசாலி. எங்கள் மீது அதீத பாசம் கொண்டவர்.

கடைசியாக அவரை நான் பார்த்து எத்தனை நாட்கள் என்பது நினைவில்லை. ஒரே ஊரில்தான் இருக்கிறோம். எவ்வளவு முறை நினைத்துக் கொண்டாலும் நேரில் போய் பார்த்து நலம் விசாரிக்கக் கிடைக்கவில்லை. நான்கு நாட்களுக்கு முன் அவர் உடல்நிலை சரியில்லாமல் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகத் தகவல் கிடைத்தது. "கொஞ்சம் நேரமெடுத்து மறக்காம போய் பாத்துட்டு வந்திடு" என்று அம்மா அடிக்கடி ஞாபகப்படுத்திக்கொண்டே இருந்தார்.

நான்கு நாட்கள் முயன்று இன்றைக்கு அலுவலக வேலைகள் முடிந்ததும் அப்படியே போய் பார்த்து விட்டுவரவேண்டும்என்றுகாலையில்பேசியிருந்தோம்.

மீட்டிங் இன்னும் முடியவில்லை. இந்த காலாண்டின்முடிவில், சொன்னபடி 'க்ரோத்' காட்டாவிட்டால் முதலீட்டாளர்களுக்கு பதில் சொல்ல முடியாது. எங்கே பிழை நடந்திருக்கிறது என்று லொகேட் பண்ணவே முடியவில்லை. கடைசி காலாண்டு முடியும்போது நல்ல வளர்ச்சி இருந்தும் திடீரென இந்த 'டிப்' எப்படி வந்தது என்று இன்னும் அந்த வட்ட மேசை தலையைக் குடைந்துகொண்டிருந்தது. "வீ ஹேவ் டு ஐடெண்டிபை திரூட் காஸ் இம்மீடியேட்லி" என்று சொல்லி ஆரம்பித்த அதே இடத்தில் அந்த மீட்டிங் முடியும்போது மணி எட்டரை ஆகிவிட்டது.

அவசர அவசரமாக கைபேசியை எடுத்தேன். "ஆல்ரெடி லேட். ஐம் கொய்ங் ஹோம், கம் சூன்" என்று குறுஞ்செய்தி சொன்னது.

எல்லோருக்கும் மிஞ்சி மிஞ்சிப் போனால் எட்டு மணிக்காவது வேலை நேரம் முடிந்துவிடும். வேலைக்குப் போகும் பெண்களுக்கு இருபத்து நாலு மணி நேரத்தில் வேலைத்தளங்கள் மாறுமே தவிர வேலை நேரம் முடிவதே இல்லை. வாடிக்கையாளர் சேவை போல 'ட்வென்டி போர் செவென்' டியூட்டிதான்.

போகிற வழியில் கொஞ்சம் மரக்கறி வாங்க வேணும். இரவைக்கே சமைத்து வைத்துவிட்டால் காலையில் பதறத் தேவையில்லை. இந்த சூப்பர் மார்கெட் கவுண்டர் ஆட்கள் சரியான அசமந்தங்கள். கொஞ்சம் உற்சாகமாக வேலை பார்த்தால் இந்த கியூ கொஞ்சம் வேகமாக நகருமல்லவா? "சாரி அண்ணா, கொஞ்சம் லேட் ஆயிட்டுது" என்று ஆட்டோக்காரரையும் சமாளிக்க வேண்டியதாய்ப் போயிற்று. இந்த பெலத்தாலோக சந்தியில் ட்ராபிக்கில் கழிகிற நேரம் நாலு வேலை செய்து முடிக்கலாம். மன வேகத்துக்கு வண்டிகள் நகர்வதாக இல்லை. கொழும்பில் வாகனங்கள் கனத்துப் போச்சு. காசு குடுத்து லைசன்ஸ் வாங்குறாங்க போல. ஒரு ஒழுங்குமுறை இல்லை. எல்லாருக்கும் தான் முந்தவேண்டும் என்கிற அவசரம். கடைசியில் எல்லாருமே இப்படியே நிற்க வேண்டியதுதான். ட்ராபிக்கில் கிடைத்த இடைவெளியில் நாளைக்குச் செய்ய வேண்டிய, நேர்முகப் பரீட்சைகளுக்கான விண்ணப்பதாரிகளின் சி.வீக்களை ஒரு முறை 'ரிவ்யூ' செய்துகொண்டேன்.

"இங்க வலது பக்கம் நிப்பாட்டுங்கோ அண்ணா" இப்பெல்லாம் ஆட்டோவுக்கு ஒன்லைன்லதான் எல்லா கொடுக்கல் வாங்கலும். கைப்பை திறந்து காச எடுத்து எண்ணி குடுக்க அநியாயமா ரெண்டு நிமிஷம் செலவழியும் இல்லையா? ஆளுக்கொன்றாக நானும் எனது கணவரும் வைத்திருக்கும் வீட்டுத் திறப்பில் என்னுடையதை எடுத்து கதவு திறக்கையில், 'பீட்சா ஹட் டெலிவரி பாய்' விர்ர் என்று வந்து வண்டியை வாசலில் நிறுத்தினான். நான் கதவு திறக்க முதலே, கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்த என் கணவர் அட்டையைத் தேய்த்து கையெழுத்துப் போட்டு வந்த பீட்சாவையும் என்னையும் வரவேற்றார்.

"சமைக்கணும் எண்டுதானே வாற வழியில நான் மார்கெட் போன, எதுக்கு பிட்சா ஓடர் பண்ணின நீங்க", "இப்பவே மணி ஒன்பது தாண்டிற்று, இதுக்குப் பிறகு சமச்சி சாப்பிட்டு,தூங்கி. காலையில வேலைக்குப் போற ஐடியா இருக்கா ? இல்லையா? அது சரி, இண்டக்கி என்ன வழக்கம்போல இலங்கைப் பொருளாதாரத்தைக் கொண்டுபோய் உச்சாணிக் கொம்புல எப்படி வக்கிறதெண்டு மீட்டிங்கோ?" வழக்கம் போல எங்களது அரச, கார்பரேட் உத்தியோக விவாதத்துக்கு பிள்ளை

யார்சுழி போட்டு, "இனி நீதொடரலாம்" என்பதுபோல் நிறுத்தினார் அவர். "ஓமோம், நாங்க கஷ்டப்பட்டு பொருளாதாரத்தக் கொண்டு போய் உச்சாணிக் கொம்புல வைக்கிறதாலதான் நீங்கெல்லாம் இந்த கவர்மென்ட் ஆபீஸ்ல அலுங்காம குலுங்காம ஈயோட்டினதுக்கெல்லாம் ஆயுள் முழுக்க சம்பளம் வாங்குறையள்!"

"அப்பிடி சிம்பிளா சொல்லிட ஏலாது தெரியுமோ! நாட்டுட பட்ஜெட்ல பாதிக்கி கிட்ட நாங்கதான் குடுக்குறம். கஸ்டம்ஸ் இல்லாம பட்ஜெட் போடுறது ரொம்ப கஷ்டம்"., "ஓமோம் உங்கட ஆக்கள் அடிச்சது போக மிச்சத்த வச்சே ஒரு நாட்டுக்கு பட்ஜெட் போடலாமெண்டா, மொத்தத்தையும் வச்சு இலங்கை வல்லரசு ஆயிடும்போல"

"நாங்க அடிக்கிறமா? அது சரி பத்து வருஷத்துக்கு முந்தி முப்பதாயிரம் சம்பளம் பெரிசா இருந்துச்சி, பிறகு அத அம்பதாயிரமா ஆக்கினாங்க, இப்ப! ரெண்டு லட்சம், மூணு லட்சம் கூட போதல உங்கட ஆக்களுக்கு. கூடவே காரும், புயல் அலவன்சும் வேற குடுக்குரான்களாம். உங்களைப்போல ஆக்களுக்காகத்தான் ஐநூறு ரூபா பொருளெல்லாம் பிராண்ட் எங்குற பேர்ல ஐம்பதாயிரத்துக்கு விக்குது. உங்கட கார்பரேட் உலகம் மக்கள ஏமாத்துறதுக்கு உங்களுக்கெல்லாம் சம்பளம். அலவன்ஸ், பேரக்ஸ் அது இது எண்டு குடுத்து மெஷின் போல ஓடவிட்டிருக்கு, இல்லையா?", "நாங்க மெஷின் போல ஒடுறதுக்கு சம்பளம் வாங்குறம், அந்த திருப்தி போதும். உங்களுக்கு அதுவும் இல்லையே!!"

"அப்பிடி சொல்ல ஏலாது. செய்ற வேலைய நியாயமா செய்யற ஆட்கள் இருக்கத்தான் செய்றாங்க", "அப்போ நியாயமா வேல செய்யாத ஆட்களும் இருக்கிறதா ஏத்துக்குறீங்க எண்டு சொல்லுங்கோ!!" என்று அன்றைய விவாதத்தில் எனது வெற்றிக் கொடியை நாட்டி, ஒரு பெருமிதச் சிரிப்பை உமிழ்ந்தபடி குளியலறைக்குள் புகுந்துகொண்டேன். "வாய் மட்டும் இல்லாட்டி காகம் தூக்கியிருக்கும்" என்று என் கணவர் சொன்னது மங்கலாக என் காதில் விழுந்தது"

குளிர்ந்த நீர் உச்சந்தலை தொடுகின்ற போது சில உண்மைகள் மண்டையில் நச்சென்று உறைப்பதுண்டு. அதனாலோ என்னவோ குளியலறைதான் நிறையப் பேருக்கு சிந்தனைக் கூடம்,போதி மரம். எனக்கும் பத்து லட்சத்து எழுபத்து நாலாவது முறை இன்னொரு சுயவிசாரணை இந்த நொடி இந்தக் குளியலறைக்குள் நேர்ந்தது. கணவர் சொன்ன கடைசி வசனத்தை இன்னுமொரு முறை எனது மூளை மீட்டியது.

"உங்கட கார்பரேட் உலகம் மக்கள ஏமாத்துற துக்கு உங்களுக்கெல்லாம் சம்பளம், அலவன்ஸ், பேரக்ஸ் அது இது எண்டு குடுத்து மெஷின் போல ஓடவிட்டிருக்கு!"

ஆர்கியூமென்ட் நம்மட பக்கம் கதிக்கணும் எண்டு ஏதேதோ சொல்லி அவரை நாக்கவுட் பண்ணினாலும், அவர் சொன்ன கடைசி விடயம் மீண்டும் மீண்டும் என்னைத் தொந்தரவு செய்துகொண்டே இருந்தது. இதுதான் முதல் முறையா என்று கேட்டால் "இல்லை" என்பதே எனது பதில். நீண்ட நாட்களாக அடிக்கடி நான் சிந்தித்து, என்னை நானே சமாதானம் செய்து கொண்ட ஒரு விடயத்தையே அன்று முதல் முறை அவர் என்னை நோக்கி அம்பாகத் தொடுத்துப் பார்த்தார். அது என்னுள் ஆழமாகச் சென்று இறங்கியதை அவர் அறிந்திருக்க வாய்ப்பில்லை.

பாரதி மீது ஏற்பட்ட காதலுக்கு மொழி மட்டும்தான் காரணமா என்ன? நிச்சயமாக இல்லை. அவனது சிந்தனைப் போக்கு, ஒவ்வொரு விடயத்தையும் அவன் அணுகுகின்ற விதம், சற்றும் சுயநல மின்மை, தேடல் இப்படி ஒரு ஆளுமையாக அவனை எமக்குக் கொண்டு சேர்த்தது என்னவோ மொழிதான். அவன் இயற்கையை, அதன் சூட்சுமத்தை, அதன் பின்னாலுள்ள கொள்கையைப் புரிந்து வைத்திருந்த விதம், அதற்காக இயற்கையோடு அவன் கொண்ட காதல், அதன்பால் அவன் செலவழித்த நேரம் இப்படி அனைத்தும் அவனது படைப்பில் தெரிந்தது.

பத்தோ

பதினைந்தோ வயதில் என்னை அவன் அவ்வளவாகப் பாதித்திருந்தான். இயற்கையை மணிக் கணக்கில் என்னோடு புழங்க விடுவதும், கண்களை பொழுது போவதறியாமல் இயற்கையழகில் தொலைத்து விடுவதும் எனது வாடிக்கையாக இருந்தது. "எனக்கு வேண்டியதெல்லாம் பாரதி கனவு கண்டதுபோல் ஒரு காணி நிலம். பத்துப் பதினைந்து தென்னை மரங்கள், கத்தும் குயிலோசை, தூய நிறத்தில் ஒரு வீடு, வேண்டிய போதெல்லாம் தழுவிச்செல்லத் தென்றல். யார் வேண்டுமானாலும் எங்கு வேண்டுமானாலும் போகட்டும். அவர்களோடு நான் ஓடப்போவதில்லை. அந்தப் பந்தயத்தில் எனக்குப் பிடிப்பும் இல்லை. இயற்கை, உறவுகள், நேர்மையாக நமக்கென்று அளந்த உணவு, கணக்கான செல்வம், இப்படி வாழும் வாழ்க்கை எவ்வளவு பெரிய பேறு " படிக்கிற காலத்தில் இந்த நாட்டின் கல்வி முறையில் ஏற்பட்டிருந்த அதிருப்தியால் அதில் நிலவுகின்ற அநியாயப் போட்டி வரைமுறைகள் காழ்ப்பு போன்றவை பிடிக்காமல் இப்படி யாரிடமோ எப்போதோ பிதற்றிய ஞாபகம்.

தூக்கக் கலக்கத்தில் சம்பந்தம் இல்லாமல் இப்படி ஏதேதோ நினைவுகள் மூளைக்குள் வெளிக்கிளம்புவதும் மறைவதுமாக இருந்தது. நீண்ட நேரம் உறங்கிவிட்டோமோ ? விடிந்ததும் விளங்காமல் எத்தனை நேரம் தூங்கினோம்? அலுவலகத்துக்கு நேரமாகி விட்டதோ. அலாரம் நீண்ட நேரம் அடித்து ஓய்ந்தது போல இருந்தது. இல்லை அது அலாரம் இல்லை. விடியவும் இல்லை. கைபேசியில் யாரோ நீண்ட நேரம் அழைக்கிறார்கள். ஒற்றை நொடியில் காணி நிலத்திலிருந்து தொப்பென்று வந்து நடப்பு உலகுக்குள் விழுந்தேன். ஆம், அம்மாதான் கால் பண்ணியிருக்கிறா. என்ன அவசரம்? அர்த்த ராத்திரியில்? மீண்டும் மணி அடிக்கறது. பொத்தானை அழுத்தி "ஹலோ" என்றேன். "எத்தன தரம் மறக்காம போய் பாக்கச் சொன்னனான். வாணி அம்மா காலமாயிட்டாங்க. கடைசியாக ஒரு தரம் சடங்குகளுக்கு போக நேரம் இருக்குமா? இல்ல இண்டைக்கும் ஓபீஸ்ல தல போற வேல இருக்கா?" அம்மா அடுக்கிக்கொண்டே போக, போனைக் கட் செய்தேன். துக்கம் தொண்டையை அடைத்தது. வாணியம்மாளின் பாசமான முகம் மனக்கண்ணில் நின்று வாட்டியது. நான் இப்போது இருக்கின்ற நிலையைப் பார்த்து எனது சொந்தத் தாயை விடப் பெருமை கொள்பவர் அவர். அவர் உயிர் பிரியும் வேளையில் நிச்சயமாக என்னை நினைத்திருப்பார். நான் பார்க்க வருவேன் என்று நம்பிஏமாந்திருப்பார். என்னதவறுசெய்துவிட்டேன். என்னை நானே சுதாரித்துக்கொள்ள இன்னும் சில நிமிடம் ஆயிற்று.

"கொஞ்சம் அவசரமாப் போங்க அண்ணா" டாக்சி டிரைவரை கெஞ்சினேன். வண்டி வேகமாக போய்க் கொண்டிருந்தது. என் எண்ண ஓட்டமும்தான். எட்டு வருடத்தில் கோடிச் சொச்சமாவது முறை எல்லாவற்றையும் விட்டுவிட்டு சொந்த ஊருக்கே போய் விவசாயம் செய்து வாழ்க்கை நடத்துவது பற்றி யோசிக்கப் புறப்பட்டுச் சென்றது மனம். ■

■ கங்காணி

வலி சுமக்கும் தேநீர்

முல்லோயா போராட்டம் - 1940

ஒருகோப்பை தேநீருக்கு பின்னால் வலிசுமந்த வரலாறே மறைந்திருக்கின்றது என்பது உங்களில் எத்தனை பேருக்கு தெரியும்? பஞ்சம் பிழைப் பதற்காக தென்னிந்தியாவிலிருந்து படையெடுத்து வந்த மலையக மக்கள் பலவருடங்களாக வெள்ளையர்களாலும் - இலங்கை ஆட்சியாளர்களாலும் அடிமைகளாக அடக்கி ஆளப்பட்டனர்.

வறுமையின் கோரத்தாண்டவத்தாலும், வாழ்வதற்கு வேறுவழியின்மையாலும் அனைத்துக்குமே 'ஆமாம் சாமி' போடுவதைத்தவிர அவர்களுக்கு வேறு வழி இருக்கவில்லை. இதை தமக்கு சாதகமாக பயன்படுத்தி வயிறு வளர்த்தது முதலாளிவர்க்கம்.

எத்தனை நாட்கள்தான் இப்படியே அடிமைகளாக வாழ்வது? உரிமைகளை கேட்காது ஓடிஒளிவது? என்ற சிந்தனை காலப்போக்கில் மலையக மக்கள் மத்தியில் உதயமானது. புரட்சி சிந்தனையை முளையிலேயே கிள்ளி எறிவதற்கு பல சூழ்ச்சிகள் வகுக்கப்பட்டன. இருந்தும் உயிர்த்தியாகங்களுக்கு மத்தியில் போராட்டங்கள் வெடித்தன. உரிமைக்கான கோஷங்கள் விண்ணதிர முழங்கின.

ஒருகட்டத்துக்குப் பிறகு தொழிலாளர்களின் போராட்டங்கள், அவர்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் தொழிற்சங்கங்களாலேயே ஒடுக்கப்பட்டன - தவறாக வழிநடத்தப்பட்டன. சம்பள உயர்வுகோரி 2016 இல் தொழிலாளர்களால் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்கள் கூட இறுதி நொடியில் காட்டிக் கொடுக்கப்பட்டன.

இம்முறையும் போராடியேனும் சம்பள உயர்வைப் பெறவேண்டும் என்பதில் தொழிலாளர்கள் குறியாக இருக்கின்றனர். ஆனால் அவர்களை திசைதிருப்புவதற்குரிய நடவடிக்கைகள் மிகவும் சூட்சுமமான முறையில் தொழிற்சங்கங்களால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை கவலைக்குரிய விடயமாகும்.எனவே, முன்வைத்த காலை பின்வைக்காது, தொழிற்சங்கங்களின் போலி வாக்குறுதிகளுக்கு அடிபணியாது இம்முறை கொள்கையில் உறுதியாக நிற்கவேண்டும்.

மலையகத்தில் முதல் தியாகி!

மலையக மக்கள் போராடத்தெரியாதவர்கள், கைகட்டி, வாய்பொத்தி வேடிக்கைப்பார்ப்பவர்கள் என்ற விமர்சனத்தை உடைத்தெறிந்தது முல்லேரியா போராட்டம்.

1939 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கண்டி மாவட்டத்திலுள்ள ஹேவாஹெட்ட, முல்லோயாத் தோட்ட தொழிலாளர்கள் சம்பள உயர்வுகோரி போராட்டத்துக்கு பிள்ளையார் சுழிபோட்டனர்.

காலை ஆறு மணிமுதல் மாலை ஆறுமணிவரை வேலைசெய்யமுடியாது, சம்பளம் 16 சதம் அதிகரிக்கப்படவேண்டும் என்பது உட்பட 6 கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டே அறவழிப்போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. 13 நாட்கள் போராட்டம் தொடர்ந்ததால் தோட்ட நிர்வாகம் விழிபிதுங்கி நின்றது.

போராட்டத்தை ஒடுக்குவதற்கும், திசைதிருப்புவதற்கும் எலும்புத்துண்டுகளை அள்ளிவீச நிர்வாகம் சதித்திட்டம் தீட்டினாலும் எவருமே விலைபோகவில்லை. இதனால், பேச்சுவார்த்தைக்கு பச்சைக்கொடி காட்டியது தோட்டநிர்வாகம். ஆனால் ஒரு பக்கம் பேசிக்கொண்டே மறுபக்கத்தால் இரும்புக்கரம் கொண்டு அடக்க அதிகாரத்திலுள்ளவர்கள் நினைத்தார்கள்.

தொழிலாளர்கள் போராட்டத்தைக்கைவிட்ட பின்னர், காக்கிச்சட்டை கும்பல் தோட்டத்துக்குள் புகுந்து அடாவடியில் இறங்கியது. இதில் கோவிந்தன் என்பவரின் உயிர் பறித்தெடுக்கப்பட்டது. 1939 டிசம்பர் மாதம் போராட்டம் ஆரம்பமானது. 1940 ஆம் ஆண்டு ஜனவரி 10 ஆம் திகதி கோவிந்தன் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இச்செய்தியானது மலையகமெங்கும் காட்டுத்தீயாக பரவியது. போராட்டத்தில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களைக் கோவிந்தனின் மரணம் கடும் சீற்றம்கொள்ள வைத்தது. உணர்ச்சியை தூண்டியது. உரிமைப் போராட்டத்தின் மகிமையை ஊரறிய - உலகறியச்செய்து தொழிலாளர்களின் வரலாற்றில் உரிமைப்போராட்டத்துக்கு உயிர்கொடுத்து மலையகத் தியாக வரலாற்றினைத் தொடங்கி வைத்தார் கோவிந்தன்.

பொலிஸாரின் துப்பாக்கி பிரயோகத்துக்கு எதிரான வழக்கில் தொழிலாளர்களுக்கு வெற்றி கிடைத்தது. எனினும், பிரதான குற்றவாளியான - நிர்வாகத்தின் விசுவாசியான - கோவிந்தனை சுட்டுக்கொன்ற பொலிஸ் சார்ஜண்டுக்கு தண்டனை வழங்கப்படவில்லை.

கோவிந்தனின் குடும்பத்துக்கு நஷ்டஈடு வழங்கப்பட வேண்டும் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது. தொழிலாளர்களின் சம்பளமும் அதிகரிக்கப்பட்டது. தொழிற்சங்கம் அமைக்கும் உரிமையையும் தொழிலாளர்கள் பெற்றார்கள்.

ஒரு இலக்கை அடைவதற்கான பயணத்தில் போராட்டம் என்பது இறுதி வடிவமே. முதலில் பேச்சுகள் நடத்தப்படும். ஆனால், கூட்டு ஒப்பந்தப் பேச்சுகளில் வெளிப்படைத்தன்மை இல்லை. ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் தொழிற்சங்கங்கள் மீதும் நம்பிக்கையில்லை. வெளியில் இருக்கும் தொழிற்சங்கங்களும் எந்நேரத்திலும் காலைவாருவதற்கு தயாராக இருக்கின்றன. எனவே, இம்முறை சுயமாக சிந்தித்து - சுயாதீனமாக இயங்கக்கூடிய மலையக சிவில் அமைப்புகளின் ஆதரவை தொழிலாளர்கள் பெற்றுக்கொள்ள வேண்டும். அதற்கு தலைமைவழங்க தகுதியுள்ள ஒருவர் முன்னிலையாக வேண்டும். அது நடக்குமா?

■

மரபின் வேர்களைத் தேடி...

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கான பதில்தான் டிஜிட்டல் முறையில் அதாவது எண்ணிம முறையில் ஆவணப்படுத்தல். இந்த முறையில் ஆவணப்படுத்தினால் எந்த சக்தியாலும் எம் தொன்மங்களை அழித்துவிட முடியாது. இலங்கை போன்ற நாட்டில் வாழும் எமக்கு வேறுவகையில் தொன்மங்களைப் பாதுகாக்க வழியே இல்லை. இதுவே மிகச் சிறந்த முறை. இந்தத் தலைமுறையே டிஜிட்டல் மயப்படுத்தப்பட்டு விட்டது. இனி வரும் தலைமுறையிடம் நம் மரபைக்கொண்டு சேர்க்கும் மிகச்சிறந்த வழி எண்ணிம ஆவணப்படுதல் முறையே ஆகும். இந்த அடிப்படைவிடயங்களேஎண்ணிம ஆவணப்படுத்தலின் பிரதான நோக்கங்கள்.

எண்ணிம ஆவணப்படுத்தும் பணிகளைப் பிரித்தானிய நூலகத்தின் அனுசரணையில் மேற்கொள்வதற்கு மிகப்பிரதான காரணம் ஏட்டுச்சுவடிகளைச் சர்வதேச நியமங்களைப் பயன்படுத்தி ஆவணப்படுத்தினால் மாத்திரமே அவற்றைப் பல நூற்றாண்டுகளுக்குப் பிறகும் பயன்படுத்தலாம். இத்தகைய ஆவணப்படுத்தலுக்கு அதிக பொருட்செலவாகும். அதனைத் தனியே மேற்கொள்வது சாத்தியமற்ற ஒன்று, அவ்வகையில் பிரித்தானிய நூலக அனுசரணை கிடைத்தமையாலேயே ஆவணப்படுத்த முடிந்துள்ளது. இந்த ஓலைச்சுவடிகளை நாம் ஆவணப்படுத்தியோ அல்லது பிரித்தானிய நூலகத்துடன் இணைந்து ஆவணப்படுத்தியோ இவை எல்லாவற்றையும் இணைய வெளியில் அனைவரும் பயன்படுத்தும் வகையிலேயே பதிவு செய்து வைக்கின்றோம். இந்த எண்ணிம முறையிலான ஆவணப்படுத்தல்களை உலகம் முழுவதிலும் உள்ள அனைவருமே பயன்படுத்தலாம். அதைப்போலவே பிறநாடுகளின் எண்ணிமப்படுத்தப்பட்ட ஆவணங்களை நாமும் பயன்படுத்த முடியும். எமது செயற்றிட்டம் பிரித்தானிய நூலகம் அனுசரணை வழங்கும் 1056 ஆவது செயற்றிட்டமாகும். எமக்கு முன்னர் உலகம் முழுதும் 1,000க்கும் அதிக செயற்றிட்டங்களை முன்னெடுத்துள்ளனர். நாமும் இதில் இணைந்து கொள்வதன் மூலம் எமது அறிவுப் பாரம்பரியத்தை வெளிப்படுத்தவும் பாதுகாக்கவும் முடிகிறது. மக்களுக்கு அறிவைப் பரப்புதலே எமதுநோக்கமாக உள்ளது. ஒவ்வொரு ஆண்டும் யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்ட தினத்தில் 97 ஆயிரம் ஆவணங்களை இழந்துவிட்டோமே எனக் கவலைப்படுவோர், 75 ஆயிரம் ஆவணங்களை நூலக நிறுவனம் பாதுகாத்துத் தந்துள்ளது என்பதை இன்னும் புரிந்துகொள்ளவில்லை. ஒவ்வொரு ஆண்டும் யாழ். நூலகத்துக்காக ஒப்பாரி வைப்பவர்களில் அரைவாசிப் பேர் உதவி செய்தால் கூட இணைய நூலகத்தில் இதைவிடப் பிரமாண்டமாக ஆவணப்படுத்த முடியும். இந்த நூலகத்தின் இலக்கு ஈழம் பற்றிய எந்தவொரு தகவலைத் தேடினாலும் ஒரு பதிலாவது கிடைக்க வேண்டும் என்பதே." என்கின்றார் தில்லைநாதன் கோபிநாத்.

நீங்களும் மரபுகளைக் காக்க நினைத்தால், இந்தப் பத்தி உங்கள் மனதில் மாற்றத்தை ஏற்படுத்தினால், மரபைத்தேடும் இவர்கள் பணியில் நீங்களும் கரம் கோர்க்கலாம். உங்களிடமோ, அல்லது உங்கள் நண்பர்களிடமோ ஓலைச்சுவடிகள் இருந்தால் அது பற்றி ஓலைச்சுவடி ஆவணகத்துக்குத் தெரியப்படுத்தலாம். உங்கள் கிராமங்களில் சிறிய குழுக்களாக இணைந்து ஓலைச்சுவடிகள் தொடர்பாக மக்களுடன் கலந்துரையாடி அவற்றை ஆவணப்படுத்தும் பணியை செய்யலாம். வேலைக்காக காத்திருப்போர், வேலைக்காகப் போராடுவோருக்கு எல்லாம் எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் களப்பணியாற்றும் இந்த இளைஞர்கள் நல்ல உதாரணம். நீங்களும் தன்னார்வலர்களாக இணைந்து பணியாற்றலாம். நிறையவே சுயநலமாக வாழ்ந்துவிட்டோம். கொஞ்சமேனும் நம் இனத்தின் வேர்களைக் காக்க ஒன்றிணைவோம். இது பேசிவிட்டுக் கடந்துவிடும் சாதாரணப் பணியல்ல. ஆத்மார்த்தமான, உணர்வுபூர்வமான பணி. இந்த ஒற்றைப் பணியிலாவது மரபுகளைக் காத்த ஆத்ம திருப்தி உங்களுக்குக் கிட்டட்டும்.

■

500 /=

உங்கள் சிறு விளம்பரங்களை குறைந்த விலையில் இங்கே விளம்பரப்படுத்தலாம். இதற்கு நீங்கள் செலுத்த வேண்டியது 500 ரூபா மாத்திரமே.

தொடர்புகளுக்கு:

076 711 2932

வை.கோ.

வைகோ அவர்கள் சிறப்பு முகாமை மூடுமாறு கேட்டிருக்கிறார். ஆனால் அவருடைய கட்சியினர் மத்திய அரசில் அமைச்சராக இருந்தபோது இந்த சிறப்புமுகாமை மூடுவதற்கு எந்தநடவடிக்கையும்எடுக்கவில்லை. புலிகள் இயக்கம் மீதான தடையை நீக்குமாறு உச்ச நீதிமன்றில் வழக்கு தொடர்ந்த வைகோ அவர்கள் விரும்பியிருந்தால் இந்த சிறப்புமுகாமை மூடுமாறு உச்ச நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்திருக்க முடியும். அதன் மூலம் சிறப்பு முகாமை மூட வழி செய்திருக்க முடியும். ஆனால் அவர் அது குறித்து எவ்வித அக்கறையும் கொள்ளவில்லை.

டாக்டர் ராமதாஸ்

டாக்டர் ராமதாஸ் அவர்கள் சிறப்புமுகாமை மூடுமாறு பல முறை கோரியிருக்கிறார் போராட்டமும் நடத்தியிருக்கிறார். ஆனால் அவருடைய மகன் அன்புமணி மத்திய அரசில் அமைச்சராக இருந்த போது இந்த சிறப்பு முகாம்களை மூடுவதற்கு அவர் மூலம் எதாவது நடவடிக்கை எடுத்திருக்க முடியும். அதுமட்டுமல்ல தமிழகத்தில்கூட அவருடைய கட்சியின் ஆதரவுடனே தமிழக அரசு இயங்கி வந்தது. அப்போதும்கூட டாக்டர் ராமதாஸ் அவர்கள் விரும்பியிருந்தால் தன் செல்வாக்கைப் பயன்படுத்தி சிறப்பு முகாமை மூடியிருக்க முடியும். ஆனால் அவரும்கூட இதுகுறித்து அக்கறையற்று இருந்துள்ளார்.

திருமாவளவன்

விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவனும் சிறப்பு முகாமை மூடுமாறு பலமுறை அறிக்கை விட்டிருக்கிறார். ஆனால் அவருடைய ஆதரவுடன் காங்கிரஸ் ஆட்சி செய்த வேளையில் அவர் ஒருமுறைகூட நாடாளுமன்றத்தில் இந்தச் சிறப்புமுகாம் கொடுமைகள் குறித்து குரல் எழுப்பவில்லை. இது ஏமாற்றமாகவும் வேதனையாகவும் இருக்கிறது.

தி.மு.க, காங்கிரஸ் மற்றும் அதிமுக தவிர மற்ற அனைத்துக் கட்சிகளும் சிறப்பு முகாம்களை மூடி அவற்றில் உள்ள அகதிகள் அனைவரையும் விடுதலை செய்யுமாறு கோரியுள்ளனர். பல்வேறு மனிதவுரிமை ஆர்வலர்கள் இந்தக் கொடுமைகள் குறித்து குரல் எழுப்பியுள்ளனர். சர்வதேச அமைப்புகளுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளன. இருப்பினும் உலகத்தின் கவனமும் குறிப்பாக தமிழ்மக்களின் கவனமும் இந்த கொடுமைகள் குறித்து கவனம் கொள்ளாததாலேயே அகதிகள் மீதான சிறப்புமுகாம் கொடுமைகள் தொடர்கின்றனவோ என எண்ணத் தோன்றுகிறது.

ஈழத்தமிழ்த் தலைவர்களின் கண்டு கொள்ளாத அவல நிலை

ஈழத் தமிழ் தலைவர்கள் அடிக்கடி இந்தியாவுக்கு விஜயம் செய்து பிரதமர் மற்றும் தமிழக முதலமைச்சர் ஆகியோரைச் சந்தித்து வருகின்றனர். அவ் வேளைகளில் அவர்கள் ஒருமுறைகூட சிறப்பு முகாமில் அடைத்து வைத்திருக்கும் அகதிகளை விடுதலை செய்யுமாறு கோரியதில்லை. அண்மையில் தமிழகத்திற்கு விஜயம் செய்த வடமாகாண முதலமைச்சர் விக்கினேஸ்வரன் அவர்கள் தமிழகத்தில் இருக்கும் அகதிகளை இலங்கைக்கு அனுப்பி வைக்குமாறு கோரிய போதும்கூட சிறப்பு முகாமில் அடைத்து வைத்திருக்கும் அகதிகளை விடுதலை செய்ய வேண்டும் எனக் கோராதது ஈழ தமிழ் மக்களின் அவல நிலையைக் காட்டுகிறது.

இதைவிட பெரிய கொடுமை என்ன வெனில் அமெரிக்காவில் இருக்கும் நாடுகடந்த தமிழீழ அரசின் பிரதமர் என தன்னைத்தானே அறிவித்துக்கொள்ளும் உருத்திரகுமார் அவர்கள்கூட ஊழல் வழக்கில் தண்டனை பெற்ற ஜெயா அம்மையாரை விடுதலை செய்யமாறு அறிக்கை விடுக்கின்றார். ஆனால் அந்த ஜெயா அம்மையாரினால் சிறப்பு முகாம்களில் அடைத்து வைத்திருக்கும் அகதிகளை விடுதலை செய்யுமாறு அறிக்கை விடப்படவில்லை.

சிங்கள இனவெறி அரசு தமிழர்களை விடுதலை செய்தாலும் தமிழக அரசு விடுதலை செய்ய மறுக்கிறது

இலங்கையில் பதவியேற்ற புதிய ஜனாதிபதி மைத்திரி அவர்கள் சிறையில் உள்ள அரசியல் கைதிகளை விடுதலை செய்வதாக உறுதியளித்திருந்தார். ஆனால் தமிழ் நாட்டில் என்ன ஆட்சி மாற்றம் ஏற்பட்டாலும் யார் பதவிக்கு வந்தாலும் சிறப்பு முகாமில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் அப்பாவி அகதிகளை விடுதலை செய்ய மறுக்கின்றார்கள். விடுதலை செய்வது குறித்து எந்த உறுதிமொழியைக்கூடத் தர மறுக்கிறார்கள்.

[சித்திரவதை தொடரும்]

இந்த வாரம் உங்களுக்கு... (25 - 31 ஜூலை 2018)

மேடம்

இந்த வாரம் செலவு அதிகரிக்கும். தேவையான வங்கிக் கடனுதவி கிடைக்கும். பங்கு தாரர்களிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். மாணவ, மாணவியர் படிப்பில் ஆர்வம் காட்டுவீர்கள். வகுப்புத் தேர்வுகளில் அதிக மதிப்பெண் பெற்று ஆசிரியர்களின் பாராட்டுகளைப் பெறுவீர்கள். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு செலவுகள் கூடும். என்றாலும் குடும்பச் செலவுகளைச் சமாளித்து விடுவீர்கள்.

கடகம்

பழைய கடன்கள் தீர்வதற்கு வாய்ப்பு உண்டு. வழக்குகள் சாதகமாகும். வேலைக்குச் செல்பவர்களுக்கு அலுவலகத்தில் உற்சாகமான சூழ்நிலை நிலவும். ஒரு சிலருக்குப் பதவி உயர்வு அல்லது ஊதிய உயர்வு கிடைப்பதற்கு சாத்தியமுண்டு. வியாபாரத்தில் முக்கிய முடிவுகள் எதையும் இப்போது எடுக்கவேண்டாம். அவசியம் முடிவு எடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டால், தகுந்தவர்களிடம் ஆலோசனை கேட்டுச் செய்யவும்.

துலாம்

வியாபாரத்தில் சற்றுக் கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். பண வரவு சுமுகமாக நடக்கும். பணியாளர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும். கலைத்துறையினர் கடுமையாகப் பாடுபட வேண்டி இருக்கும். ஆனால், அதற்கேற்ற வருமானம் கிடைப்பதால் சோர்வு மறைந்து உற்சாகம் ஏற்படும். மாணவ, மாணவியர் உற்சாகமாகப் படிப்பில் கவனம் செலுத்துவீர்கள். சிலருக்குப் படிப்பு சம்பந்தமாக வெளிநாடுகளுக்குச் செல்லவேண்டி இருக்கும்.

மகரம்

எதிர்பார்த்ததை விடவும் வருமானம் கூடுதலாகவே இருக்கும். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். அவ்வப்போது சிறு சிறு பிரச்சினைகள் ஏற்பட்டு மனதில் லேசான சோர்வை உண்டாக்கும். வழக்குகளில் வெற்றி ஏற்படும். வீண் செலவுகள் எதுவும் ஏற்படாது.வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விட இலாபம் அதிகமாக வரும் என்றாலும் அதற்காக மிகவும் உழைக்கவேண்டி இருக்கும்.

இடபம்

திருமண வயதில் உள்ளவர்களுக்கு நல்ல இடத்தில் திருமணம் நிச்சயமாகும். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். இருந்தாலும், அதிகாரிகள் அனுசரணையாக நடந்துகொள்வதாலும், அதற்கேற்ற சலுகைகள் கிடைப்பதாலும் உற்சாகமாகச் செயற்படுவீர்கள். வியாபாரத்தை விரிவு படுத்தவும், வாடகை இடத்தில் இருந்து சொந்த இடத்துக்குக் கடையை மாற்றவும் வாய்ப்பு உண்டாகும்.

சிம்மம்

கருத்து வேறுபாட்டின் காரணமாகப் பிரிந்திருந்த உறவினர்கள் உங்களைப் புரிந்து கொண்டு மீண்டும் வந்து பேசுவார்கள். கலைத்துறையினருக்கு புதுப்புது வாய்ப்புகளும் தாராளமான பணவரவும் கிடைக்கும். ஒரு சிலர் புதிய வாகனம் வாங்குவீர்கள். மாணவ, மாணவியர் தேவை இல்லாமல் வெளியில் செல்வதைத் தவிர்ப்பதுடன், படிப்பில் கூடுதல் கவனம் செலுத்தவேண்டியது அவசியம்.

விருச்சிகம்

பணியின் காரணமாக வெளியூர்ப் பயணம் செல்ல நேரும். பழைய வாகனத்தை மாற்றி, புதிய வாகனம் வாங்குவீர்கள். வெளியில் உண்பதையோ நேரம் தவறி உண்பதையோ தவிர்க்கவும். அலுவலகத்தில் உற்சாகமாக உங்கள் பணிகளைச் செய்வீர்கள். சிலருக்கு இருக்கும் இடத்தில் இருந்து வேறு ஊருக்கு மாறுதல் கிடைக்கும். அதனால் நன்மையே உண்டாகும்.

கும்பம்

வியாபாரத்தில் எதிர்பார்த்த அளவுக்கு இலாபம் கிடைக்காது. போட்டிகளைச் சமாளிக்க கடுமையாகப் பாடுபடவேண்டி வரும். புதிய முயற்சிகள் எதுவும் இப்போது வேண்டாம். கலைத்துறையினர் கடுமையான முயற்சி செய்தால்தான் வாய்ப்புகள் வரும். ,அப்படி வரக்கூடிய வாய்ப்புகளைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்வது நல்லது. மாணவ, மாணவியர்க்கு படிப்பில் ஆர்வம் அதிகரிக்கும்.

மிதுனம்

வீட்டில் சுப நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கு வாய்ப்பு உள்ளது. வேலைக்குச் செல்பவர்கள் வேறு வேலைக்கு முயற்சி செய்யவேண்டாம். அலுவலகப் பணிகளிலும் கவனமாக இருப்பது அவசியம். மூத்தோரின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது. மாணவ, மாணவியர்க்குப் படிப்பில் ஆர்வம் ஏற்படும். பெற்றோர் மற்றும் ஆசிரியர்களின் பாராட்டுகள் உங்களை உற்சாகப்படுத்தும்.

கன்னி

சிலர் வாடகை இடத்தில் இருந்து சொந்த இடத்துக்கு மாறுவீர்கள். கலைத்துறையினருக்கு சிறு சிறு தடை தாமதங்களுக்குப் பிறகே எதிர்பார்க்கும் வாய்ப்புகள் கிடைக்கும். வருமானம் ஓரளவு திருப்தி தரும். மாணவ, மாணவியர் படிப்பில் அதிக அக்கறை எடுத்துக் கொள்வீர்கள். ஆசிரியர்கள் உங்களுக்கு ஆலோசனை சொல்வதுடன் தேவையான உதவியும் செய்வார்கள்.

தனுசு

வியாபாரத்தில் எதிர்பார்த்ததைவிடவும் இலாபம் கூடுதலாகக் கிடைக்கும். பணியாளர்கள் நல்லமுறையில் பணி செய்வார்கள். கலைத்துறையினருக்கு எதிர்பார்த்த வாய்ப்புகள் வரும். வருமானமும் கூடுதலாக வருவதற்கு வாய்ப்பு உள்ளது. மாணவ, மாணவியர் படிப்பில் மிகுந்த ஈடுபாட்டுடன் கவனம் செலுத்துவர். அதன் காரணமாக தேர்வுகளில் நல்ல மதிப்பெண்கள் பெறமுடியும்.

மீனம்

கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். திருமண வயதில் இருப்பவர்களுக்கு நல்ல இடத்தில் திருமணம் நிச்சயமாகும். வியாபாரத்தில் புதிய முதலீடுகள் இப்போது வேண்டாம். கலைத்துறையினருக்கு வாய்ப்புகள் கிடைக்கும் .உடல் ஆரோக்கியம் பாதிப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதால் தேவையான அளவுக்கு ஓய்வு எடுத்துக் கொள்வது அவசியம்.

புதிய நகைகளும் நவீன பெண்களும்



தங்க நகைகள் அணிவதில் அதிக ஆர்வமுடன் திகழும் தற் காலப் பெண்கள் அதனை தற் கால நவீன வடிவமைப்புகளி லும், தற்காலப் போக்குக்கு ஏற் பவும் தேர்வு செய்கின்றனர்.

பெரிய முத்துமாலைகள், அடுக் கடுக்கான நெக்லஸ்கள், பூ வடி வமைப்பிலான பெரிய காதணி கள், ஆடைகளில் சொருகக்கூடிய பெரிய ஆபரண ஊசிகள், மணி யமைப்புக் காதணிகள் என்ற வாறு அனைத்தும் பிரம்மாண்ட மான தோற்றத்துடன் கண் கவ ரும் வகையில் உள்ளன. இது தற்கால இளம் யுவதியர்களைக் கவர்ந்து இருப்பதால் அதுவே தற்போதைய ட்ரெண்டாக உள் ளது.

ஒற்றைக் கல் பதக்கத்துடன் மூன்று வரிசையில் தொங்கும் நெக்லஸ்கள், கூழ்த்துடன் இறுக் கிப் பிடிக்கும் கல் அலங்கார நெக்லஸ், முத்துக்கள் மற் றும் தங்க மணி உருளைகள் இணைந்து பெரிய வட்டவடிவ மாலைகள் மற்றும் நெக்லஸ்கள் என்பன பெண்களின் மனதைக் கவர்கின்றன.

சுசியின் டயறியில் இருந்து...

சமூகச் செயற்பாட்டாளரும், உளவியல் ஆலோசகராகவும் செயற்பட்டுவரும் சுசி, வன்கொடுமைகள், துன்புறுத்தல்கள், அடக்குமுறைகளுக்குள் சிக்கி, அதில் இருந்து மீளமுடியாமல் முடங்கிபோய் இருக்கும் பல பெண்களைத் தனது சொற்க ளால் தூக்கிவிட்டு, மீட்டெடுக்கும் அரிய பணியை மேற் கொண்டு வருகின்றார். அவர் சந்தித்த பல பெண்களை இனி மேல் நீங்களும் ஒவ்வொரு வாரமும் சந்திக்கப் போகின்றீர்கள்.

நல்லதோர் வீணை செய்தே...

2004 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 26 ஆம் திகதி இலங்கையின் கரையோரப் பகுதிகள் கொந்த ளிக்கத் தொடங்கின. ஆழியின் கொந்தளிப்பு சுனாமி யாய் மாறியது. சிலரின் வாழ்க்கையும் இதனால் அடை யாளம் காணமுடியாத அளவுக்கு மாறிப்போனது. அவ்வாறு தான் சுனாமிக்குப் பின் அனைத்து உறவு களையும் ஆழி அள்ளிச் செல்ல அநாதையானாள் மலிகா. அவளை அணைத்துக்கொண்டது கடற்கரை யும், அங்கே வந்து போகும் மனிதர்களும் தான். அப் போது அவளுக்கு பத்து வயது மாத்திரமே. பாவம் அந் தப் பிஞ்சுப் பெண். பசி பத்தும் செய்யும் என்பது மெய் யானது. ஒருவேளை சோற்றுக்காய் தன்னையே அவள் இழக்கத் தொடங்கினாள். அன்றில் இருந்து அவளி டம் தன் இச்சைகளைத் தீர்த்துக்கொள்ள வருபவர் களுக்கு வயது வித்தியாசமில்லை.

அந்தஸ்து, சாதி, மதம் இல்லை. காவலன், திருடன் என்ற பாகுபாடில்லை.

ஏழை, பணக்காரன் என்றில்லை. நிற பேத மில்லை. பலரும் தங்களுக்கு விரும்பிய நேரங்களில் விரும்பியபடி அவளைப் பங்குபோட்டுப் கொண் டார்கள். அவள் இப்பொழுது கூட ஒரு கருவுக்குச் சொந்தக்காரி.

பட்டியலிடப்பட்ட அவளுடைய தேவைகளில் முதலாவதாக உள்ளது ஒரு பாதுகாப்பான இடமே.

குறிப்பிட்ட பிரதேசத்திலுள்ள அனைத்துத் தன்னார் வத் தொண்டு நிறுவனங்களும் அவளை ஏற்றுக்கொள்ள மறுத்தன. நான் விடை தெரியாமல் முழிக்கவே, அவர் களே பதிலும் கூறினார்கள்.

நல்ல உள்ளம் படைத்த பலர் எத்தனையோ தடைவை அவளை இல்லங்களில் சேர்த்துள்ளனர்.

ஆனால், அவளால் ஓரிடத்தில் இருக்க முடிவ தில்லை. அதுமட்டுமல்ல, அவளால் பெற்றெடுக்கப் பட்ட குழந்தைகள் பற்றியும் அவர்கள் அடுக்கிச் சொன்னார்கள். கர்ப்பிணி என்பதால் மலிகா மிகவும் சோர்வுற்றிருந்தாள். குறிப்பிட்ட பிரதேச சபை உத்தி யோகத்தர்கள் மூலம் பொலிஸில் ஒரு முறைப்பாடு செய்துவிட்டு, அவளை அரச வைத்தியசாலையில் அனுமதிக்கச் சென்றபோது, அங்குள்ள வைத்தியர் களுக்கு அவள் ஏற்கனவே நன்றாக அறிமுகமானவள் என்பது தெரியவந்தது. இதே வைத்தியசாலையில் அவளுக்கு ஐந்துக்கு மேற்பட்ட பிரசவங்களும், பல கருச்சிதைவுகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தமை சுட்டிக் காட்டப்பட்டது. மேலும் கர்ப்பப்பை மிக மோசமான நிலையில் இருப்பதாகவும், அகற்றப்படாவிட்டால் உயிருக்கே ஆபத்து ஏற்படும் என்றும் வைத்தியர்கள் தெரிவித்தார்கள். அதனால், அவளுடைய ஒத்துழைப் போடு கர்ப்பப்பை அகற்றப்பட்டது.

அவள் அங்கிருந்தால் மீண்டும் அதே இடத்துக் குச் சென்றுவிடுவாள் என்பதால் வேறொரு மாவட் டத்தில் உள்ள ஒரு மகளிர் இல்லத்தில் சேர்க்கப்பட் டாள். அவளுக்குத் தொடர்ச்சியாக உளவளத்துணை ஆலோசனை வழங்கப்பட்டு, அவளுடைய மனநிலை சீர்செய்யப்பட்டது. மேலும் தொழில் ரீதியிலான சிகிச்சைகளும் வழங்கப்பட்டன. எட்டு மாதங்கள் கடந்துவிட்ட நிலையில் அங்குள்ள அத்தனை பேருக் கும் விதவிதமாய் சமைத்துப் போடும் சமையல் காரியாகி விட்டாள் மலிகா. அநாதையாய் சென்ற அவளுக்கு அங்கே அக்கா, மாமி, சித்தி, மகள், அம்மா என அனைத்து உறவுகளும் ஒரே இடத்தில் கிடைத்து விட்டன. ஒரு வயிற்றுச் சோற்றுக்காய் தன் உட லையே அர்ப்பணித்த மலிகா, தற்போது தன்னைப் போல் ஆதரவற்றவர்களுக்கு உணவிட்டு அன்பு காட்டும் மகளாய், தாயாய் மாறி விட்டாள். இதனை வாசித்துக் கொண்டிருக்கும் நாம் இன்னொரு மலிகாவை உருவாக்காமல் இருப்பதற்குத் திடம்கொள்வோம்.

2ஆம் பட்சமாக்கப்படும் பெண் சமூகம்

விஞ்ஞானி, துறவி, சித்தர், அரசியல்வாதி, அதிகாரி, எழுத் தாளர், மருத்துவர் உள்ளிட்ட பெரும்பாலான தொழில்சார்ந்த வார்த்தைகள் ஆண்களைக் குறிப்பதாகவே உள்ளன. இதில் பெண் என்ற சக உயிர் குறித்த அறிதலும், புரிதலும், தெளி வான சிந்தனையும், மதிப்பிட லும் பூச்சிய நிலையில்தான் உள்ளன. பொதுவாக, பெண்க ளைப் பற்றி எண்ணும்போ தும் பேசும்போதும், இரண் டாம்தரமான எண்ணங்களும் பேச்சும் வெளிப்படும்.

தாய்வழிச் சமூக வாழ்க்கை முறையின் கதவு என்றைக்கு மூடப்பட்டதோ அன்றைக்கே பெண் என்ற சக உயிர் இரண் டாம் பட்சமாக்கப்பட்டுவிட் டது. இது பெண்ணுக்கு நிகழ்ந்த மாபெரும் கொடுமை.

உலகம் முழுவதும் உள்ள மதங்களில் பெண்கள் இரண்டா வது இடத்தில்தான் வைக்கப் பட்டுள்ளனர். மதங்களில் உள்ள சம்பிராதாயங்கள், சடங்குகள், மூடப்பழக்கங்கள் போன்றவை பெண்களின் வாழ்வை அடிமைச் சங்கிலிகொண்டு பிணைத்து வைத்திருக்கின்றன. அவற்றில் இருந்து பெண்கள் மீண்டு வரவே இயலாத வகையில் மதம் அவர்களைத் தன்வசப் படுத்தி வைத்திருக்கிறது.

துணிவே துணை

ரௌத்திரம் பழகு

என்னுடைய கண வர் 2009 ஆம் ஆண்டு யுத்தத்தில் உயிரிழந்து விட்டார். எனக்கு 3 பெண் பிள்ளைகள் உள்ளனர். அவர்கள் மூவரும் படித்துக் கொண்டிருக் கின்றார்கள். நான் உணவு விடுதி ஒன்றை நடத்தி வருகின்றேன். பிள்ளைகளின் படிப்புச் செலவு, உணவு, அடிப்படைத் தேவை கள் அனைத்தையும் இந்தக் கடை யில் வரும் வருமானத்தில் தான் நிறைவேற்றிக் கொள்கின்றேன். நான் ஒரு பெண்ணாக இருந்து இந்தக் கடையை நடத்துவதால், அன்றாடம் பல பிரச்சினைக ளைச் சந்திக்கின்றேன். மாலை 8 மணிக்குத் தான் கடையை மூடுவேன். அந்த நேரத்தில் கடைக்கு வரும் ஆண்கள் தவறாக என்னிடம் பேசு வார்கள். குடிபோதையில் வந்து அத்துமீறி நடப்ப தற்கு முயற்சிப்பார்கள். ஆரம்பத்தில் இவற்றையெல் லாம் கண்டு பயந்தேன். ஒரு கட்டத்தில் கடையை மூடி விடலாம் என்று கூட யோசித் தேன் இந்த நிலையில் தான் என்னைப்போல கணவனை இழந்த சில பெண்களைச் சந்தித்தேன். அவர்களும் தனியாக வாழ்வ தால் அன்றாடம் பல பிரச் சினைகளைச் சந்திப்பதாகக் கூறினார்கள். பின்னர் அவர் களுடன் கலந்தாலோசித்தேன். தொடர்ச்சி என்னுடன் 3 பெண்கள் இணைந்தனர். நாங்கள் உணவு விடுதியை நடத்தினோம். நான் தனியாளாக இருந்தபோது என் னைச் சீண்டியவர்கள், நால்வராக இணைந்த போது, நெருங்கவே பயந்தார்கள். எங்களுடைய ஒற்று மையின் மூலம் எங்கள் பலத் தைக் காட்டினோம். அவர்கள் பயந் தார்கள். ஒவ்வொரு பெண்ணும் துணிந்து நின்றால் துன்பம் வில கும்.

கவிதா, கிளிநொச்சி

பாலியல் தொல்லைகளை பகிரங்கம் செய்வோம்

இத்தனை காலமும் பேசுவதற்குத் தயங்கிக் கொண்டிருந்த, மறைத்து வைத்துப் புழுங்கிக் கொண்டிருந்த, தங்களுக்கு நேர்ந்த பாலியல் ரீதியான துன்புறுத்தல்களைப் பற்றி, பாதிக் கப்பட்ட பெண்களே இப்போது பொதுவெளியில் பகிரங்கமாகப் பேச ஆரம்பித்துள்ளனர். 'எதி ரொலி' வாசகிகளே! நீங்களும் உடைத்துப் பேச விரும்பும் விட யங்களைப் பொதுவெளியில் பதிவு செய்யுங்கள். உங்கள் இரகசியம் காக்கப்படும். நீங்கள் சந்தித்த பாலி யல்சார் பிரச்சினைகளையும், அதைக் கையாண்ட வித்தையும் எழுதுங் கள். உங்கள் அனுபவம் பல பெண் களைப் பாதிப்புறாமல் காக்கட்டும்.

'ரௌத்திரம் பழகு'
அம்பலம் பதிப்பகம்,
இல. 241,
கைதடி – மானிப்பாய் வீதி,
உடுவில், யாழ்ப்பாணம்.
அல்லது
ethirolimedia@gmail.com

கண்டம் கடந்து சாதித்தவள் திவ்யா சூர்யாதேவரா!

(கடந்தவாரத் தொடர்ச்சி)

மிகவும் கடினப்பட்டு ஜி.எம் கம்பனிக்குள் நுழைந் தாள். தன் திறமையால் 'பளிச்' எனத் தெரியத் தொடங்கி னாள். அடுத்து திருமணம், குழந்தை என்று குடும்பம் வளர, பணியிலும் ஏற்றம் வந்தது. 2013 இல் ஜி.எம் இன் தலைமை நிர்வாக அதிகாரியா னவள், 85 மில்லியன் அமெ ரிக்க டொலர் ஓய்வூதியத் திட்டத்தை மிக வெற்றிகரமாக வும், பாராட்டத்தக்க விதமாக வும் செய்தாள். 2015 இல் நிதி மற்றும் பொருளியல் துணைத் தலைவராகி ஏணியின் உச்சப் படிகளுக்கு அருகில் வந்தாள். அமெரிக்காவின் ரெட்ராய்ட் நகரில் இயங்கும் உலகின் முன் னணி நிறுவனங்களில் ஒன்று தான் ஜெனரல் மோட்டர்ஸ் கம்பெனி. அதன் 110 வருட வரலாற்றில் முதல் தடவையாக ஒரு பெண் சீ.ஈ.ஓவாக (C.E.O.) தெரிவு செய்யப்பட்டுள்ளார். அவர் வேறு யாருமல்ல 39 வயதான இந்தியப் பெண்ணான திவ்யா சூர்யாதேவராதான். எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி ஜெனரல் மோட் டர்ஸ் கம்பனியில் தலமை நிதி அதிகாரியாகப் பொறுப்பேற் கின்றாள். பெப்ளியின் இந்திரா நூயிக்குப் பிறகு இது போன்ற முக்கியப் பதவியை வகிக்கப் போகும் இரண்டாவது தமிழ்ப் பெண் திவ்யா.

குடும்பம் நியூயோர்க்கில். பணி டெட்ராய்ட்டில். உடற் பயிற்சியும், பொக்லிங்கும் தின சரி மேற்கொள்வாள். வார இறுதியில் மாத்திரமே தன் மகளைப் பார்க்கப் போகை யில், "அம்மா நான் உன்னைப் போல் வருவேன்" என்று சொல் லும் தன் மகளின் வார்த்தை களே தனக்குப் பெருமிதம் என் கின்றார் திவ்யா.

பிறேம்ராஜ், கொழும்பு

கடலும் நானும்

இழுப்புகளுக்கு
அலுப்புக் கொள்ளாத - இந்த
அலைகளுக்கு முன் நின்று
அண்ணார்ந்து பார்க்கிறேன்...
கால்களுக்கு கீழ் நுழைந்து
கூச்சம் காட்டிச் செல்லும்
நீச்சல் திவலைகளா?
கரை கடந்து திரண்டு
உடல் உடைத்து சென்றன?
கடல் நீர் பெரிதா?
கண்ணீர் பெரிதா - என்று
கதறச் செய்ததும் இதுதானா?
ஒரு விரலை அலையில் விட்டு
உள்ளங்கையில் சொட்டிப் பார்க்கிறேன்...
இப்படி சிறுசிறு துளிகளாய்
சேர்ந்ததுதானே கடல்?
ஒன்றாய் இருந்த
உறவுகள் எல்லாம்,
ஒவ்வொரு திசையில்
ஓடிடச் செய்ததும் இதுவேதானா?
கடந்த சென்ற அலைகளுக்கு
வயதேறி போனாலும்,
கண்ட கவலைகள்
இன்னும் இளமையாய்.....
எத்தனை நாட்களைதான்
இப்படியே கடத்துவது...?
கடலை விடுத்து
கண்களை நீக்கினேன்...
கவலைகள் முழுக்க
கரைவழி கிடத்தினேன்...
தன்னையே நம்பி
தரைவழி நடந்தேன்....
அதோ...
முன்னே பாருங்கள்...
இன்னும் கடக்க
எவ்வளவு தூரம் இருக்கிறது.....???

- விக்கி விக்னேஷ்

புள்ளடியா? செருப்படியா?

● நவீன சவாரித்தம்பர்

இப்பவெல்லாம் பாருங்கோ... அரசியல் செய்ய வெளிக்கிடுகிற ஆட்களுக்கு முதல்ல மக்கள் சேவை எண்டால் என்ன? மகேசன் சேவை எண்டால் என்ன? எண்டதைக் குறிச்சு ஒரு வகுப்பு எடுத்து விளங்கப் படுத்திப் போட்டுத்தான் எலெக் சனில நிக்கச்சொல்லி விடவேணும் போல கிடக்குது. ஏனெண்டால் அரசியலில இப்ப எல்லாம் 'கத்துக்குட்டி'களாகவே இருக்குதுகள்.

மக்களுக்கு சேவை செய்யிறதெண்டது மகேச னான கடவுளுக்குச் செய்யிற மாதிரிக் கண்டியளே!

ஏதோ சும்மா ஒப்புக்கு ஏனோதானோ எண்ட மாதிரி மகேசனுக்குச் செய்யலாமே? செய்யேலாது. அப்பிடிச் செய்தால், அது உண்மையான கடவுள் பக்தியில்லை. நடிப்பு! வேஷம்.

அதேமாதிரித்தான் மக்களுக்கு சேவை செய் யிறதையும் நினைக்க வேணும். மகேசனுக்கு எப்படி உளமார்ந்த பக்தியோடை செய்தால், வரம் கிடைக் கும் அருள் கிடைக்கும்...எண்டு நினைக்கினமோ அப்படியே மக்களுக்கும் மனச்சுத்தியோடை செய் யேக்கைதான், சனங்களின்ரை புள்ளடி வோட் டுகளும் பெட்டிக்குள்ளை எக்கச்சக்கமாக வந்து விழும் பாருங்கோ!

மக்களுக்குச் சேவை செய்யவெண்டு வெளிக் கிட்ட பெரும்பாலான 'வெள்ளை உடுப்புக்காரர்' எல்லாம் எலெக்சனில வெண்டாப்பிறகு... அவையள் நடத்துற கூத்துகள்...கும்மாளங்களைப் பார்த்து நாத்தம் தாங்கேலாமல் முகத்தைப் பொத்திக் கொண்டு திரியவேண்டிக் கிடக்குது.

நான் இப்ப இதில என்ன சொல்ல வாறன் எண்டால் -

நடந்து முடிஞ்ச உள்ளூராட்சி எலெக்சனில வெண்ட, ஒருசில ஆட்களின்ர ஆட்டங்களைப் பார்க்கேக்கை, ஏன்தான் உதுகள் அரசியலுக்கு வந்துதுகளோ...ஏன்தான் உதுகளுக்கு சனங்கள் வோட்டுப் போட்டுதுகளோ... எண்டு நினைக்க வேண்டிக் கிடக்குது.

இப்ப கிட்ட டியில புதுக்குடியி ருப்பு பிரதேச சபை யில அஞ்சாவது அமர்வு தவிசாளர் தலைமையில நடந்திருக்கு. அதிலசனத்தின்ரை தேவையளும் கதைச்சதோடை, சிலபேருடைய தனிப்பட்ட குப்பை கூழங்களையும் நோண்டிக்கிளற வெளிக்கிட்டிருக்கினம்.

இதாலை அங்கை பெரிய அமளிதுமளி நடந்திருக் குது. இந்தக்கூத்துக்கு நடுவில மூண்டு கட்சியைச் சேர்ந்த ஆட்கள் மேசையில தாளம் தட்ட வெளிக் கிட்டு, இதுகளின்ரை ஆய்க்கினை அரியண்டம் தாங் கேலாமல்,தலைமை வகிச்ச தவிசாளர் அவையளைக் கழுத்தில புடிச்சு வெளியே தள்ளாத ஒரு குறையாக வெளியேற்றினவர்...எண்டு பேப்பரிலகூட செய்தி யள் வந்திருக்கு.

மெய்யே! தெரியாமல்தான் நான் கேட்கிறன். கோவிச்சுப் போடாதை யுங்கோ...

உதுகள் எல்லாம் மக்களுக்குச் சேவை செய்ய வந்ததுகளோ...? இல்லாட்டி ஒண்டோடை ஒண்டு மல்லுக்கட்டி கொளுத்தாடு பிடிக்க வெளிக்கிட்ட துகளோ...?

சனங்கள் உப்பிடியான 'படிச்சமனுசருக்கு'(?)ப் போட்ட புள்ளடிகளைப் பார்த்து இப்ப சந்தி சிரிக்குது.

இனியாவது இதை உணருவினமோ? இல்லை திருந்துவினமோ? இப்பிடியே நடந்திச்சினம் எண்டா இனிமேல் சனம் இவைக்குப் புள்ளடி போடாது, செருப்படிதான் குடுக்கும். ■

புத்திசாலி கண்ணாடி



வயது ஆக ஆக கண்களின் பார்வைத் துல்லியம் குறைகிறது. இந்தக் குறை யைப் போக்கக் கண்ணாடிகள் பெருமளவு உத வினாலும், அவற்றிலும் சிக்கல்கள் உள்ளன. ஒரே கண்ணாடியில் படிப்பது, கிட்டப் பார்வை, தூரப் பார்வை போன்ற மூன்று வசதிகளையும் கொண்ட, 'புரகிரசிவ்' கண்ணாடிகள்கூட கண் களுக்கு அசதியைத் தரக்கூடியவைதான்.

இதற்குத் தீர்வு கண்டிருக்கிறார் நிதீஷ் பத் மநாபன். அமெரிக்காவில் உள்ள ஸ்டான் போர்ட் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளரான இவ ரும், இவரது குழுவினரும், 'ஓட்டோபோகல்' என்ற புத்திசாலிக்கண்ணாடியைவடிவமைத்துள்ளனர்.

இந்தக் கண்ணாடியில் கண்கள் பார்க்கும் திசை, தூரம் போன்றவற்றை அளக்கும் உணரி கள் உள்ளன.

அணிபவரின் பார்வைக் குறைபாட்டின் அள வுகளை, இந்தக் கண்ணாடியில் உள்ள சிறிய கணினிக்கு முன்பே தந்துவிட்டால், அந்தக் குறைபாட்டை இட்டுக்கட்டி '20/20' எனப் படும் துல்லியமான பார்வையை இந்தக் கண் ணாடி தந்துவிடுகிறது.

நிதீஷ் வடிவமைத்துள்ள இந்தக் கருவியில் உள்ள ஆடிக்குள் உள்ள திரவத்தை மின் தூண்டல் மூலம் கிட்டப் பார்வை, தூரப்பார்வை போன் றவறுக்கு வினாடியில் மாற்றிவிட முடிகிறது.

எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் வெள்ளோட்டம் விடப்படவிருக்கும் ஓட்டோபோகல் கண்ணா டியை, ஒருவர் வாழ்நாள் முழுவதும் பயன் படுத்த முடியும் என்கின்றார் நிதீஷ்.

படியேறும் ரோபோ!

அமெரிக்காவின் மாசாசூசெட்ஸ் தொழில்நுட்ப நிலையத்தின் விஞ் ஞானிகள், நான்கு கால்களைக் கொண்ட 'சீட்டா 3' என்ற ரோபோவைத் தயாரித்து, அதனைப் பரிசோதனையில் ஈடுபடுத்தி உள்ளனர். அது சிறுத்தை போல ஓடவும், நடக்கவும், தாவவும் கற்றுக்கொண்டு விட்டதாம். இதன் அடுத்த கட்டமாக, அதற்குப் பார்வைத் திறன் இல் லாமலேயே, படிக்கட்டுகளில் ஏறப் பயிற்சி கொடுக்க ஆரம்பித்துள்ளனராம்.

ரோபோக்கள் எதிரே உள்ள தடைகள் மீது மோதாமல் நடப்பதற்குப் பார்வையை நம்பியிருப்பது உதவாது என்கின்றனர் விஞ் ஞானிகள். பார்வை மூலம் வரும் தக வல்களைப் ரோபோ புரிந்துகொண்டு சுதா கரிப்பதற்குள், அவை கீழே விழுந்துவிடும். எனவே, சீட்டா 3யின் கால்களில் உள்ள ஏராளமான உணரிகளை மட்டுமே வைத்து, நடை பழகுவதற்குத் தேவையான புதிய மென்பொருள் நிரல்களை மாசாசூசெட்ஸ் விஞ்ஞானிகள் உருவாக்கி உள்ளனர்.

ரோபோவின் கால்கள் இருக்கும் நிலை, கோணம் போன்றவற்றை உணரிகள் உணர்ந்து வினாடிக்கு 20 முறை தகவல்களை மென்பொருள் நிரல்களுக்கு அனுப்ப அந்த மென்பொருள்கள் இடும் கட்டளைப்படி அடுத்த அடியை எடுத்து வைக்கிறது சீட்டா 3.

விவசாயியும் மின்சாரம் விளைவிக்கலாம்!

விவசாயிகளும் மின் உற்பத்தி செய்ய முடியும். அதற்குத் தடையாக இருப்பது நிழல். சூரிய மின் பலகைகளை விளை நிலத்தில் வைத்தால், விவசாய நிலங்களும் மின்சாரத்தை உற்பத்தி செய்யலாம்.

ஆனால், மின் பலகைகளுக்கு கீழே நிழல் விழும். அது பயிர்களுக்கு எதிரி. இந்தச் சிக்கலைத் தவிர்க்கும் தொழில்நுட்பத்தை உருவாக்கி உள்ளது, சீனாவில் உள்ள யு.எஸ்.டி.சி. தொழில்நுட்பக் பல்கலைக் கழகத்தின் ஆராய்ச்சிக் குழு.

இந்தக் கருவியில் குவி ஆடிக்குப் பதிலாகச் சீன விஞ்ஞானிகள் உருவாக்கி உள்ள புதியவகை கண்ணாடிக் காகிதத்தை ஆடிபோல பயன்படுத்தலாம். அதே சமயம், கண்ணாடிக் காகிதத்தை ஊடுருவும் சூரிய ஒளி, கீழே விளையும் பயிர்களுக்கும் கிடைக்கும் .

பெரும்பாலான பயிர்களுக்குச் சூரிய ஒளியில் 10 சதவீதம் கிடைத் தாலே போதும் என்பது அறிவியல் உண்மை. சூரியக் கதிரில் உள்ள ஏழு வண்ணங்களில் நீலம் மற்றும் சிவப்பு ஒளிக் கற்றைகள் இருந்தாலே பயிர்கள் வளரும்.

விவசாயிகள் என்ன பயிரிடுகின்றனரோ, அதற்கு ஏற்ற ஒளி வண் ணத்தை மட்டும் வெளிவிடும் கண்ணாடிக் காகிதங்களைத் தயாரிக்கும் தொழில்நுட்பம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தத் தொழில்நுட்பம் பரவலாகக் கிடைத்தால், விவசாயிகள் தம் விளை நிலத்தில் மின் உற்பத்தி செய்து அதை மின்வாரியத்துக்கு விற்கலாம். அத்துடன் , சூரிய ஒளி குறையும் பருவத்தில், பயிர்களுக்குப் போதிய சிவப்பு, நீல ஒளி கிடைக்க மின் பலகைகளுக்கு அடியில் எல்.இ.டி விளக்குகளை பொருத்தி, கிடைக்கும் மின்சாரத்தில் பயிர்களுக்கு வேண்டிய சிவப்பு, நீல ஒளியைப் பாய்ச்சி விளைச்சலையும் பெருக்கலாம்.



மண் மூடும் சுவடுகள்

■ ந.சத்தியபாலன்

மெல்லச் சாகும் தமிழ்

மாலை. நேரம் மூன்றரையைத் தாண்டியிருந்தது. தனது கைபேசியில் பாட்டுக் கேட்டபடி முன் முற்றத்தின் வேம்பு தரும் நிழலில் அமர்ந்திருந்தார் மதி மாஸ்ரர்.

வழக்கமாக அவரிடம் வருகின்ற நண்பர் கோபி தனது வாகனத்தைப் பெரும் பிரயத்தனத்தோடு தள்ளிக்கொண்டு உள்ளே நுழைந்தார்.

"வா..... மச்சான்! எங்க உன்ன நேற்றுக் காணேல்ல?" என்றபடி நண்பரை வரவேற்றார் மதி.

"நேற்று ஞாயிறெல்லே. எங்கட இலக்கியச் சங்கத்தின்ர கூட்டம். அங்கபோய் வீடு திரும்ப ஆறு மணியாச்சு. காலையில வேற அலுவல்கள் இருந்ததில மரம் செடியளுக்கு தண்ணி விடேல்ல.... அதுகளுக்கும் தண்ணி விட்டு முடிய இருட்டிப்போச்சு. அப்பிடியே நிண்டிட்டன்"

"உனக்கு நல்லொரு பொழுதுபோக்கு. உன்ர இலக்கியச் சங்கம் ,உன்ர வீட்டுத் தோட்டம். இதல்லாம் என்னடாப்பா ?"என்றார் மதி.

"இலக்கியச் சங்கத்தை நான் பொழுது போக்குகளுக்குள்ள அடக்கிறதில்ல. அது ஓர் ஆத்ம திருப்தி தாற விசயம். எங்கட பெடியள் சில பேர் இப்ப பதிசாய் எழுத வெளிக்கிட்டிருக்கிறாங்கள்.சும்மா சொல்லக் கூடாது. நல்ல கெட்டிக்காரர்கள். நல்லா எழுதிக்கொண்டிருக்கிறாங்கள் – நல்லா வாசிக்கிறாங்கள் அவங்கள உற் சாகப்படுத்தி அவங்கட திறமையை வளத்தெடுக்கிற பங்கு எங்களுக்கு இருக்கெல்லோ..." என்ற கோபி

"நேற்று எங்கட ஏரம்பு மாஸ்ரரின் மகன் வேந்தன் எழுதின கதைத் தொகுப்புப் பொண்டு வெளியிட்டனாங்கள் – நீ தான் தமிழ் மாஸ்ராக இருந்தாலும் இலக்கியக் கூட்டங்களுக்கு வரமாட்டியே மச்சான். அதுதான் உனக்கு அழைப்பும் தரேல்ல" என்று கூறிமுடித்தான் கோபி.

அவனது கதையால் சிறிதே எரிச்சலுற்ற மதி மாஸ்ரர், "தமிழ் படிச்சால் இலக்கியக் கூட்டத்துக்கு வர வேணுமோ மச்சான். அங்க என்ன பெரிசா வெட்டிக் கிழிக்கினம். சும்மா சுயபுராணமும் விளங்காத தமிழில விளங்கக் கூடாது எண்ட பிடிவாதத்தோட சிலர் பேசுவினம். அதைக் கேட்கிறதால தமிழ் வாத்திமாருக்கு என்ன லாபம்?"

"இப்பிடிச் சொல்லாத மச்சான் எங்களுக்குத் தமிழ் படிப்பிச்ச நாகலிங்க மாஸ்ரரை உனக்கு நினைவிருக்குதா?"

"ஓமோம் அந்தாளுக்கு இப்ப எண்பத்தஞ்சுக்கு மேல இருக்குமே வயது. பாரிசவாதம் வந்து ஏலாமல் இருக்கிறார் எண்டு ஜெயம் சொன்னான் – ஏன் அவரைப் பற்றிக் கேக்கிறாய்?"

"இல்ல அவருக்குப் பாரிசவாதம் எண்டது உண்மைதான். ஆனால் வீல் செயரில எங்கட கூட்டத்துக்கு வந்திருந்தவர் தெரியுமே.அவர் வழிகாட்டித் தானே நான் ஒரு இலக்கியக்காரனா வந்தனான். எங்களில எத்தனை பேர அவர் உருவாக்கியிருப்பார் சொல்லு பாப்பம் – அவரும் தமிழ் வாத்தியார் தானே மச்சான். அந்தாள் அறிவோட உணர்வோட ஊட்டின தமிழ் தானே எங்களைத் தலைநிமிரப் பண்ணினது. இல்லையெண்டு சொல்லு பாப்பம்" என்ற கோபியிடம் பதிலென்றுகூற மதிவண்ணன் என்ற தமிழாசிரியனிடம் எதுவும் இருக்கவில்லை.

கோபி சொல்லிப்போனதில் இருந்த உண்மை மதியின் மனத்தில் முள்ளாக உறுத்தத்தான் செய்தது. அவர்கள் மாணவர்களாக இருந்த காலத்தில் தமிழ் மன்றம் பாடசாலையில் இயங்கிய விதமும், தமிழ் ஆசிரியர்கள் மாணவர்களைக் கொண்டு உருவாக்கிய கையெழுத்துச் சஞ்சிகையை வெளியிட்டு வைத்து அதில் எழுதிய மாணவர்களைப் பாராட்டிக் கௌரவித்ததும் இப்போதும் மதிவண்ணனின் ஞாபகத்தில் பசுமையாக உள்ளது.

பாடத் திட்டத்தில் உள்ளதை மட்டும் படிப்பித்துவிட்டுப் பரீட்சைக்குத் தயார் செய்து விட்டு அடைவு மட்டத்துக்காகக் காத்திருக்கும் இன்றைய ஆசிரியர்கள் பலர் புத்தகம் வாசிக்கும் பழக்கமே அற்றவர்களாக ஆகிப் போய்க் கொண்டிருப்பது, அன்று பாரதியார் கூறிய – தமிழுக்கு மெல்லச் சாகும் நிலை இனித் தான் வரப் போகிறது என்பதைத் தான் காட்டுகிறதோ?

மூழ்கும் இலங்கைத் தீவு....

(04ஆம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கையும், கிழக்கையும் எப்படி இந்தியா தன் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்து விட்டதோ, அதேபோல தெற்கைத் தன் முழுக் கட்டுப்பாட்டுக்குள்ளும் கொண்டு வந்து விட்டது சீனா.

இலங்கையின் வரைபடத்தையே மாற்று மளவுக்கு சீனாவின் நேரடி ஆக்கிரமிப்பு அக லித்திருக்கிறது. அண்மையில் வெளியிடப் பட்ட இலங்கையின் வரைபடத்தில் காலி கடற்கரையில் 269 ஹெக்ரேயர் நிலம் புதிதாக உருவாக்கப்பட்டு வரைபடத்தோடு இணைக் கப்பட்டுள்ளது. காலி கடற்கரைப் பகுதியில் சீனா அமைத்து வரும் துறைமுக நகரத்துக் குத்தான் இவ்வளவு இடமும் ஒதுக்கப்பட்டி ருக்கிறது. இலங்கையின் இயற்கை அமைப் பையே சிதைத்து உருவாக்கப்பட்டிருக்கும் இந்தச் சீன நகரம் இந்தத் தீவை பீஜிங்கின் நேரடிக் காலனியின் கீழ் கொண்டு சென்றி ருப்பதாக ஆய்வாளர்கள் எச்சரித்திருக்கின்றனர்.

அதேபோலவே அம்பாந்தோட்டைத்துறை முகம் சீனாவின் நேரடி ஆளுகைக்குட்பட்டே அமைக்கப்பட்டிருக்கிறது. முன்னாள் ஜனாதி பதி மகிந்த ராஜபக்சவின் காலத்திலேயே இந்த இரண்டு பாரிய சீன ஆக்கிரமிப்புக்களும் நிகழ்ந்தேறின. தமிழர் விடுதலைப் போராட் டத்தை அழிக்கவும், அதன் பின்னர் பெருந் தெருக்களை அமைக்கவும் என சீன அரசாங் கத்திடம் மகிந்த பெற்றுக்கொண்ட கடனுக்கு பிரதியீடாகவே இந்த இரு இடங்களும் சீனா வுக்கு வழங்கப்பட்டன.

2015 ஆம் ஆண்டில் மேற்குச் சார்புடைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான புதிய அரசாங்கம் ஆட்சியைக் கைப்பற்றிய போதி லும், சீனாவின் ஆதிக்கத்திலிருந்து விடுபட முடியவில்லை. அம்பாந்தோட்டையில் 15,000 ஏக்கர் நிலத்தையும் துறைமுகத்தையும் 99 வருட குத்தகைக்கு வழங்கவேண்டிய இக்கட்டு நிலை உருவானது.

"ஒரு நாட்டை வளைப்பதற்கு வாளை விட கடனே சிறந்த ஆயுதம்" என்ற சீனப் பழமொழி தெற்கில் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது. நக்குண்டார் நாவிழந்தார் நிலையை உருவாக்க, அன்பளிப்பின்மேல் அன்பளிப்புக்களைக் கொட்டி ,வடக்கு, கிழக்கை தன்கட்டுக்குள் கொண்டு வந்திருக்கிறது இந்தியா.

தமிழர்களது ஆயுதப் போர் மௌனித்து 10 வருடங்களுக்குள் இவ்வளவு மாற்றங்களும் நிகழ்ந்திருக்கின்றன. இந்தத் தீவு தன் இறை மையை இழந்திருக்கிறது. இராஜதந்திரப் பாரம் பரியத்தை அழித்திருக்கிறது. தன் தலையில் தானே மண்ணையள்ளிக் கொட்டி மூழ்கிக் கொண்டிருக்கிறது. ■

5 சிறப்பு 5 பேர் ஆயிரம்

இது மாணவர்களுக்கானது

யாழ். நாவற்குழியில் அமைந்துள்ள திருவாசக அரண்மனையின் 5 சிறப்புகளைக் கூறுக?

விடைகளை அனுப்புவோர் கீழே உள்ள படிவத்தைப் பூர்த்தி செய்து பதிலுடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

- சரியான பதில் அனுப்பும் 5 பேருக்கு தலா ஆயிரம் ரூபா வீதம் பணப்பரிசில்.
- சரியான பதிலை அனுப்பும் மேலும் 10 பேருக்கு ஒரு மாதத்துக்கு எதிரொலி வாரமலர் இலவசமாக வழங்கப்படும்.
- சரியான பதில்களை அனுப்புவோர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர்.
- ஜூலை மாதம் 31 ஆம் திகதிக்குள் பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தலோடு பதில்கள் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

பெயர் - .....

தரம் - .....

பாடசாலை - .....

முகவரி - .....

.....

தொலைபேசி இலக்கம் - .....

அதிபரின் கையொப்பம் - .....

மறுபடியும் கொல்லப்பட்ட தென்னிந்தியாவின் தேவதை!

● ஜமுனா ராஜேந்திரன்

மர்லின் மன்றோ உலகின் தேவதை என்றால், சில்க் ஸ்மிதா தென்னிந்தியாவின் தேவதை. குழந்தையின் பேதைமையும், இளம்பெண்ணின் வளர்பருவக் குறுகுறுப்பையும், கள்ளமின்மையையும் இவர்களது புன்னகையிலும் உடல்மொழியிலும் பார்க்க முடியும். இவர்களது மொழியும் கொஞ்சுமொழிதான். மர்லின் மன்றோ உலக சினிமாவிலும், வெகுஜனக் கலாசாரத்திலும், இலக்கியத்திலும், அமரத்துவம் பெறுவதற்குக் காரணமாக ஆர்தர் மில்லரும் பொப் பாடகி மடோனாவும் இருந்தார்கள். துரதிர்ஷ்டவசமாகச் சில்க் ஸ்மிதாவுக்குக் காதலும் காமமும் குறித்த இயந்திர ரீதியான தமிழ்ப் பகுத்தறிவு இயக்குநர் வேலு பிரபாகரனும், பாலிவுட் இயக்குநர் மிலான் ருத்ரியாவும்தான் கிடைத்திருக்கிறார்கள்.

சில்க் ஸ்மிதாவின் வாழ்க்கையை அடியொற்றிய 'த டர்ட்டி பிக்சர்' எனும் ஹிந்திப்படம் (The Dirty Picture) ஹிந்தி, தெலுங்கு, தமிழ் மொழிகளில் ஆங்கிலத் துணைத் தலைப்புக்களோடு, சில்க் ஸ்மிதாவின் பிறந்த நாளான டிசெம்பர் மாதம் 2 ஆம் திகதி உலகெங்கிலும் வெளியானது.

1996 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 22 ஆம் திகதி அவருடைய சாலிக்கிராமம் வீட்டில் காற்றாடியில் தூக்கிட்டுத் தொங்கியபடி மரணமுற்றிருந்த சில்க் ஸ்மிதா தனது தாய்மொழியான தெலுங்கில் ஒரு மரணக் குறிப்பையும் விட்டுச் சென்றிருந்தார். வாழ்க்கையில் தோல்வியுற்றதால் விரக்தியுற்றுத் தான் தற்கொலை செய்துகொள்வதாக அந்த மரணக் குறிப்பு இருந்தது. என்றாலும் அவர் கொல்லப்பட்டிருக்கலாமா எனும் கேள்வி, இன்றளவிலும் கேள்வியாகவே அலைந்து கொண்டிருக்கிறது.

படம் பற்றிக் படக் குழுவினர் பத்திரிகைகளில் தம்மை வெளிப்படுத்திக் கொண்ட விதமும், படத்தின் திரைக் கதை அமைக்கப்பட்ட விதமும் சில்க் ஸ்மிதாவை இவர்கள் மறுபடி ஒரு முறை குரூரமாகக் கொலை செய்திருக்கிறார்கள் என்றே சொல்ல முடியும்.

ரேஷ்மா, சில்க், ஷகீலா என தமிழ்ச் சினிமாவில் உள்ள மூன்று நடிகைகளின் நிஜப்பெயர்களே இந்தத் திரைப்படத்தில் பயன்படுத்தப்பட்டது.

எந்த அதிகாரமும் அற்ற, அடிநிலையிலுள்ள கவர்ச்சி நடிகைகள் என்று சொல்லப்பட்ட பெண்களின் வாழ்வைப் பரிவுடனும் துயருடனும் பார்ப்பதாக இந்த டர்ட்டி பிக்சர் கோரிக் கொள்கிறதோ, அதே அடிநிலை நடிகைகளின் சொந்தப் பெயர்களை வைத்து அவர்களை மீளவும் கேவலப்படுத்தும் காரியத்தையே இந்தப் படமும் செய்திருக்கிறது. சில்க் ஸ்மிதாவின் வாழ்வை மறுபடி இந்தப்படம் அவமானப்படுத்தியிருக்கிறது.

இந்த மூன்று நேரடியான நடிகைகளின் பெயர்கள் தவிர இந்தப் படத்தில் வரும் அத்தனை தென்னிந்திய நடிகர்கள் மற்றும் இயக்குநர்கள் அனைவரதும் பெயர்கள் முற்றிலும் புனைப்பெயர்களாக வைக்கப்பட்டிருக்கிறன. ரஜினிகாந்த் போல சுதாநாயகன் நஸ்ருதீன் ஷா நடிக்கிறார் என வந்த ஒரு செய்திக்கு ரஜினி ரசிகர்கள் கொதித்தெழுந்தார்கள். ரேஷ்மா, ஸ்மிதா, ஷகீலா போன்றோரிடம் தம்மை இம்மாதிரி நேரடியாகப் பெயர் சொல்லிச் சித்தரிக்க வேண்டாம் எனச் சொல்லும் வலிமையும் இல்லை. அவர்களுக்கென வழக்குத் தொடுக்கிற அதிகாரம் அவர்களுக்கும் இல்லை. வெளிப்படையாகப் பாலுணர்வைக் குறைந்த பட்சமும் வெளிப்படுத்திக் கொள்ள முடியாத ஒரு சமூகச் சூழலில், பெண் உடல் பண்ட உற்பத்தியாக நுகரப்பட முன்வைக்கப்படுவது இலாபம் தரும் தொழில் எனும் கருத்து முனைப்புப் பெற்ற காலத்தில், குடும்ப அமைப்பைத் தாங்கும் கதாநாயகியர் பதிவிரதைகளாகச் சித்திரிக்கப்பட, நவீன வாழ்வுக்குள் நுழையும் பெண்கள் பரத்தைகளாகக் கருதப்பட்ட ஒரு சமூகச் சூழலில்தான் கவர்ச்சி நடிகைகள் தோன்றுகிறார்கள்.

ஆண்களின் உச்சக் கட்டப் பாவனைக்கு உள்ளாகும் பண்டம்போலத் தாம் திரையில் துதிக்கப்படுவதை அவர்கள் தமக்கு வாய்த்த அதிகாரமாகக் கருதிவிடுகிறார்கள். அது தற்காலிகம் என்பதனை அவர்கள் அறிவதில்லை. அது அறியவரும்போது அது அவர்களது அந்திம நேரமாக ஆகிவிடுகிறது.

எண்பதுகளின் மத்தியில் இருந்து இரண்டு பெரும் மாறுதல்கள் இந்திய சினிமாவில் நடந்தேறுகிறது. அதுவரையிலும் இழுத்துப் போர்த்தி நடித்த, நடிகைகள், அனைத்துவிதமான ஆடைக்குறைப்புக்கும் ஒப்புக்கொள்கிறனர். கதாநாயகியேகுத்துப்பாட்டுக்கு ஆடுகிறார். தனித்த குத்துப்பாட்டு நடிகைரின் வீழ்ச்சி

ஆரம்பமாகிறது. மலையாள மொழியில் இவர்களுக்கெனவே ஒரு சந்தை திறக்கிறது. அந்தச் சந்தை இந்தியா எங்கிலும் பரவுகிறது. இப்போது கவர்ச்சி நடிகைகள் முழுமையாக நீலப்படவகை நடிகைகளாக ஆகிறார்கள். இந்த நிஜம், பெண்களைத் தொடர்ந்து இந்திய சினிமா கீழ்மைப்படுத்தி வந்த நிஜம், த டர்ட்டி பிக்சரில் இல்லை.

த டர்ட்டி பிக்சரில் தன்னை நிலை நிறுத்திக் கொள்வதற்காக தனது பாலுறுவு அதிகாரத்தைக் காண்பித்து புகழின் உச்சியில் மேலே மேலே செல்லும் சில்க், அனைத்து ஆண்களையும் வெல்லும் சில்க், பிறிதொரு கவர்ச்சி நடிகையின் பிரவேசத்தினால் தனது வாய்ப்பை இழக்கிறார், தன்னை முன்னிறுத்தி சொந்தப்படம் எடுக்கிறார். கடன்படுகிறார். கடனுக்காக நீலப்படத்தில் நடிக்க வேண்டிய நிலைக்கு பலவந்தப்படுத்தப்படுகிறார். அதனால் அளவுக்கு அதிகமான தூக்க மாத்திரைகளை அருந்திவிட்டு, அடர்ந்த சிவப்பு நிறத்தில் பட்டுப்புடவையில் தன்னை அழகுபடுத்திக் கொண்டு, தனது இளமையையும் சோபையையும் இழந்த பெண்ணாகத் தற்கொலை செய்தபடி படுக்கையில் சாய்கிறாள் சில்க்.

இந்தப் படத்தை ஒரேயொரு வலிமையான காரணத்துக்காகத் திரைப்பட ரசிகர்கள் அனைவரும் பார்க்க வேண்டும் என நான் சொல்வேன். அது வித்யா பாலனின் அதி அற்புதமான நடிப்பு.

இந்திய சினிமா நடிகைகள் அடிக்கடி முன்வைக்கும் பதிவிரதை எனும் போலிப் பிம்பத்தை முற்றிலும் களைந்தெறிந்துவிட்டு, திரைவாழ்வையும் சொந்த வாழ்வையும் குழப்பிக் கொள்ளாத கலைமீதான தாகத்தினால், பெண்ணின் உடலை எந்த அளவுக்கு தடை கடந்து நகர்த்திச் செல்ல முடியுமோ, அந்த எல்லைகளை எல்லாம் கடந்து சென்று பாத்திரமாக வாழ்ந்திருக்கிறார் வித்யா பாலன். த டர்ட்டி பிக்சர் திரைப்பட ஆக்கதாரர்கள் கோரிக் கொள்கிற மாதிரி முழுமையடையாத திரைப்படம், சில்க் ஸ்மிதா குறித்த முழுமையடையாத பாத்திரச் சித்திரிப்பு கொண்ட படம் என்றாலும், வித்யா பாலன் எனும் பண்பட்ட நடிகைக்காக, அதுவும் இறுதிக் காட்சியில் தனது துக்கம் ஆழவோடிய கறுவளையம் விழுந்த கண்களில் மைதீட்டியபடி, தனது சோபையிழந்த முகத்தைக் கண்ணாடியில் பார்த்தபடி அழகுபடுத்திக் கொள்ளும் அந்த ஒரேயொரு காட்சிக்காகவாவது நீங்கள் த டர்ட்டி பிக்சர் திரைப்படத்தைப் பாருங்கள்.

இறுதிக் காட்சி நிஜத்தில் நம் நெஞ்சை அடைக்கவே செய்கிறது. அது சில்க் எனும் திசை தெரியாது தவித்த கள்ளமற்ற பறவைக்கான எமது துக்கம்.

நீண்ட நாட்களின் பின் ஒரு குடும்பச் சித்திரம்!

சுரேஷ் கண்ணன்

கூட்டுக் குடும்பம் என்னும் அமைப்பு எஞ்சியிருந்த 1960 மற்றும் 1970 களில் கே.எஸ்.கே.பாலகிருஷ்ணன், பீம்சிங் போன்றவர்களின் குடும்பத் திரைப்படங்கள் நிறைய வெளிவந்தன. அப்போதைய காலக்கட்டத்தை அவை பிரதிபலித்தன. ஆனந்தமாக இயங்கிக் கொண்டிருக்கும் ஒரு குடும்பத்தில் பல்வேறு சிக்கல்கள் நுழையும் பாத்திரங்கள் அல்லாடி, பிரிந்து, துயருற்று, தர்மம் வென்று இறுதியில் ஒன்றாக இணைவார்கள். சுபம் என்கிற வார்த்தை திரையில் மின்ன படம் நிறைவுறும். பார்வையாளர்கள் தங்களின் சொந்தப் பிரச்சினை தீர்ந்த ஆசுவாசத்தோடு கண்ணீரைத் துடைத்துக் கொண்டு அரங்கில் இருந்து வெளியேறுவார்கள்.

தனிக்குடும்பங்கள் பெருகி விட்ட சமகாலச் சூழலில் இவ்வாறான திரைப்படங்கள் வருவதில்லை என்பது காலத்தின் பிரதிபலிப்பே. பொருளாதாரக் காரணங்கள் உள்ளிட்ட ஒரு குழந்தை போதும் என்கிற சிந்தனை அதிகமாகி விட்டதால் அக்கா, அண்ணன், தம்பி, தங்கை போன்ற இரத்த உறவுகளின் சுகத்தைப் பற்றி இளைய தலைமுறை அறியக்கூடிய வாய்ப்பே யில்லை.கடைக்குட்டி சிங்கத்தின் மூலம் அப்படியொரு வாய்ப்பை திரையில் தந்திருக்கிறார் பாண்டிராஜ்.

உறவுகளினால் பலமும் உண்டு சில பலவீனங்களும் உண்டு. ஆனால் பலமே அதிகம் என்கிற ஆதாரமான செய்தியை அழுத்தம் திருத்தமாகப் பதிவு செய்துள்ளது இந்தத் திரைப்படம். சில தேய்வழக்குகளால் நிறைந்திருந்தாலும் இப்படியொரு குடும்பச் சித்திரத்தைப் பார்த்து எத்தனை நாட்களாகி விட்டது? நம் உயிருக்கு ஆதாரமான விடயமாக இருக்கும் விவசாயத்தை விட்டு விலகிச் செல்லும் சூழலில், அதன் அவசியத்தையும் படம் ஆங்காங்கே அழுத்தமாக நினைவுப்படுத்திச் செல்கிறது.

இப்படியொரு வாழ்க்கை முறையை இழந்து விட்டோமே என்று சமகாலத்தவர்களும் ஏங்கும் அளவுக்கு உறவுகளின் பலத்தையும் பலவீனத்தையும் துல்லியமாக சித்தரித்துள்ளார் பாண்டிராஜ்.

காற்று வெளியிடை போன்ற மேல் தட்டுப் பாத்திரமாக இருந்தாலும் சரி, இது போன்ற கிராமத்து ஆசாமியாக இருந்தாலும் சரி.. பெரிதான நெருடல் இல்லாமல் நச்சென்று பொருந்துகிறார் கார்த்தி. வேட்டியை மடித்து மீசையை முறுக்கிக் கொண்டு பாய்வதாகட்டும், ஒவ்வொரு அக்காவிடமும் சென்று பாசத்தைப் பொழிவதாகட்டும், பிறகு கோபித்துக் கொண்டு முறைத்து நிற்பதில் ஆகட்டும்.. அத்தனை இயல்பும் அழகும். குணசிங்கம் பாத்திரத்தை நிறைவாக கையாண்டுள்ளார் கார்த்தி. தோற்றத்தில் தமிழ்நாட்டுப் பெண்ணாக இல்லாவிட்டாலும், இந்தப் பாத்திரத்தில் கச்சிதமாகப் பொருத்தப்பட்டுள்ளார் சயீஷா.

படத்தின் தொடக்கத்தில் கார்த்தியின் உறவுகளை வரிசையாக அறிந்து கொள்ளவே மூச்சு வாங்குகிறது. அத்தனை உறவுகள். இது விவசாயத்தின் பெருமையைப் பற்றி சொல்லும் திரைப்படமோ என்று யோசித்துக் கொண்டிருக்கும் போதே பாதிப்படம் முடிந்து விடுகிறது. பிரச்சினையின் மையம் பிறகுதான் தொடங்குகிறது. இது திரைக்கதையின் ஒரு பலவீனம்.

சாகச நாயகர்களின் சண்டைப் படங்களும், நகைச் சுவைப் பேய் என்கிற அபத்தங்களும் நிறைந்திருக்கிற சமகால தமிழ் சினிமாவில், ஒரு குடும்பச் சித்திரத்தை உருவாக்கி கடந்த கால மறுமலர்ச்சியை மீண்டும் விதைத்துள்ளார் பாண்டிராஜ். நாடகத்தனமாகவும், மெல்லிய பிரசாரமாகவும் இருந்தாலும் அழிந்து கொண்டிருக்கும் கூட்டுக்குடும்பம் மற்றும் விவசாயம் ஆகியவற்றின் அருமையை ஆழமாக உணர்த்திய கடைக்குட்டி சிங்கம் நிச்சயம் நம்மைக் கவரும்.

ந.பரமேஸ்வரன்
parames35@gmail.com

(1505 முதல் 1948 வரையான யாழ்ப்பாணத்தின் வரலாற்றைக் கட்டுரையாளர் இங்கு தொடராகப் பதிவு செய்யவுள்ளார். இங்கு கூறப்பட்டுள்ள தகவல்கள் பெரும்பாலும் ஆங்கில மூலங்களில் இருந்து பெறப்பட்டவை. தகவல்களில் வேறுபாடு காணப்படும் சந்தர்ப்பங்களில் இரண்டு தகவல்களையும் இங்கு தரவுள்ளதாகவும், அவை தொடர்பில் தான் தீர்மானம் எதனையும் எடுக்கவில்லை எனவும் கட்டுரையாளர் தெரிவித்துள்ளார்.)

1544

மதம்மாறிய தனது பிரஜைகள் போர்த்துக்கேயருடன் இணைந்து தனக்கு எதிராகச் சதி செய்யக்கூடும் என எண்ணிய சங்கிலி மன்னன், 5 ஆயிரம் பேர் கொண்ட படையுடன் மன்னார் தீவினுள் நுழைந்து மதம் மாறிய அனைவரையும் கொன்றான்.இவ்வாறு கொல்லப்பட்ட வர்களுள் கிறிஸ்தவ மதத்தைத் தழுவிய சங்கிலியனின் மூத்தமகனும் அடக்கம். சங்கிலியால் கொல்லப்பட்ட வர்களின் எண்ணிக்கை 600-700 வரை இருக்குமெனக் கூறப்படுகிறது. 1544ஆம் ஆண்டு கார்த்திகை அல்லது மார்கழியில் இந்தச்சம்பவம் இடம் பெற்றதாக நம்பப்படுகிறது.

இதேவேளை சங்கிலியனின் இரண்டாவது மகன் கோவாவுக்குத் தப்பிச் சென்றதாகவும் கூறப்பட்டுள்ளது.

கடந்த வாரம் சங்கிலியன் போர்த்துக்கேயருக்கு திறை செலுத்துவதற்குச் சம்மதித்திருந்தாகக் குறிப்பிட்டு இருந்தேன். இதன்படி வருடாந்தம் நாலாயிரம் டாக்கா (Ducca) செலுத்துவதற்கு சங்கிலியன் சம்மதித்தாகக் கூறப்படுகிறது.

இந்தச் சம்பவம் நடைபெற்ற இடம் மன்னார்- தலை மன்னார் வீதியிலுள்ள தோட்ட வெளியாக இருக்கலா மென நம்பப்படுகிறது.

போர்த்துக்கேயர் இந்த இடத்தை Tataveli என அடையாளப்படுத்தி உள்ளனர். இவ்வாறு கொல்லப் பட்டவர்களின் பரம்பரையில் வந்தவர்களை மன்னார் கிறிஸ்தவர்கள் "வேதசாட்சிகள்" என அழைக்கின்றனர். சங்கிலியனால் கொல்லப்பட்டவர்களை நினைவு கூரும் வகையில் chain day என்ற பெயரில் நினைவு கூர்ந்தும் வருகின்றனர்.

மன்னாரில் கிறிஸ்தவர்கள் கொல்லப்பட்டதைக் கேள்விப்பட்ட புனித சவேரியார், கோவாவிலிருந்த போர்த்துகேய ஆளுநரைச் சங்கிலியன் மீது போர் தொடுக்குமாறு தூண்டினார். கூலிக்கு அமர்த்தப்பட்ட கூலிப்படை வீரர்களுடன் போர்த்துக்கேயப்படை நாக பட்டினத்தில் இருந்து புறப்படத் தயாரானது. அந்த நேரம் பார்த்து போர்த்துக்கல்லில் இருந்து கோவா நோக்கிப் புறப்பட்ட கப்பல் ஒன்று கடும் காற்றுக் காரணமாக யாழ்ப்பாணத்தில் தரை தட்டியது. சங்கிலி யன் அந்தக் கப்பலிலிருந்த பொருட்கள் அனைத்தையும் பறிமுதல் செய்தான். இதனால் போர்த்துக்கேயர் சங்கிலி மீது போர் தொடுக்கும் எண்ணத்தைத் தள்ளி வைத்தனர்.

1545

இந்தக்காலப்பகுதியில் கோட்டை இராச்சியம் கோட்டை, சீதாவாக்கை என இரண்டாகப் பிரிந்திருந்தது. கோட்டையை புவனேகபாகுவும் சீதாவாக்கையை மாயதுன்னையும் ஆட்சி செய்து வந்தனர். புவனேகபாகு போர்த்துக்கேய மேலாதிக்கத்தின் கீழ் கோட்டையை ஆண்டு வந்தான்.மாயதுன்னை போர்த்துக்கேயரை விரட்டும் நோக்குடன் கோட்டை மீது போர் தொடுப்ப தற்கு சங்கிலியனது உதவியை நாடினான்.

1547

1547ஆம் ஆண்டு ஜூலை மாதம் 10 ஆம் திகதி முஸ்லிம் வீரர்களும் தஞ்சாவூரிலிருந்து வந்த வீரர்களும் அடங்கிய சங்கிலியனின் படையும் மாயதுன்னையின் படையும் இணைந்து கோட்டை மீது தாக்குதல் தொடுத்தன. சங்கிலியன் படைகள் உக்கிரமாகப் போரிட் டுக் கோட்டையை நெருங்கியிருந்தன. ஆனாலும் பலத்த இழப்புகளுக்குப் பின் புவனேகபாகுவின் படைகள் , தம்மைச் சுதாகரித்துக் கொண்டு பதிலடியில் இறங்கி, சங்கிலி- மயதுன்னை கூட்டணியின் தாக்குதலை முறிய டித்தன.

(போர் தொடரும்)

பொலிஸ் வரும் கவனம்!

முதலிதான் தன்ரை கான் போனிலை அந்த அழகான காட்சியைக் காட்டினவன். புத்தூர் சோமஸ்கந்த கல்லூ ரியின்ரை மதில் வெளிச் சுவரிலை விளம்பரப் போஸ் டருகளை வரிசையா ஒரு இருபது முப்பது எண்டு ஒட்டித் தள்ளியிருக்கு. இதை ஒரு நல்லவன், சமூக அக்கறை உள்ள ஒருதன் தன்ரை முகநூல் பக்கத்திலை படம் பிடிச்சுப் போட்டுத் திட்டி இருக்கிறான். அந்தாள் திட்டினதிலையும் ஞாயம் இருக்கு. என்னெண்டு கேட்டியளே! ஒட்டுங்கோ, பரவாயில்லை. துலைவாரே ஒரு போஸ்டரைச் சனம் பாக்கிறமாதிரி ஒட்டுங்கோவன். இது அந்த வெள்ளை அடிச்ச மதில் சுவரிலை ஒரு இடத்தையும் மிச்சம் விடாமல் நீட்டுக்கு ஒட்டி வைச்சிருக்கிறியள் எல்லே!

ஏன்ரா நாதாரியளே, உங்களுக்கு உப்பிடி ஒரு விளம்பரம் தேவையா ?? ஒரு நோட்டீஸ் காணாதோ?. அந்த மதில் ஆற்றை மதில்? அது ஒரு பள்ளிக்கூட மதில். அதுக்கு வெள்ளை அடிக்கிறது எத்தினை கஸ்டம் எண்டு நோட்டீஸ் ஒட்டின குறுக்காலை போனதுக்குத் தெரியுமோ? அதுக்கு எத்தினை பேரிட்டை கும்பிட்டு மண்டாடி அனுமதி எடுக்க வேணும் எண்டது அந்தத் தலை இல்லாமல் பிறந்ததுக்குத் தெரியுமோ? அப்ப ஒட்ட முன்னம் ஒட்டினது கொஞ்சம் யோசிக்க வேணும். எங்கை ஒட்டுறம்? எதிலை ஒட்டுறம்? ஏன் ஒட்டுறம்? எண்டு. அப்பிடித்தான் அந்த நோட்டீஸை ஒட்ட மேல் வீடு இல்லாதது ஒண்டை அனுப்பிறியளெண்டால் அதுக்கு நாட்டு நடப்பைப் பற்றி ஒரு வகுப்பெடுத்துப் போட்டு அனுப்புங்கோ. அப்பிடி அனுப்பிப் போட்டும் போய் பாருங்கோ அது சரியாத் தன்ரை வேலையைச் செய்திருக்கோ எண்டு. அது உங்களுக்கும் நன்மை. ஏனெண்டால் உப்பிடித்தான் ஒருதனிட்டை நோட்டீஸையும் குடுத்துத் தண்ணி வெந்நிக் கும் காசைக் குடுத்து அனுப்பிப் போட்டு பாத்துக் கொண் டிருந்தவை. நிகழ்ச்சிக்கு ஆக்கள் வருவினம் எண்டு. வந்த சனம் குறைவு. ஏனெண்டு விசாரிச்சால் போஸ்டர் ஒட்டப் போனவன் இரண்டொரு இடத்திலை கொண்டு போய்

ஒட்டிப்போட்டு மிச்சத்தைக் மாட்டுக் கொட்டிலுக்கை போட்டு வைக்கலாலை மூடிப்போட்டுப் போட்டான்.

ஆனால் உப்பிடியான பிரச்சினை வரேக்கை அந்தந்த ஆக்கள் அந்த நோட்டீஸிலை இருக்கிற பேர் விலாசத்தோடை தொடர்பு கொண்டு விசயத்தைச் சொல்ல வேணும். இப்பதானே பிரதேச சபை, நகரசபை, பட்டின சபை எண்டு தெரிஞ்சுவிட்டிருக்கு. அவையிட்டையாவது போய்ச் சொல்லுங்கோவன். ஆனால் அதை இப்பிடிப் பாதிக்கப்பட்ட ஆக்கள்தான் போய் சொல்ல வேணுமெண்டதில்லை. பொதுக்காரியத்திலை அக்கறை உள்ள ஆரும் போய் சொல்லலாம்.

உப்பிடித்தான் ஆடியபாதம் வீதியிலை கொக்குவிலிலை இருந்து போகேக்கை ரெயில் றோட்டுக்குப் போக முன்னம் ஒரு தேத்தண்ணிக்கடையை வெளி நாட்டிலை குப்பை கொட்டிப்போட்டு வந்த ஒண்டு நடத்திது. சைனீஸ் கடை எண்டு பேர் வைச்சுக் கொண்டு சைவம், மச்சம் எண்டு எல்லாத்தையும் விக்கிது. வித்திட்டுப் போகட்டும். ஆனால் அந்தக் குப்பை செய்யிற குப்பை வேலை என்னெண்டால் காலமை பல்லுத்தீட்டிப் போட்டுப் போடுற பாட்டைத் திருவிழாக்காறர் போட்ட மாதிரி சரியான சவுண்டிலை போட்டு இராத்திரி வரைக்கும் நிப்பாட்டுறேல்லை. அந்த றோட்டாலை போற வாற சனத்துக்கே கேட்டால் காது கிழியிதெண்டால் அந்தக் கடையைச் சுத்தி இருக்கிற சனம் என்ன பாடு படும் எண்டு நினைக்கிறியள். தான் தேத்தண்ணிக் கடை நடத்திறாராம், பாட்டுப் போட்டால்தான் சனம் வருமாம். உதென்ன பொறுப்பில்லாத கதை. நீ வெளிநாட்டிலை என்னென்ன குப்பை கொட்டினியோ தெரியாது. இஞ்சை வந்து குப்பை வேலை செய்யிறாய். அக்கம் பக்கத்திலை இருக்கிற பிள்ளையள் சோதினைக்குப் படிக்கிறேல்லையோ? வருத்த துன்பத்தோடை இருக்கிற சனம் சீவிக்கிறேல்லையோ? ஆக நீதான் பெரிய மனுசன். நீ நினைச்ச மாதிரிச் செய்துபோட்டுப் போக. தம்பிக்குத் தெரியாது கடையும், வீடு வளவும் உந்தப் பாட்டுப் பெட்டியந்தான் உன்ரை. சூழல் பொதுசனத்தின்ரை. ஆனபடியால் சூழலை பாட்டுப் போட்டு மாசு படுத்தாமல் நல்ல பிள்ளையா இரப்பு. என்ன? இல்லாட்டி உதைச் சனம் கோப்பாய் பொலிஸுக்கும், நல்லூர் பிரதேச சபைக்கும் எழுதிப்போட்டால் அவை வந்து அள்ளிக் கொண்டு போவிடுவினம், கண்டியோ?

● வில்லங்கம் விநாசி

Hurry up!
only last 10 units Available

GLORIOUS RESIDENCIES

www.gloriousresidencies.com
glorious.residencies

From 15 Million

A Limited Collection of Unlimited Luxury Experience at Colombo 12

availble penthahouses

076 822 5060
076 822 5062
076 822 5063

- Covered car park for each unit
- Space for jogging and relaxing
- State of the art gym facility
- Adults & kids swimming pool
- 2 Car lift
- Roof top garden
- Roof top BBQ area
- CCTV Security system
- Bank
- Office spaces
- 2 Passenger lift
- Children play area
- Conference hall
- Mini super market
- Food court

BOI Approved Project. PINNACLE ICC A&D DFCC BANK Keep Growing

214, Srimath Bandaranayake Mawatha, Colombo 12, Sri Lanka.
T : 011 4 325 259 | F : 011 2 330 958 | E : sales@gloriousresidencies.com

மெயின் வீதியில்
அட்டகாசமான ஆடிக்காத்து

ராம் பிரதர்ஸ் இல்

AADI SALE

அனைத்து விதமான ஆடைகளுக்கும்

50% வரை ஆடித் தள்ளுப்படி

ஜூலை 16 முதல் ஆகஸ்ட் 16 வரை

ராம் பிரதர்ஸ்

140, மெயின் வீதி, கொழும்பு -11. தொலைபேசி : 2320127, 2447698

எதிரொலியின் ஓராண்டு நிறைவையொட்டி அகில இலங்கை ரீதியில்
பாடசாலை அணிகளுக்கு இடையிலான

'எதிரொலியின் சொற்கணை-2018'
மாபெரும் விவாதப் போட்டி

தொடுங்கள் சொற்கணையை!

வெல்லுங்கள் பரிசுகளை!!!

விண்ணப்ப முடிவுத் திகதி:
31-07-2018

முதற் பரிசு 1,00,000/=

போட்டியில் பங்கு கொள்ள என்ன நிபந்தனைகள்?

- இலங்கையில் உள்ள சகல பாடசாலைகளும் இதில் பங்கு கொள்ளலாம்.
- ஒரு பாடசாலையில் இருந்து ஓர் அணி மாத்திரமே பங்கு கொள்ளலாம்.
- ஓர் அணியில் மூவர் மட்டுமே விவாதிக்க முடியும். இருவர் மேலதிகமாக அணிக்குள் உள்ளடக்கப்படலாம்
- அணிப்பட்டியலில் உள்ளவர்கள் மாத்திரமே போட்டியில் பங்கேற்க முடியும்
- அணி விபரம் பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்பட்டு அனுப்படல் வேண்டும்
- போட்டிகள் யாவும் செப்ரெம்பர் மாதம் நடைபெறும்.
- விவாதத் தலைப்புகள் போட்டி இடம்பெறுவதற்கு முன்னதாக, போட்டி நடைபெறுமிடத்தில் வைத்தே வழங்கப்படும்.
- பங்குகொள்ளும் சகலருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.
- முதல் மூன்று இடங்களைப் பெறும் அணியினருக்கு பதக்கங்களும், பணப்பரிசில்களும்.
- விண்ணப்பங்களை தபாலிலோ, நேரிலோ கையளிக்கலாம்.

மேலதிக தகவலுக்கும் தொடர்புக்கும்

'எதிரொலியின் சொற்கணை-2018'
அம்பலம் பதிப்பகம், இல. 241, கைதடி – மானிப்பாய் வீதி, உடுவில், யாழ்ப்பாணம்.
ethirolimedia@gmail.com, 0212243818

இப்பத்திரிகை மானிப்பாய் வீதி, உடுவில் என்ற முகவரியிலுள்ள அம்பலம் பதிப்பகத்தால், 5-ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 25.07.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.